பக்கங்கள்: இருபது

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2040 கார்த்திகை 29 செவ்வாய்க்கிழமை (15.12.2009) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 01

# சர்வதேச யுத்தக் குற்ற விசாரணைக்கு பொன்சேகாவை சாட்சியாக்க முயற்சி

## நாட்டுக்குத் துரோகம் இழைப்பதாக விமல் வீரவன்ஸ சீற்றம்



கொழும்பு, டிசம்பர் 15

**இலங்கை அரசு மீது யுத்தக்குற்ற விசாரணையை நடத்துவதற்கு வசதியாக ஜெனரல் சரத் பொன்சேகாவை சாட்சியாகப் பயன்படுத்தும் சதித்திட்டத்தில் சர்வதேச நாடுகள் இறங்கியுள்ளன என்று தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும்.எம்.பியுமான விமல் வீரவன்ஸ நேற்றுக் குற்றம் சுமத்தினார்.**

யுத்த வெற்றியைக் காட்டிக்கொடுத்து சர்வதேச நாடுகளின் கைப் பொம்மையாக சரத் பொன்சேகா மாறி, இந் நாட்டுக்குத் துரோகமிழைக்கின்றார் என்றும் அவர் சீறினார்.

பத்ரமுல்லையில் உள்ள தேசிய சுதந்திர முன்னணியின் தலைமையகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார். அவர் அங்கு தொடர்ந்து கூறியவை வருமாறு:-

(20ஆம் பக்கம் பார்க்க)

## பொன்சேகா மீது நடவடிக்கையாம்

கொழும்பு, டிசெ.15

முன்னாள் இராணுவத் தளபதியும் எதிர்க்கட்சிகளின் பொதுவேட்பாளருமான ஜெனரல் சரத் பொன்சேகா இராணுவத் தின் நடவடிக்கைகள் பற்றித் தெரிவித்த கருத்துகளுக்காக அவர் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்போவதாக அரசு அறிவித் துள்ளது.

யுத்தத்தின்போது , பாதுகாப்புப் படையை நோக்கி சரணடைவதற்காக வந்த புலிகளின் தலைவர்களைக் கொல்லுமாறு கோத்தபாயவே அனுமதி வழங்கியிருந்தார் என சரத் பொன்சேகா தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக சட்டமா அதிபரிடம்

(20ஆம் பக்கம் பார்க்க)

## அம்பாறையில் வைரஸ்தொற்று; முதலாவது மரணம் பதிவு

அம்பாறை, டிசெ.15

அம்பாறையில் வைரஸ்தொற்றிய ஒருவர் மரணமான சம்பவம் முதற்தடவையாகப் பதிவாகியுள்ளது.

ஒன்பது வயதுடைய சிறுவனே இந்த நோயால் பீடிக்கப்பட்டு மரணமானார் என அம்பாறை மாவட்ட பொது வைத்தியசாலை அதிகாரி ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

எ.எச்1.என்1 வைரஸ் தொற்றிய இச் சிறுவன் இரண்டு வாரங்களாக அம்பாறை பொது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் அங்கு அவரது உயிர் பிரிந்தது என்று வைத்தியசாலை அதிகாரி மேலும் தெரிவித்தார்.

## யுத்த காலத்தின்போது அரங்கேறிய சம்பவங்களுக்கு நானே பொறுப்பு

### மரபுகள் மீறப்படவில்லை என்கிறார் சரத் பொன்சேகா

கொழும்பு, டிசெ.15

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் நடைபெற்று முடிந்த யுத்தத்தின் போது இடம்பெற்ற சகல சம்பவங்களுக்கும் இராணுவப் படைத் தளபதி என்ற ரீதியில் தாம் பொறுப்பேற்கிறார் - என்று எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளர் ஜெனரல் சரத் பொன்சேகா குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பில் நேற்றைய தினம் நடைபெற்ற விசேட ஊடகவியலாளர் மாநாடொன்றில் கலந்து கொண்டபோதே அவர் இதனைக் கூறினார்.

யுத்தம் இடம்பெற்ற காலப்பகுதியில் உயர் இராணுவ அதிகாரிகள் முதல் கடைநிலை சிப்பாய்கள் வரையில் மேற்கொண்ட சகல நடவடிக்கைகளுக்குமான பொறுப்பைத் தாம் ஏற்றுக்கொள்கிறார் என அவர் தெரிவித்தார்.

எந்தவொரு சந்தர்ப்பத்திலும் யுத்த மரபுகள் மீறப்படவில்லை எனவும், சர்வ

(20ஆம் பக்கம் பார்க்க)

## மஹிந்தவையும் அவர் அதிகாரிகளையும் சர்வதேச நீதிமன்றத்தின் முன் நிறுத்துக

### கனடா தமிழ் காங்கிரஸ் உலக நாடுகளிடம் கோரிக்கை

கொழும்பு, டிசெ. 15

இலங்கை இராணுவத்தின் முன்னாள் தளபதியே யுத்தக் குற்றங்கள் இடம்பெற்றமையை ஏற்றுக்கொண்டுள்ளதால் அதனை அடிப்படையாக வைத்து, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவையும், அவரது அதிகாரிகளையும், மனித குலத்திற்கு எதிரான குற்றங்களுக்காக சர்வதேச சமூகம் விசாரிக்கவேண்டும் என்று கனடாவின் தமிழ்க் காங்கிரஸ் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது குறித்து அந்த அமைப்பின் பேச்சாளர் டேவிட் பூபாலபிள்ளை இந்தோ ஆசிய செய்திச் சேவைக்குத் தெரிவித்துள்ளவை வருமாறு:- (20ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.தே.கவின் கிழக்கு மாகாணசபை உறுப்பினரின் வீடு மீது குண்டுவீச்சு

கொழும்பு, டிசெ. 15

ஐக்கிய தேசியக் கட்சியின் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் ஏ.சசிதரனின் மட்டக்களப்பிலுள்ள வீட்டின் மீது கைக்குண்டு தாக்குதல் நடத்தப்பட் டுள் ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்றுமுன்தினம் இரவு அவரது வீட்டின் மீது எறியப்பட்ட கைக்குண்டு அதற்கு

(20ஆம் பக்கம் பார்க்க)

## திருகோணமலைக் கரையோரப் பகுதியில் வீடுகளுக்குள் புகுந்தது கடல்நீர்!

### நேற்றிரவு அப்பகுதி மக்கள் பதற்றம்

திருகோணமலை,டிசெ.15

திருகோணமலை 10 ஆம் குறிச்சிக் கரையோரப் பகுதியில் உள்ள வீடுகளுக்குள் நேற்றிரவு 7.15 மணியளவில் கடல்நீர் புகுந்ததால் மக்கள் பெரும் பதற்ற மடைந்து அல்லோலகல்லப்பட்டனர்.

கடற்கரையோரமாக உள்ள வீடுகளுக்குள்

(20ஆம் பக்கம் பார்க்க)

## புயல் அபாயம் நீங்கினாலும் விடாது மழை பெய்யும் சாத்தியம்

### கடல்கொந்தளிப்புக் குறித்து மீனவருக்கு எச்சரிக்கை

கொழும்பு,டிசெ.15

திருகோணமலைக்கு கிழக்கே 250 கிலோமீற்றர் தொலைவில் மையம் கொண்டிருந்த 'வார்ட்' (WARD) புயல் காற்று வலுவிழந்து தாழமுக்கமாக மாறியுள்ளது.

இதன் காரணமாக வடக்கில் இடியுடன் கூடிய மழை அடுத்த 36 மணியத்தியாலங்கள்

(20ஆம் பக்கம் பார்க்க)

வேறெங்கும் கிடையாத அளவுக்கு......
நம்ப முடியாத சலுகைகளும்,
அதிரடி விலைக்கழிவும்
VISA MasterCard
கடனட்டை வசதிகளுடன்
MUSIC WORLD
THE LEADING IT SUPPER MARKET IN JAFFNA
தெரிவும், தீர்மானமும் உங்களது வசதிகளுக்கேற்ப
MW System 01 FREE Rs.37,000/=
MW System 02 FREE Rs.42,500/=
MW System 03 FREE Rs.48,500/=
MW System 04 FREE Rs.49,000/=
MW System 05 FREE Rs.55,500/=
MW System 06 FREE Rs.58,000/=
141B,Palaly Road, Thirunelvely, Jaffna. musicworld@dialognet.lk / musicworld@sltnet.lk - 021 222 6554

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அதிநவீன 'ராடர்' பொருத்தப்பட்ட இலங்கை மீனவரின் படகு சிக்கியது!

## புதுச்சேரியில் மடக்கியதாக இந்தியத் தரப்பில் தெரிவிப்பு

சென்னை, டிச. 15

புதுச்சேரிக் கடற்பரப்பில் அதிநவீன தொலைத்தொடர்புச் சாதனங்களுடன் இலங்கை மீன்பிடிப் படகொன்றைத் தாம் கைப்பற்றியுள்ளனர் எனத் தெரிவித்துள்ள இந்திய அதிகாரிகள், இவ்வாறான படகுகள் இந்தியக் கரையோரப் பாதுகாப்பிற்கு ஆபத்தானவை என்றும் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக மேலும் தெரிவிக்கப் படுபவை வருமாறு:-

புதுச்சேரிக் கடலோரப் பகுதியில் ஐந்து இலங்கை மீனவர்களுடன் கைப்பற்றப்பட்ட நவீன மீன்பிடிப் படகில் 'ராடர்' உட்பட சக்திவாய்ந்த தொலைத்தொடர்புச் சாதனங்கள் காணப்பட்டன.

புதுச்சேரியிலிருந்து 35 மைல் தொலைவில் இந்தியக் கடற்பரப்பில் மீன்பிடித்துக் கொண்டிருந்த குறிப்பிட்ட படகை இந்தியக் கரையோரக் காவற்படையின் 'விக்ரம்' கப்பல் நெருங்கியவேளை, குறிப்பிட்ட படகு தப்பிச்செல்ல முயன்றது என இந்திய மத்திய புலனாய்வு அமைப்புகள் தெரிவித்துள்ளன.

மோசமான காலநிலைக்கு மத்தியிலும் குறிப்பிட்ட படகைத் துரத்திச் சென்ற இந்தியக் காவற்படையினர் அதனைக் கைப்பற்றியுள்ளனர்.

இந்தியப் பொருளாதார வலயத்தில் அனுமதியின்றி நுழைந்தமை மற்றும் இந்தியக் கடல் பகுதிச் சட்டத்தை மீறியமை ஆகியவற்றுக்காகப் பிடிக்கப்பட்ட இந்தப் படகை அதிகாரிகள் விசாரணைக்காகச் சென்னைப் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

இந்திய எல்லைக் காவற்படையினரை சில தினங்களுக்கு முன்னர் பணயக் கைதிகளாகப் பிடித்த இலங்கை மீனவர்களின் படகு போலவே காணப்படும் இந்தப் படகில் நவீன ராடர், சர்வதேச அளவில் தொடர்பு கொள்ளக்கூடிய திறன்வாய்ந்த தொலைத்தொடர்புச் சாதனங்கள், ஒரு மாதத்திற்கான எரிபொருள் போன்றவை காணப்பட்டன எனத் தெரிவித்துள்ள அதிகாரிகள், இவ்வாறான படகொன்று இந்திய கடல் பகுதியில் காணப்படுவது இந்தியாவின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலான விடயம் எனச் சுட்டிக்காட்டியுள்ளனர்.

கடந்த ஆறு மாதங்களில் 60 இலங்கை மீன் பிடிப் படகுகளைத் தாங்கள் கைப்பற்றியுள்ளனர் என்று இந்திய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

(அ-சி)

## 14 ஆம் ஆண்டு நினைவலைகள்



செல்லையா பொன்னுத்துரை

பிறப்பு 15.11.1919 — இறப்பு 22.11.1995

அன்பிற்கும் பண்பிற்கும்
இலக்கணமானவரே!
பாரினில் ஊரார் போற்ற வாழ்ந்த
உத்தமனே!

என்றும் உங்கள் நினைவில்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

ஒட்டுமடம்,
யாழ்ப்பாணம். (91463)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



அமரர் இளையதம்பி
ஜெயராஜசிங்கம் (ஜெயா)

தோற்றம் 24.01.1955 — மறைவு 15.11.2009

*திதி: ஐப்பசி சதுர்த்தசி*

கடந்த 15.11.2009 அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத்தலைவன் அமரர் இளையதம்பி ஜெயராஜசிங்கம் அவர்களின் அந்தியேட்டிக்கிரியை இன்று 15.12.2009 செவ்வாய்க்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*(தனிப்பட்ட அழைப்பாக இதனை ஏற்றுக்கொள்ளவும்)*

இல.06,கன்னாதிட்டி ஒழுங்கை,
யாழ்ப்பாணம். (91466)

தகவல்:
குடும்பத்தினர்.

## துயர் பகிர்கிறோம்

ஊர்காவற்துறை ஆதார வைத்தியசாலை தாதிய உத்தியோகத்தர்
திருமதி ஜெயராஜசிங்கம் அவர்களது கணவர்

### திரு. இளையதம்பி ஜெயராஜசிங்கம்

கடந்த 15.11.2009 அன்று இறைபதம் எய்திய செய்தி கேட்டு ஆழ்ந்த துயரடைவதுடன் அன்னாரது பிரிவினால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவர்களது துயரில் நாமும் பங்கு எடுத்துக்கொள்கின்றோம்.

சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை,
ஊர்காவற்றுறை. (91461)

உத்தியோகத்தர்களும்,
ஊழியர்களும்.

## மரண அறிவித்தல்

### பூபாலசிங்கம் குலராஜசிங்கம்

(ஓய்வுபெற்ற களஞ்சியப் பொறுப்பாளர், நீர்வேலி ப.நோ.கூ. சங்கம்)



கோப்பாய் வடக்கைப் பிறப்பிடமாகவும் கோப்பாய் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட பூபாலசிங்கம் குலராஜசிங்கம் 11.12.2009 வெள்ளிக்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சாமுவேல் வேதமாணிக்கம் பூபாலசிங்கம் மற்றும் கிரேஸ் நல்லரத்தினம் தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான டானியல் சதாசீவன், பியற்றிஸ் நவமலர் ஆகியோரின்அன்பு மருமகனும், ரூத் வசந்தமலரின் அன்புக் கணவரும், ஷேலி தர்ஷிக்கா (Teacher,SJC), கேஷன் டிரேன் (SJC), கரலின் வெரோனிக்கா (3rd year, Facultly of Science, University of Jaffna) ஆகியோரின் அன்புத் தந்தையும், தர்மகுலசிங்கம்,காலஞ்சென்ற செகராஜசிங்கம் மற்றும் தயாநிதி (Canada), கிருபாநிதி (Canada), வசந்தாநிதி (Switzerland), ஆகியோரின் சகோதரனும், சாந்தா,ரெரன்ஸ் மோகன், குலேந்திரன், வின்சன்ட் சோமசுந்தரம், பாலச்சந்திரன், பாலகுமார், சந்திரமலர், தேவகுமார், ஹரிச்சந்திரன் ஆகியோரின் மைத்துனரும் கிரிசானி, நிரோஜன், சுரேன், ஜனார்த்தன் ஆகியோரின் பெரிய தந்தையும், நிரூபினா, ஜெரு, ஸ்விந், ஜெசு, ஜோயல் ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை அவரின் இல்லத்தில் நாளை (16.12.2009) புதன்கிழமை பி.ப. 3 மணிக்கு நடைபெற்று பூதவுடல் நல்லடக்கத்திற்காக பரிகன்னி மரியாள் ஆலய சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**Near V.C Office, Kopay South,**
**Kopay. T.P.- 0213215406** (91465)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

## 6ஆம் மாத நினைவஞ்சலி

அமரர் மகேந்திரன் சசீந்திரன்



மண் உலகில் 13.10.1984

விண் உலகில் 22.06.2009

*திதி:சதுர்த்தசி 15.12.2009*

உன் கதை பேச்சால் எதிரியைக் கூட
உன் வசமாக்குவாய் சசீ-அன்று
உன் உயிரைக் குடிக்க வந்தவனின்
உள்ளம் அறியாததுதான் ஏனோ?
உன் உயிரைத் துச்சமென எண்ணி
உயிர்த் தோழனுடன்-உற்ற
உறவுகளை மறந்து-நீ
உயிர் நீத்ததுதான் ஏனோ? இதுதான்
சசியின் வாழ்க்கை என்பதா?
விதியின் வேட்கை என்பதா?
சதியின் சேர்க்கை என்பதா?
6மோதம் சென்றதடா மகனே-உன்னால்
நாம் சிந்தும் கண்ணீர் வற்றவில்லையடா
பலகோடி உறவுகள் இருந்தென்ன மகனே
நீ பிரிந்த இடை வெளியை யார்தான் நிரப்புவாரோ!

இல:31,கே.கே.எஸ் வீதி,
கொக்குவில். (91462)

அம்மா, அப்பா,
சகோதரர்கள்.

## யாழ்ப்பாணம் மாநகரசபை

## கூறுவிலை கோரல்

கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஜிம்னாஸ்ரிக் (உடல்வலுவூட்டல்) உபகரணங்களை வழங்கக்கூடிய வழங்குநர்களிடமிருந்து கூறுவிலை கோரப்படுகிறது.

கூறுவிலைப்படிவம் வழங்கல் கடைசித் திகதி: 2009.12.24 பி.ப. 2 மணி
கூறுவிலைப்படிவம் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி: 2009.12.28 நண்பகல் 12 மணி
கூறுவிலைப்படிவம் திறந்து பரிசீலிக்கும் திகதி: 2009.12.28 பி.ப. 2 மணி

பூரணப்படுத்தப்பட்ட கூறுவிலைப்படிவங்கள் யாவும் அரக்கு முத்திரை இடப்பட்டு கடித உறையில் வைக்கப்பட்டு 'முதல்வர்' மாநகரசபை, யாழ்ப்பாணம் என முகவரி இடப் பட்டு கூறுவிலைகள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித்திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத்தபாலில் அனுப்பிவைக்கப்படல் வேண்டும். அல்லது அதற்கென முதல்வர் அலுவலகத்தில் வைக்கப் பட்டுள்ள கூறுவிலைப் பெட்டியினுள் இடப்படல் வேண்டும்.

கூறுவிலைப் பத்திரத்தை கொண்ட கடித உறையின் மேல்மூலையில் ''ஜிம்னாஸ்ரிக் உபகரணங்களுக்கான கூறுவிலை'' என பெயர் குறிப்பிடப்படல் வேண்டும். கூறுவிலைப் பத்திரங்களை மாநகரசபை வேலைப்பகுதி அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். மேலதிக தகவல்களுக்கு அலுவலக நேரத்தில் வேலைப்பகுதியுடன் தொடர்புகளை ஏற்படுத்தி அறிந்துகொள்ளலாம்.

*குறிப்பு: இந்த உபகரணங்களை துரையப்பா விளையாட்டு மைதானத்தில் இதற்கெனக் கட்டப்பட்ட கட்டடத்திற்கு வழங்கி பொருத்தி ஒப்படைத்தல் வேண்டும்.*

மாநகரசபை, யாழ்ப்பாணம். முதல்வர்.

| Items | Description of Equipment | Qty | Refundable Deposite | Non Refundable Deposite |
|---|---|---|---|---|
| No 1 | Commercial Gym 04 Station "HSHUA" (made in USA) or equal | 01 No | | |
| No 2 | Plate Rack (ESER model or equal) | 01 No | | |
| No 3 | Plastic dumbbells (2 Kg, 5 Kg) | 01 No | | |
| No 4 | TF - 310/Weight bench (Heavy) (ESER model or equal) | 01 No | | |
| No 5 | Squat Rack (ESER model or equal) | 01 No | | |
| No 6 | BSB - 510/SIT up Bench with 3kg Dumbbell ( ESER model or equal) | 01 No | | |
| No 7 | Weight - Plates(10kg. 7.5kg. 5kg. 2.5kg.1.25kg) | 01 No | 10,000/= | 1,000/= |
| No 8 | Weight - Bars(6ft,5.5ft,5ft,3ft, Cur/bar 4ft) | 01 No | | |
| No 9 | HX-852B Electrical Tread Mill (2Hp/speed 0.8-12Km/h) (ESER model or equal) | 01 No | | |
| No 10 | Treadmill manual (ESER model or equal) | 01 No | | |
| No 11 | Weight lifting cloves & Belts | 01 No | | |
| No 12 | Punching Bag & Cloves | 01 No | | |
| No 13 | 18kg (39.6LB) Combination dumbell set | 01 No | | |
| No 14 | Orbitrack (ESER model or equal) | 01 No | | |
| No 15 | Weight lifting mats | 01 No | | |
| No 16 | Weight lifting Bars | 01 No | | |
| No 17 | Weight lifting Discs (20kg,15kg, 10kg,7.5kg) | 01 No | | |

**Mayor,**
**Municipal Council, Jaffna.**

## அடகுப் பொருள்கள் ஏலவிற்பனைக்கான அறிவித்தல்

ஹற்றன் நஷனல் வங்கி, யாழ்ப்பாணம், சுன்னாகம், நெல்லியடி, ஸ்ரான்லி வீதி, மானிப்பாய் ஆகிய கிளைகளில் 10.10.2008 இற்கு முன்னர் அடகு வைத்து இதுவரை மீட்கப்படாத, காலாவதித் திகதியை நீடிக்க ஆவன செய்யாத வாடிக்கையாளரின் அடகுநகைகள் 19.12.2009 சனிக்கிழமை காலை 9 மணிக்கு இலக்கம் 212, 214 ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள யாழ். கிளையில் ஏலத்தில் விடப்படும் என்பதை அறியத்தருகின்றோம்.

உங்களின் பெறுமதி மிக்க பொருள்களை உடனே மீட்க முடியாவிட்டால் .....

* கடனுக்குரிய வட்டியையும் கடனின் ஒரு பகுதியையும் (ரூபா.500) செலுத்தி
அல்லது
* தற்போதைய சந்தைப் பெறுமதிக்கும் அதிகரித்த கடன் தொகைக்கும் ஏற்ப உங்கள் அடகுப் பொருள்களை மீள அடகு வைத்து காலாவதித் திகதியை நீடித்துக் கொள்ளலாம்.

**ஏல விற்பனைத் திகதியினை பிற்போடும் மற்றும் ஏலத்தினை இரத்துச் செய்யும் உரிமை வங்கிக்கு உண்டு.**

- ஹற்றன் நஷனல் வங்கி -

(சி/563264)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# உயர் பாதுகாப்பு வலய விடயத்தில் பொன்சேகாவின் நிலை என்ன?

யுத்தம் முடிவடைந்த பின்னரும் பாதுகாப்பு வலயங்கள் எதற்கு என்ற ஒரு கேள்வியை வெளிப்படையாக எழுப்பியிருக்கின்றார் ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவரும் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன்.

''புலிகளின் பீரங்கித் தாக்குதலில் இருந்து இராணுவ முகாம்களைப் பாதுகாப்பதற்காகவே பாதுகாப்பு வலயங்கள் உருவாக்கப்பட்டன. இப்போது புலிகளும் இல்லை. அவர்களின் பீரங்கிகளும் இல்லை. ஆகவே, அதியுயர் பாதுகாப்பு வலயங்களுக்கான தேவை எதுவும் இல்லை. எனவே, கட்டம் கட்டமாக இந்தப் பாதுகாப்பு வலயங்களை நீக்கி, அப்பகுதி மக்கள் தத்தமது பாரம்பரிய இடங்களில் மீளக் குடியேற வழிசமைத்துக் கொடுக்கவேண்டும்.'' - இப்படி மனோ கணேசன் மேலும் கோரியிருக்கின்றார்.

யாழ்.குடாநாட்டில் வலிகாமம் வடக்கிலிருந்து பலவந்தமாக இடம்பெயர வைக்கப்பட்ட பல லட்சம் மக்கள் சுமார் இருபது ஆண்டுகளுக்கு மேலாக நலன்புரி மையங்கள் என்ற பெயரில் இயங்கும் முகாம்களிலும், உறவினர் வீடுகளிலும், பொது இடங்களிலும் தங்கி இன்னும் அந்தரிக்கின்றார்கள்.

வலிகாமம் வடக்கு உட்பட யாழ்.குடாநாட்டில் சுமார் முப்பது வீத நிலப்பகுதியை - குடாநாட்டு மக்களின் பூர்வீகப் பூமியை - இந்த உயர்பாதுகாப்பு வலயம் என்ற இராட்சதன் விழுங்கி ஏப்பம்விட்டு நிற்கின்றான்.

கிழக்கில் திருகோணமலை மாவட்டத்தில் மூதூர், சம்பூர் போன்ற பகுதிகளும் இதே உயர் பாதுகாப்பு வலய ஆக்கிரமிப்புக்குள் சிக்குண்டு போய்க் கிடக்கின்றன. அந்தப் பிரதேசத்தில் காலங்காலமாய் வாழ்ந்த மக்களும் இடம்பெயர்ந்து அவதிப்படும் கொடுமை தொடர்கின்றது.

அரசுப் படைகள் கடந்த வருடமும், இந்த வருடமும் வன்னி பெருநிலப்பரப்பில் புலிகளிடமிருந்து கைப்பற்றிய பிரதேசங்களிலும் பரவலாக உயர்பாதுகாப்பு வலயப் பிரதேசங்கள் என்ற பெயரில் விஸ்தீரணமான பரப்புகள் புதிதாகக் கையகப்படுத்தப்பட்டிருக்கின்றன என்ற தகவலும் வெளியாகியிருக்கின்றது.

வன்னியில் இடம்பெயர்ந்து அவலப்படும் பல்லாயிரம் தமிழர்கள் மீளக்குடியமர்த்தப்படுவது எவ்வளவு முக்கியமோ, அவ்வளவு முக்கியமானது ஏனைய பிரதேசங்களில் உயர் பாதுகாப்பு வலய ஆக்கிரமிப்புக் காரணமாக சொந்த இடங்களிலிருந்து விரட்டியடிக்கப்பட்டு பல வருடங்களாக அவலப்படும் தமிழ் மக்கள் மீள்குடியமர்வதுமாகும்.

இதேசமயம், இந்த உயர் பாதுகாப்பு வலயம் குறித்த விவகாரத்தில் இன்னொரு முக்கிய விடயமும் உண்டு. அதனை விலக்குவதை இப்போது வலியுறுத்தும் மனோகணேசன் எம்பி., எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் எதிர்க்கட்சிகளின் சார்பில் பொது வேட்பாளராகக் களமிறங்கியிருக்கும் முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் சரத் பொன்சேகாவுக்காவுக்காகத் தமிழ் மக்கள் மத்தியில் வெளிப்படையாகப் பிரசாரம் செய்து வருகின்றார்.

மனோ கணேசன் இன்று நீக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தும் உயர்பாதுகாப்பு வலயங்களுக்கும், இன்று அவர் யாருக்காகப் பிரசாரம் செய்கிறாரோ அவருக்கும் (ஜெனரல் சரத் பொன்சேகாவுக்கும்) நேரடியாக சம்பந்தம் ஒன்று உண்டு.

அதனை இச்சந்தர்ப்பத்தில் நோக்குவது மிக முக்கியமானதாகும்.

ரணில் விக்கிரமசிங்கவின் அரசுக்கும் விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கும் இடையில் 2002 - 2003 ஆம் ஆண்டுகளில் நடந்த சமாதானப் பேச்சுத் தொடரின் இரண்டாவது சுற்றில் - 2002 ஒக்டோபர் 31 முதல் நவம்பர் 3 வரை பாங்கொக் நகரில் நடந்த பேச்சின்போது - இரு தரப்பும் சேர்ந்து மூன்று உபகுழுக்களை அமைத்தன. அதில் ஒன்று - 'போர் நெருக்கடியைத் தணித்து, இயல்பு நிலையை உருவாக்கும் உபகுழு'ஆகும்.

இந்த உபகுழுவின் பிரதான பணிகளுள் ஒன்றாக உயர்பாதுகாப்பு வலயங்களைச் சுருக்கி, அப்பிரதேசங்களில் மக்கள் மீள்குடியமர்வுக்கான வாய்புகளை ஆராய்வதாகும்.

இந்த உபகுழுவின் இரண்டாவது சந்திப்பு 2002 டிசெம்பர் 14 ஆம் திகதி யாழ். குடாநாட்டின் தென் எல்லையில் - அப்போது இரு தரப்பினருக்கும் இடையில் யுத்த சூனியப் பகுதியாகக் கருதப்பட்ட - முகமாலையில் சுமார் ஏழு மணி நேரம் நடைபெற்றது. அங்கு, யாழ். குடாநாட்டில் உயர்பாதுகாப்பு வலயப் பிரதேசத்தில் மக்களின் குடியமர்வுக்கு அனுமதிப்பது தொடர்பான அறிக்கை ஒன்றை டிசம்பர் 21 ஆம் திகதியில் தாம் சமர்ப்பிப்பார் என அப்போதைய யாழ் இராணுவத் தளபதியாக இருந்த இதே ஜெனரல் சரத் பொன்சேகா அறிவித்தார். அதன்படி அவரின் அறிக்கை பின்னர் புலிகளிடம் சமர்ப்பிக்கப்பட்டது.

''உயர் பாதுகாப்பு வலயப் பகுதியில் மக்களை மீள்குடியமர அனுமதிப்பதானால் புலிப் பயங்கரவாதிகள் தமது ஆயுதங்களைக் களைவதோடு, தமது நீள்தூர சுடுகலன்களைப் படையினரிடம் கையளிக்கவேண்டும்.'' - என்ற நிபந்தனையுடன், பகை உணர்வோடு, மிகக் காரமான வார்த்தைப் பிரயோகத்துடன் அந்த அறிக்கை அமைந்தது. உயர் பாதுகாப்பு வலய விவகாரத்தால் இடம்பெயர்ந்த மக்களின் பிரச்சினை தீர்க்கப்பட்டால், அது புலிகளுக்கு நற்பெயரை ஏற்படுத்திவிடும் என அந்த அறிக்கையில் ஆதங்கம் தெரிவித்த ஜெனரல் பொன்சேகா, அந்நிலைமை புலிகளுக்குப் பெரும் அரசியல் வெற்றியாக முடியும், அரசியல் சூழ்நிலை புலிகளுக்கு சாதகமாகிவிடும் என்றெல்லாம் படுமோசமாக விமர்சித்திருந்தார்.

- இப்படி யாழ். குடாநாட்டின் கணிசமான மக்களின் ஜீவாதாரப் பிரச்சினையில் பொன்சேகா காட்டிய அதிதீவிரக் கடும்போக்கு அந்த உபகுழு அத்துடன் செயலிழந்து செத்துப் போகவும், அந்த சமாதான முயற்சியே இறுதியில் முறிந்து போகவும் முழுக் காரணமாயிற்று.

ஜெனரல் பொன்சேகா எதனை எதிர்நோக்கி அப்போது காய் நகர்த்தினாரோ அதுவே அவர் எதிர்பார்த்தபடி கடைசியில் நடந்தேறியது. சமாதான முயற்சி முறிந்தது; கொடூரப்போர் வெடித்தது; ஈவிரக்கமற்ற யுத்தத்தின் மூலம் தமிழர் தாயகம் சூறையாடப்பட்டது.

சரி. முடிந்தவை முடிந்துவிட்டன. இப்போது அதே தமிழ் மக்களிடம் - குறிப்பாக உயர் பாதுகாப்பு வலயங்கள் காரணமாக வீடு, வாசல்களை இழந்து நீண்ட பல வருடங்களாக அந்தரிக்கும் தமிழ்மக்களிடம் - சரத் பொன்சேகா வாக்குப் பிச்சை கேட்கும் நிலைமை.

இன்றைய நிலைமையில் இந்த உயர் பாதுகாப்பு வலயம் குறித்து அவரின் தற்போதைய கருத்து என்ன? அவரையும் ஆதரித்து, உயர் பாதுகாப்பு வலயத்தை விலக்குமாறும் வற்புறுத்தும் மனோ கணேசன் எம்.பி. இதனை ஜெனரல் பொன்சேகாவிடம் கேட்டுத் தமிழ்மக்களுக்குக் கூறினால் நல்லது!

# காங்கேசன்துறைமுகத்தை 10 கோடி ரூபா செலவில் விரைவில் புனர்நிர்மாணம் செய்யத் திட்டம்

## நாட்டின் பிரதான வர்த்தகத் துறைமுகங்களில் ஒன்றாக மாற்றப்படுமாம்

கொழும்பு, டிசெ.15

காங்கேசன்துறை துறைமுகத்தைப் பத்துக் கோடி ரூபா செலவில் புனரமைப்புச் செய்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவிருக்கின்றன.

நாட்டின் கடற்போக்குவரத்துக்களைச் சீரமைக்கும் திட்டத்தில் காங்கேசன் துறைமுக அபிவிருத்தியும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

காங்கேசன்துறை துறைமுகப் புனரமைப்பு வேலைகள் கடற்படையினரால் முன்னெடுக்கப்படும் என்று தகவல் ஒன்று கூறுகின்றது. இது வரை காலமும் காங்கேசன்துறை துறைமுகம் பெரும்பாலும் இராணுவப் பணிகளுக்கே பயன்படுத்தி வரப்பட்டுள்ளது. தற்பொழுது நாட்டில் அமைதி நிலை கொண்டு வருவதால் துறைமுகத்தைப் பொதுவான நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தமுடியும் என்ற நிலை ஏற்பட்டுள்ளது.

புனரமைப்பு வேலைகள் விரைவில் ஆரம்பிக்கப்படவிருப்பதாகவும், இறங்குதுறைகள் நவீனப்படுத்தப்படும் என்றும் துறைமுகப் படுகை ஆழப்படுத்தப்படும் என்றும் தகவல்கள் கூறுகின்றன.

துறைமுகத்துக்கான பாதைகளும் புனரமைக்கப்படவிருப்பதோடு காங்கேசன்துறை துறைமுகத்தை வர்த்தகத் துறைமுகமாக அபிவிருத்தி செய்வதற்கான திட்டங்களும் உருவாக்கப்பட்டு வருவதாகத் தெரியவருகின்றது.

நாட்டின் நவீன வர்த்தகத் துறைமுகங்களில் ஒன்றாக காங்கேசன் துறைமுகம் விரைவில் செயற்படவிருப்பதாக துறைமுக மற்றும் விமானத்துறை அமைச்சர் சமல் ராஜபக்ஷ கூறியிருக்கிறார்.

எதிர்காலத்தில் காங்கேசன்துறை துறைமுகம் பிரயாணிகளையும், சரக்குகளையும் ஏற்றிஇறக்கும் பிரதான துறைமுகங்களில் ஒன்றாக விளங்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. மேலும் வடக்கில் விளையும் பொருள்களைச் சுலபமாக ஏனைய துறைமுகங்களுக்குக் கொண்டு செல்லும் வசதிகளைக் கொண்ட துறைமுகமாகவும் இது அபிவிருத்தி செய்யப்படவிருக்கிறது. (ப)

# ஜனாதிபதித் தேர்தல் பணிக்கு 8,400 அரச ஊழியர் விண்ணப்பம்

யாழ்ப்பாணம், டிசெ.15

ஜனாதிபதித் தேர்தலின்போது யாழ். தேர்தல் தொகுதியில் அமைக்கப்படவுள்ள வாக்களிப்பு நிலையங்களில் கடமை புரிவதற்கு இதுவரை 8 ஆயிரத்து 400 பேர் விண்ணப்பித்துள்ளனர்.

யாழ்.மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் எஸ்.சுதாகரன் இத்தகவலை உதயனுக்குத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

அடுத்த மாதம் 26 ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ளது. இத்தேர்தலின்போது யாழ்.தேர்தல் தொகுதியில் 624 வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன.

இவ்வாறு அமைக்கப்படவுள்ள வாக்களிப்பு நிலையங்களில் தேர்தல் தினத்தன்று கடமைபுரிவதற்கு அரச அலுவலர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டன.

இதன் பிரகாரம் 8 ஆயிரத்து 400 பேர் விண்ணப்பித்துள்ளனர். கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்கள் யாவும் தற்போது பரிசீலனை செய்யப்பட்டு வருகின்றன.

ஜனாதிபதித் தேர்தல் தினத்தன்று வாக்களிப்பு நிலையங்களில் கடமையாற்றுவதற்கு மட்டும் 624 சிரேஷ்ட தலைமை மேற்பார்வையாளர் உட்பட 6 ஆயிரத்து 300 பேர் கடமைக்கு நியமிக்கப்படவுள்ளனர்-என்றார் அவர். (1-9)

# புற்றுநோய் சிகிச்சைக்குப் புதிய கட்டடம்; நிதி ஒதுக்கீடு செய்ய சுகாதார அமைசசர் உறுதி

யாழ்ப்பாணம், டிசெ.15

யாழ்.போதனா வைத்தியசாலையில் இயங்கும் புற்றுநோய் சிகிச்சைப் பிரிவுக்கு மற்றுமொரு புதிய கட்டடம் அமைப்பதற்கான நிதி ஒதுக்கப்படும். இத்தகவலை சுகாதார அமைச்சர் நிமால் ஸ்ரீபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

கட்டடம் அமைப்பதற்கான திட்டவரைவினை சுகாதார அமைச்சுக்கு அனுப்பிவைக்குமாறும் அவர் கேட்டுள்ளார்.

கடந்த சனிக்கிழமை யாழ். போதனா வைத்தியசாலைக்கு விஜயம் செய்த சுகாதார அமைச்சர் நிமால் ஸ்ரீபால டி சில்வா வைத்தியசாலையின் அபிவிருத்தி குறித்துக் கலந்துரையாடினார்.

இந்தக் கலந்துரையாடலின்போது யாழ்.போதனா வைத்தியசாலையில் இயங்கும் புற்றுநோய் சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெறுகின்றவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதனால் இடநெருக்கடி ஏற்படுகின்றது.

அதனை நிவர்த்தி செய்யும் முகமாகப் புற்றுநோய் பிரிவுக்கு மற்றுமொரு கட்டடம் அமைக்கப்பட வேண்டும் என்று அமைச்சரிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

இந்த வேண்டுகோளினை ஏற்றுக்கொண்ட சுகாதார அமைச்சர் புற்றுநோய்ச் சிகிச்சைப் பிரிவுக்கு மற்றுமொரு கட்டடம் அமைப்பதற்கு நிதி ஒதுக் கீடு செய்து தருவதாக உறுதியளித்தார்.

அந்தக் கட்டடத்துக்கான திட்டவரைவினை உடனடியாக சுகாதார அமைச்சுக்கு அனுப்பிவைக்குமாறும் அமைச்சர் கேட்டுள்ளார்.

இதேவேளை புற்றுநோயாளர் பிரிவுக்கான இந்தப் புதிய கட்டடம் பெரும்பாலும் யாழ்.பண்ணைப் பகுதியில் அமைப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (1-9)

# இடம்பெயர்ந்த 747 பேர் வாக்களிக்க விண்ணப்பம்

யாழ்ப்பாணம், டிசெ.15

ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிப்பதற்கு இடம்பெயர்ந்த வாக்காளர்களில் இதுவரை 747 பேர் விண்ணப்பித்துள்ளனர்.

யாழ்.மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் எஸ்.சுதாகரன் இத்தகவலைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிப்பதற்கு இடம்பெயர்ந்த வாக்காளர்கள் தமது விண்ணப்பங்களை அனுப்பிவைக்குமாறு அறிவுறுத்தப்பட்டிருந்தது.

இடம்பெயர்ந்த வாக்காளர்கள் தற்போது வசிக்கும் இடங்களில் வாக்களிப்பதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதன் பிரகாரம் இடம்பெயர்ந்த வாக்காளர்களில் இதுவரை 747 பேர் தமது விண்ணப்பங்களை அனுப்பி வைத்துள்ளனர்.

இராமாவில் நலன்புரிநிலையத்திலிருந்து 624 பேரும், கைதடி நலன்புரிநிலையத்திலிருந்து 120 பேரும், நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் இருந்து மூன்று பேரும் விண்ணப்பித்துள்ளனர்-என்றார்.

இடம்பெயர்ந்த வாக்காளர்கள் விண்ணப்பிப்பதற்கான இறுதித் திகதி நாளை மறுதினம் வியாழக்கிழமை 17ஆம் திகதி ஆகும். (1-9)

# கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களின் பிறப்பு, இறப்புப் பதிவுகள் கணனிமயமாகின்றன

யாழ்ப்பாணம், டிசெ.15

கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த பொதுமக்களின் பிறப்பு, இறப்பு மற்றும் காணிப் பதிவுகள் யாவும் கணனி மயப்படுத்தப்பட்டு வருகின்றன.

இத்தகவலை யாழ்.மாவட்டப் பதிவாளர் திணைக்களத்தின் அதிகாரியொருவர் உதயனுக்குத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் இடம்பெற்ற யுத்த அனர்த்தம் காரணமாகப் பொதுமக்கள் தமது பிறப்பு, இறப்பு மற்றும் காணிப்பதிவுகள் போன்ற ஆவணங்களைத் தவற விட்டுள்ளனர்.

இத்தகைய நிலையினைக் கருத்திற்கொண்டு கொழும்பு மாளிகாவத்தையில் உள்ள மத்திய பதிவகத் தினால் பிறப்பு, இறப்பு மற்றும் ஏனைய பதிவுகள் கணனிமயப்படுத்தப்பட்டு வருகின்றன.

இவ்வாறு கணனி மயப்படுத்தப்பட்டு வருகின்ற விவரங்களைப் பெற விரும்புகின்ற மக்கள் விண்ணப்பங்களைச் சமர்ப்பித்துச் சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

அத்துடன் முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களைச் சேர்ந்த பொதுமக்கள் மீள்குடியேற்றப்பட்டவுடன் செயலகங்கள் தத்தமது இடங் களில் இயங்குகின்றபோது அங்கும் கணனி மயப்படுத்தப்பட்ட முறையில் பதிவுகள் பேணி வைக்கப்படும்.

இதன்மூலம் பொதுமக்கள் தமக்குத் தேவையான ஆவணங்களை உடனடியாக கணனிப் பிரதியாகப் பெற்றுக்கொள்ள வசதியாக இருக்கும் - என்றார் அவர். (1-9)

# நாளை

| | |
|---|---|
| மார்கழி 01 | 16.12.2009 |
| | புதன்கிழமை |
| திதி: | அமாவாசை |
| | மாலை 05.53 வரை |
| நட்சத்திரம்: | கேட்டை |
| | [illegible] 04.58 வரை |
| [illegible] | 04.52-06.22 வரை |
| ராகுகாலம்: | 12.22-01.52 வரை |

# வலைப்பந்தாட்ட மத்தியஸ்தர் செயல்முறைப் பரீட்சை

யாழ்ப்பாணம், டிசெ.15

அகில இலங்கை வலைப்பந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத்தின் அனுசரணையுடன் யாழ்.மாவட்ட வலைப்பந்தாட்ட மத்தியஸ்தர் சங்கம் நடத்திய வலைப்பந்தாட்ட மத்தியஸ்தர்களுக்கான எழுத்துப் பரீட்சையில் சித்தி பெற்றவர்களுக்கான செயல்முறைப் பரீட்சை நாளையும், நாளை மறுதினமும் கொழும்பு விளையாட்டு அமைச்சு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்தப் பரீட்சை பிற்போடப்படவில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது.

'சி' பிரிவினருக்கான செயல் முறைப் பரீட்சை நாளை காலை 8 மணி முதல் நண்பகல் 12 மணி வரையும், 'பி' பிரிவினருக்கான செயல் முறைப் பரீட்சை நாளை மறுதினம் காலை 8 மணிமுதல் பிற்பகல் 4 மணிவரையும் நடைபெறும் என யாழ்.மாவட்ட வலைப்பந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத் தலைவர் திருமதி ஏ.எவ்.ஜே.ரூபசிங்கம் அறிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# UNIVERSITY OF JAFFNA, SRI LANKA.

**MEDIA RESOURCE & TRAINING CENTRE (MRTC), FACULTY OF ARTS**

The Media Resource and Training Centre is **a joint venture** of the University of Jaffna and the Institute of Further Education (FOJO), Sweden.

Applications are invited from suitable candidates for the following posts in the Media Resource and Training Centre, University of Jaffna upto 15th January 2010.

**1. Post of Course Coordinator/Trainer of trainees (On Contract)**

***Qualifications :***

i. A Degree of a recognized University and a Master degree in Journalism

ii. At least **six years experience** in one or more of the followings;

a. Teaching /conducting courses in training of Trainers at University Level

b. Professional experience

c. Research in a recognized Institution

***Salary:*** **Rs.40,000/- (All inclusive and fixed per month)**

*Selection by interview*

**2. Post of Trainer in Journalism (On Contract)**

***Qualifications:***

i. A Degree from a recognized University

ii. Should have completed a course in Training of Trainers in Journalism

iii. Possesses minimum of one year experience in print or electronic media or both

**Salary: Rs.20,750/- (All inclusive and fixed per month)**

*Selection by interview*

***General Conditions :***

This is a full-time assignment and initially it is for a period of one year from the date of commencement of the assignment. However, the assignment is renewable if the services rendered and work performance during the tenure of assignment is satisfactory.

The appointee will become a contributor to the Employees Provident Fund (EPF). Media Resources and Training Centre will contribute the EPF and the Employees Trust Fund,

Application forms and other details may be obtained from the office of **the Senior Assistant Registrar/ Academic Establishments,** University of Jaffna, Sri-Lanka, either in person or by post, on a payment of Rs.100/- per application form. Those who wish to obtain application forms by post are requested to send a Money Order/Postal Order drawn in favour of the Bursar, University of Jaffna together with a self - addressed stamped envelope 23x10 c.m. in size.

Applications for the above posts shall be sent to the **Senior Assistant Registrar/Academic Establishments, University of Jaffna.**

Applicants from the University System/Government Departments / Corporations and Statutory Board should channel their applications through the Head of the respective Institutions. Incomplete, illegible applications and applications received after the closing date will be rejected without intimation.

14.12.2009 (C/563266) Registrar



# UNIVERSITY OF JAFFNA, SRI LANKA.

University of Jaffna will entertain applications up to 4th January 2010 from suitably qualified persons for the under mentioned **posts on contract basis.**

**Faculty of Arts**

*Assistant Lecturer / Tutor*

Anthropology / Archeology / Christian Civilization / Drama &Theatre Arts / Economics / Education / English Literature / Fine Arts (Art History) / Geography / Hindu Civilization/ Hindu Philosophy / History / Law / Linguistics / Museum Studies / Planning / Philosophy / Psychology / Political Science / Sociology / Sanskrit/ Tamil / Media Studies.

*Assistant Lecturer / Instructor*

Art & Design / Dance (Bharathanatiyam / Kathakali) / Music (Vocal /Miruthangam Pannisai / Violin/Veena)/ Home Economics.

* Note: Candidates awaiting the results of the final degree examinations may also apply

**Salary:**

Assistant Lecturer Rs.25,125/- per month fixed
Tutor/Instructor Rs. 20,755/- per month fixed

* In addition to the above salary, the allowances approved by the University Grants Commission will also be paid.

Application forms and other details may be obtained from the office of the Senior Assistant Registrar/ Academic Establishments, University of Jaffna, Sri Lanka, either in person or by post, on a payment of Rs.100/= per application form. Those who wish to obtain application forms by post are requested to send a Money Order/Postal Order drawn in favour of the **Bursar, University of Jaffna** together with a self -addressed stamped envelope 23X10 c.m. in size.

Applications for the above posts should be sent to the Senior Assistant Registrar/ Academic Establishments, University of Jaffna.

Applicants from the University System/Government Departments / Corporations and Statutory Board should channel their applications through the ,Head of the respective Institutions. Illegible, incomplete and late applications will be rejected without intimation. Only short listed applicants will be called for interview.

14.12.2009 (C/563267) Registrar


## முதியவரின் கண்ணை பதம்பார்த்த மாடு

யாழ்ப்பாணம்,டிசெ.15

ஒரு கண் பார்வையற்ற ஒருவரின் மற்றக் கண்ணையும் மாடு கொம்பினால் குத்திக் காயப்படுத்தியது.

நேற்றுமுன்தினம் மட்டுவிலில் இடம் பெற்ற இச்சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த க.செல்வராசா (வயது 60) என்பவர் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, மேலதிக சிசிக்சைக்காக யாழ். ஆஸ்பத்திரிக்கு மாற்றப்பட்டார்.

மாட்டுக்குத் தண்ணீர் வைத்துக் கொண்டிருந்த வேளையில் இந்த அனர்த்தம் நேர்ந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

(ஒ-207)

## மினி பஸ் சேவை திடீரென நிறுத்தப்பட்டதால் தென்மராட்சிப் பயணிகள் அவதி

யாழ்ப்பாணம்,டிசெ.15

தென்மராட்சி தனியார் சிற்றூர்திச் சேவைகள் சங்கத்தினரால் நடத்தப்பட்ட சில மினிபஸ் சேவைகள் திடீரென நிறுத்தப்பட்டதால் மக்கள் பெரும் அவதிக்கு ஆளாகியுள்ளனர்.

கொடிகாமத்தில் இருந்து வரணி, கச்சாய், கெற்பெலி ஆகிய இடங்கள் ஊடாக நடத்தப்பட்ட மினிபஸ் சேவைகள் கடந்த நான்கு நாள்களாக நிறுத்தப்பட்டுள்ளன என்றும், இதனால் மக்கள் சைக்கிள்களிலும் கால்நடையாகவும் பயணம் செய்து வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

சாவகச்சேரி வைத்தியசாலைக்கு நோயாளர்கள் பெரும் சிரமப்பட்டே அப்பகுதிகளில் இருந்து சிகிச்சைக்கு வந்து சேர்வதாகவும் கூறப்பட்டது. (ஒ-207)

## மீள் குடியமர்வு கொடுப்பனவு பலருக்கு இன்னும் கிடைக்கவில்லையாம்

யாழ்ப்பாணம்,டிசெ.15

யாழ்.மாவட்ட நலன்புரி நிலையங்களிலிருந்து விடுவிக்கப்பட்ட பல குடும்பங்களுக்கு மீளக்குடியமர்வுக் கொடுப்பனவு ரூபா 5 ஆயிரம் இதுவரை வழங்கப்படவில்லையெனத் தெரிவிக்கப்பட்டது.

நலன்புரி நிலையங்களிலிருந்து சொந்த மற்றும் உறவினர்களின் குடியிருப்புகளுக்கு சென்று ஆறு மாதங்களுக்கு மேலாகியும் இக்கொடுப்பனவு வழங்கப்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டது.

(ஒ-1-207)

## மீள் குடியேறியோருக்கு கூரைத் தகடுகள்

கோப்பாய்,டிசெ.15

கோப்பாய் பிரதேச செயலகப் பிரிவில் மீளக்குடியமர்ந்தோரில் பலருக்குக் கூரைத் தகடுகள் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மாவட்டச் செயலகத்தால் 1,300 கூரைத்தகடுகள் வழங்கப்பட்டுள்ளதாகவும், இவற்றை அதிக குடும்ப உறுப்பினர்கள் உள்ள மற்றும் சிறிய பிள்ளைகள் உள்ள குடும்பத்தினருக்கு முன்னுரிமை அடிப்படையில் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சுமார் 10-12 வரையான கூரைத் தகடுகள் 33 குடும்பத்தினருக்கு வழங்கப்படவுள்ளன.

தற்போது கோப்பாய் பிரதேசத்தில் மக்கள் வெளியேறி பராமரிப்பின்றி இருந்த பல வீடுகள் மக்களின் மீள்வருகையை அடுத்து குடியேறியதைத் தொடர்ந்து நல்ல முறையில் தற்போது பேணப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

(1-72)

## கொழும்பு - இத்தாலி நேரடி விமான சேவை

கொழும்பு,டிசெ.15

கொழும்பில் இருந்து இத்தாலிக்கான நேரடி விமானசேவை நாளை புதன்கிழமை முதல் ஆரம்பிக்கப்படவுள்ளதாக ஸ்ரீலங்கா விமான சேவை நிறுவனம் தெரிவித்தது.

வாரத்தில் இரு தினங்கள் புதிய விமான சேவைகள்நடைபெறவுள்ளன.

(ஒ-207)


**இறைச்சிக் கோழி தேவை**

புறொயிலர், கல்பேட்ஸ், ஊர்ச்சாவல்கள் [illegible]
கொள்வனவு செய்யப்படும்.
தொடர்பு : [illegible], 61, [illegible] வீதி,
[illegible] கோவிலடி. தொ. பே: 0217912783



**தெல்லிப்பளை பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் (வ.து)**

**வருடாந்த பொதுக் கூட்ட அறிவித்தல்**

எமது சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் எதிர்வரும் 20.12.2009 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு வலி.வடக்கு பிரதேச செயலகக் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது. சகல பொதுச்சபைப்பிரதிநிதிகளுக்கும் நிகழ்ச்சி நிரலும், அதிகார கடிதமும் அனுப்பிவைக்கப்பட்டது. அறிவித்தல் கிடைக்காதவர்கள் இந்த அறிவித்தலை தனித்தனி அறிவித்தலாக ஏற்றுக்கொள்ளவும்.

செயலாளர்
(சி/563271) தெல்லி. ப. நோ. கூ. சங்கம்



**கண்ணீர் அஞ்சலி**

எமது மன்ற உறுப்பினர்

**பாலசிங்கம் பிரபாத்**

(உரிமையாளர் - நியு பரம்ஸ் சங்கமம்)

அவர்கள் 13.12.2009 இல் காலமானார் அன்னாரின் மறைவுக்கு மன்றம் தனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறது.

சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றம்.

(சி/563270)


# மரண அறிவித்தல்கள்

## திருமதி சசிகரன் சியாமளா

அல்வாயைப் பிறப்பிடமாகவும், மாலிசந்தி, தம்பி ஓடையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சசிகரன் சியாமளா நேற்று (14.12.2009) திங்கட்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் திரு. திருமதி சிவராஜாவின் அன்பு மகளும், சசிகரனின் அன்பு மனைவியும், சுஜாதா (கொலண்ட்), சுபாஜினி, சுஜிதா, சுஜீவன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், தெய்வேந்திரன், லோகநாதன் ஆகியோரின் மைத்துனியும், கோபி, அஜந்தன், பிறிஸ்கில்லா, அபிநயா, அபிஷாயினி, அக்ஷாயினி ஆகியோரின் அன்ரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தம்பிஓடை,*
*மாலிசந்தி, அல்வாய்.*

*தகவல் :*
செ.அ.ஞானச்சந்திரன்
(மாமா)

(563275)

## நவரத்தினம் செல்வநாயகி

(மாப்பாண வீதி, காரைநகர்)

காரைநகர், மாப்பாண வீதியைப் பிறப்பிடமாகவும், பிள்ளையார் கோவிலடி, சித்தன்கேணியை வசிப்பிடமாகவும் கொண்ட நவரத்தினம் செல்வநாயகி நேற்று (14.12.2009) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா நவரத்தினத்தின் அன்பு மனைவியும், இராஜேஸ்வரி, சுசிலா, தயானந்தன் (லண்டன்), ராதா, சர்வானந்தன் (கிராம அலுவலர்) ஆகியோரின் அன்புத் தாயாரும், ஈஸ்வரன் (மருந்தாளர், மாவட்ட வைத்தியசாலை, ஊர்காவற்றுறை), சூரியகுமாரி (கனடா), விஜயகுமார் (லங்கா சிமென்ற் லிமிடெட்), கமலகுமாரி, விக்னேஸ்வரன் (சீமெந்துக் கூட்டுத்தாபனம்) ஆகியோரின் மாமியாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.12.2009) செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வழுக்கையாறு மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பிள்ளையார் கோவிலடி,*
*சித்தன்கேணி.*

*தகவல் :*
ந. சர்வானந்தன்
(கிராம அலுவலர், சங்கானை தெற்கு)

(563275)

## சுப்பையா முருகேசு (பெரிய அரசடி)

(ஓய்வுபெற்ற ஆசிரியர்)



சாவகச்சேரி வடக்கைப் பிறப்பிடமாகவும், பிரான்ஸை வதிவிடமாகவும் கொண்ட சுப்பையா முருகேசு 13.12.2009 ஞாயிற்றுக்கிழமை பிரான்ஸில் காலமானார்.

அன்னார் சவுந்தரம்மாவின் அன்புக் கணவரும், ஸ்ரீவல்லவாம்பிகாதேவி (தேவா), ஸ்ரீமாலினி, கலைச்செல்வி ஆகியோரின் பாசமிகு தந்தையும், சிவானந்தம் (இந்தியா), சித்தி விநாயகம் (பிரான்ஸ்), வசந்தகுமார் (கொழும்பு) ஆகியோரின் மாமனாரும், திருமதி தங்கமுத்து, சு.நடராசன் (ஓய்வு பெற்ற ஆசிரியர்), திருமதி விசாலாட்சி (கொழும்பு), ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பிரான்ஸில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பாகள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மடத்தடி வீதி,*
*சாவகச்சேரி.*
T.P.No. 0213212897

*தகவல்:*
சு. நடராசன் குடும்பம்.

(563275)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மக்கள் வங்கியின் சிறிய, நடுத்தர முயற்சியாளர்களுக்கான கடன் வழங்கும் நிகழ்வு அண்மையில் யாழ்.ஸ்ரான்லி வீதியில் அமைந்துள்ள மக்கள் வங்கிக் கிளையில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

மக்கள் வங்கியின் பிராந்திய முகாமையாளர் கே.பத்மநாதன் உரையாற்றுவதையும் முயற்சியாளர்களுக்கான கடன்களை மக்கள் வங்கியின் பிரதம நிறைவேற்று அதிகாரி பி.பி.பத்திரண, சிரேஷ்ட பிரதிப் பொது முகாமையாளர் என்.வசந்தகுமார் ஆகியோர் வழங்குவதையும் அருகில் வட வலய உதவிப்பொது முகாமையாளர் ரி.கே.ஆனந்தராஜா நிற்பதையும், நிகழ்வில் கலந்துகொண்டவர்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:-விற்ரோறி)

# யாழ்.ரயில் நிலைய வளாகத்தில் மலசல கூடங்கள் இல்லாமையால் கொழும்பு செல்லும் பயணிகள் அவதி

யாழ்ப்பாணம்.டிசெ.15

யாழ்.ரயில் நிலைய வளாகப் பகுதியில் மலசல கூட வசதிகள் இல்லாததால் பயணிகள் பெரும் சிரமப்படுகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.

வெளியிடங்களுக்கு பஸ்கள் மூலம் செல்வதற்காக தினமும் பயணிகள் அதிகாலை வேளையிலேயே யாழ்.ரயில் நிலையப் பகுதிக்கு வருகின்றனர்.

அங்கு பயணிகளுக்கு என மலசல கூட வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்காமையினால் அவர்கள் பெரும் அசௌகரியங்களுக்கு ஆளாகி வருகின்றனர்.

அங்கு கூடும் பயணிகள் எதிர்நோக்கும் சிரமங்களைப் போக்க சம்பந்தப்பட்டோர் அவசர நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பொது மக்கள் தரப்பில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

(ஒ-4-224)

## விடுமுறை தினங்களில் வர்த்தக நிலையங்கள் திறக்கப்படும்

யாழ்ப்பாணம்,டிசெ.15

எதிர்வரும் நத்தார், புதுவருடப்பிறப்பு ஆகிய தினங்களை முன்னிட்டு நேற்று திங்கட்கிழமை தொடக்கம் எதிர்வரும் ஜனவரி மாதம் முதலாம் திகதி வரை உள்ள சனி, ஞாயிறு மற்றும் வர்த்தக விடுமுறை தினங்களில் வாடிக்கையாளர்களின் நன்மை கருதி சகல வர்த்தக நிலையங்களையும் திறந்து விற்பனையில் ஈடுபடுமாறு யாழ்.வணிகர் கழகம் வர்த்தகர்களைக் கேட்டுள்ளது.

விடுமுறை தின்ங்களில் வேலை செய்யும் ஊழியர்களின் நலன் பேணப்பட வேண்டும் எனவும் அந்தக் கழகம் மேலும் அறிவித்துள்ளது. (50-201)

## வரவேற்பாளர் பதவிக்கான நேர்முகப் பரீட்சை பிற்போடப்பட்டது

யாழ்ப்பாணம்,டிசெ.15

வரவேற்பாளர் நியமனத்திற்கான நேர்முகப்பரீட்சை பிற்போடப்பட்டுள்ளது. எதிர்வரும் 18 ஆம்,19 ஆம் திகதிகளில் யாழ் மாவட்ட செயலகத்தில் நடைபெறவிருந்த வரவேற்பாளர் நியமனத்திற்கான நேர்முகப் பரீட்சை மறு அறிவித்தல் வரை பிற்போடப்பட்டுள்ளதாக அரச அதிபர் கே.கணேஷ் அறிவித்துள்ளார்.

இந்த நேர்முகப் பரீட்சைக்கான திகதி பின்னர் அறிவிக்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (50-16)

# 25 வருடங்களுக்கு மேலாகக் கவனிப்பாரின்றிக் கிடக்கும் புங்குடுதீவு இறுபிட்டி வீதியைப் புனரமைக்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம்,டிசெ.15

புங்குடுதீவு இறுபிட்டி பெருங்காட்டுச் சந்தி வரையான -சேதமுற்ற வீதியை கடந்த காலங்களில் மூன்று அரசாங்க அதிபர்களும், அவர்களுடன் அதிகாரிகளும் நேரடியாகப் பார்வையிட்டுச் சென்றபோதும் வீதியின் திருத்த வேலைகளுக்கான தொடக்க வேலைகள்கூட ஆரம்பிக்கப்படவில்லை. சுமார் 25 வருடங்களுக்கு மேலாக பெருங்காடு இறுபிட்டி பகுதி அதிகாரிகளால் புறக்கணிக்கப்பட்டு வருகிறதோ எனவும், எண்ணத் தோன்றுவதாகவும், புங்குடுதீவு கல்வி அபிவி ருத்திச் சங்கமும் புங்குடுதீவு அபிவிருத்திச் சங்கமும் கவலை தெரிவித்துள்ளன.

அவை மேலும் தெரிவித்தவை வருமாறு-

தற்சமயம் புங்குடுதீவுப்பகுதியில் மீள் குடியமர்ந்த மக்களில் 50 வீதமான மக்கள் இறுபிட்டிப் பகுதியிலேயே குடியமர்ந்துள்ளனர். கடந்த பலவருடங்களாக யாழ்ப்பாணத்திற்கும் புங்குடுதீவிற்குமான பஸ்சேவை இறுபிட்டி வரையே இடம்பெற்றது. கடந்த 4வருடங்களாக இந்த வீதி பொது மக்கள் பாவனைக்கு உதவாத நிலையில் சேதமடைந்ததைத் தொடர்ந்து பஸ் சேவையும் முற்றாக நிறுத்தி வைக்கப்பட்டது.

இதனால் இறுபிட்டி பகுதி மக்கள் நோயாளர்களைக்கூட வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்ல முடியாமலுள்ளது. வெளியிடங்களில் இருந்து கடமைக்காக வரும் உத்தியோகத்தர்கள் பஸ்ஸில் இருந்து பெருங்காட்டுச் சந்தியில் இறங்கி சுமார் 3 மைல்கள் தூரம் வரை நடந்து சென்றே தமது வேலைத் தளங்களுக்கு சேர வேண்டியுள்ளது.

அரச அதிகாரிகள் மட்டுமன்றி அரசியல் வாதிகளும்கூட இந்த வீதியைத் திருத்த அக்கறை காட்டவில்லை.வடக்கின் வசந்தம் என்ற பெயரில் நகரப் பகுதிகளில் சிறிய சேதங்களுக்கு தார்க்கலவை போட்டு வீதி செப்பனிடப்பட்டதாக வீதி அபிவிருத்தி திணைக்களம் செய்திகளை வெளியிடுகின்றதே தவிர பாரிய சேதமுற்றிருக்கும் வீதிகளின் புனரமைப்புக்காக வடக்கின் வசந்தத்தின்கீழ் நடவடிக்கைகள் இடம்பெற்றதாகத் தெரியவில்லை. எனவே இறுபிட்டி மக்களின் முக்கிய தேவையான இந்த வீதியை உடன் புனரமைப்பதற்கான நடவடிக்கை களை சம்பந்தப்பட்டவர்கள் மேற்கொள் வது அவசியம் எனவும் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர். (04-111)

## குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

## வட மாகாண ஆசிரியர் சங்க அங்குரார்ப்பணக் கூட்டம்

யாழ்ப்பாணம்,டிசெ.15

வட மாகாண ஆசிரியர் சங்கத்தின் அங்குரார்ப்பணப் பொதுக் கூட்டம் நாளை புதன்கிழமை நடைபெறவுள்ளது.

நாளை காலை 9 மணிக்கு ஆரியகுளம் உயர்கல்வி நிலையத்தில் நடைபெறவுள்ள இக்கூட்டத்தில், சங்கத்தில் இணைவதற்காக தங்கள் பெயர்களைப் பதிவு செய்துள்ளோரும், புதிதாக இணைய விரும்பும் ஆசிரியர்களும் தவறாது கலந்து கொண்டு தமக்கான உறுப்புரிமைப் படிவங்களைப் பெறுமாறு சங்கத்தினர் அறிவித்துள்ளனர்.

முக்கிய பிரமுகர்கள் உரையாற்றவுள்ள இந்நிகழ்வில் தற்காலிக இணைப்புப் பெற்ற ஆசிரியர் சங்க உறுப்பினர்களும் அழைக்கப்பட்டுள்ளனர்.

ஆசிரியர் எதிர்நோக்கும் பிரச்சினைகளைக் கோவைப்படுத்தும் பணிகளும் நாளை தொடக்கம் ஆரம்பமாகவுள்ளன.

(50-16)

## புதிய மின்மாற்றிகளின் செயற்பாடுகளை அமைச்சர் டக்ளஸ் ஆரம்பித்து வைத்தார்

யாழ்ப்பாணம்,டிசெ.15

தீவகப் பகுதிகளில் சில பகுதிகளுக்கான மின்மாற்றிச் செயற்பாடுகள் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் கடந்த 12 ஆம் திகதி ஆரம்பித்து வைக்கப்பட்டன.

தீவகப் பகுதிகளுக்கு விஜயம் செய்த அமைச்சர் வேலணை, துறையூர், சுருவில் புளியங்கூடல் வீதி, சரவணை, நாரந்தனை தெற்கு, ஊர்காவற்றுறை கரம்பொன், நாரந்தனை வடக்கு ஆகிய பகுதிகளில் மேற்படி மின்மாற்றிச் செயற்பாடுகளை ஆரம்பித்து வைத்தார்.

இந்த மின்மாற்றி செயற்பாடுகள் மூலம் பல பகுதிகளுக்கு மின்சார வசதிகள் வழங்கப்பட்டுள்ள நிலையில் எதிர்வரும் காலங்களில் இதுவரையில் மின்வசதி இல்லாத பகுதிகளுக்கும் மின்வசதிகள் வழங்கப்படும் என அமைச்சர் உறுதியளித்துள்ளார்.

(50)

## யாழ்ப்பாணத்தில் கலப்படம் செய்யப்பட்ட ஒயில் வகைகள் விற்கப்படுவதாக எச்சரிக்கை

யாழ்ப்பாணம்,டிசெ.15

யாழ்.மாவட்டத்தில் கலப்படம் செய்யப்பட்ட கால்ரெக்ஸ் மற்றும் லங்கா ஒயில் வகைகள் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

எனவே எம்மால் அதிகார பூர்வமான விற்பனைக்கென நியமிக்கப்பட்ட முகவர் ஊடாக மக்கள் அவற்றைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

இவ்வாறு குளோபல் பூப்பிறிக்கன்ஸ் நிறுவனத்தின் தேசிய விற்பனை முகாமையாளர் சுமித் ஹேவாவிதான அறிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

எமது நிறுவன ஒயில்களில் கலப்படம் செய்யப்பட்டு விற்கப்படுவதாக எமக்கு தகவல்கள் கிடைத்துள்ளன.

யாழ்.மாவட்டத்திற்கு எமது நிறுவனத்தால் அதிகார பூர்வமாக நியமிக்கப்பட்ட முகவர் ஊடாக மக்கள் ஒயில்களை பெற்றுக் கொள்வதனூடாக கலப்பட ஒயில்களை வாங்குவதில் இருந்து மக்கள் தப்பித்துக் கொள்ளலாம் என்றார். (04-224)

## மானிப்பாய் மத்திய சந்தையில் பழுதடைந்த கடலுணவு விற்பனை

சண்டிலிப்பாய், டிசெ.15

மானிப்பாய் மத்திய சந்தையில் பழுதடைந்த கடலுணவு வகைகள் விற்பனை செய்யப்படுவதாக நுகர்வோர் தெரிவிக்கின்றனர். இது குறித்துக் கவலையும், அதிருப்தியும் அடைந்துள்ள பாவனையாளர்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இந்த வியாபாரிகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அவர்கள் தெரிவித்துள்ளனர்.

குடாக்கடலில் இரவு பகலாக மீன் பிடிப்பதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளதால் தினசரி கூடுதலான கடலுணவுகள் பிடிக்கப்படுகின்றன. இவற்றை வாங்கி வரும் வியாபாரிகள் பழுதடைந்த மீன்களையும் மக்களை ஏமாற்றி விற்பனை செய்வதில் ஈடுபட்டு வருகிறார்கள் என்று கூறப்படுகின்றது.

இவற்றை நம்பி வாங்கிச் செல்லும் மக்கள் பணத்தையும் கொடுத்தது மட்டுமல்லாமல் நோய்த் தாக்கங்களுக்கும் இலக்காக வேண்டிய நிலை ஏற்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

சுகாதாரத்திற்குப் பங்கம் ஏற்படுத்தும் வகையில் பழுதடைந்த கடலுணவு வகைகளை விற்பனை செய்வதில் ஈடுபட்டு வரும் வியாபாரிகள் மீது சுகாதாரப் பரிசோதகர்கள் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று பாவனையாளர் கேட்டுள்ளனர். (50-224)

## யாழ். பண்ணைப் பகுதிக்கு அமைச்சர் டக்ளஸ் விஜயம்

யாழ்ப்பாணம்,டிசெ.15

யாழ்.பண்ணை மீனாட்சியம்மன் கோயிலை அண்டிய மைதானம் மற்றும் யாழ்.போதனா வைத்தியசாலையின் கழிவு நீர் பண்ணைப் பாலத்துடன் கலக்கும் வடிகால் பகுதி ஆகிய இடங்களை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நேற்று முன்தினம் காலை நேரில் சென்று பார்வையிட்டார்.

சுகாதார அமைச்சின் புதிய வைத்திய பிரிவொன்றிற்காக பண்ணை மீனாட்சியம்மன் கோயிலை அண்டிய மைதானத்தின் ஒரு பகுதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிலையில் அங்கு விஜயம் செய்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் அப்பகுதி மக்கள் தனது விமர்சனங்ளைத் தெரிவித்தனர்.

சம்பந்தப்பட்ட அனைவருடனும் கலந்துரையாடி உரிய தீர்வொன்று பெற்றுக்கொள்ளப்படும் எனத் தெரிவித்த அமைச்சர் யாழ். போதனா வைத்தியசாலையின் கழிவு நீர், பண்ணைப் பாலத்துடன் கலக்கும் வடிகால் பகுதியை பார்வையிட்டதுடன் அதனை சிறந்த முறையில் [illegible]ரமைக்குமாறு உரிய அதிகாரிகளுக்கு [illegible]ப்புரையும் வழங்கினார்.

(50)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இத்தாலியப் பிரதமர் முகத்தில் திடீர் தாக்குதல்; இரத்தம் சொட்ட வைத்தியசாலையில் சேர்ப்பு



ரோம், டிசெ. 15

இத்தாலியின் மிலன் நகரில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசிவிட்டு வந்த பிரதமர் பெர்லுஸ்கோனி மர்ம நபரால் அதிரடியாகத் தாக்கப்பட்டார். மூக்கிலும், வாயிலுமிருந்து இரத்தம் சொட்டசொட்ட பிரதமர் பெர்லுஸ்கோனி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இத்தாலிப் பிரதமர் சில்வியோ பெர்லுஸ்கோனி மீது ஊழல் முறைப்பாடுகள் ஏராளமாக உள்ளன. ஊடகத்துறை, தோட்டத்துறை, விளையாட்டுத் துறை ஆகியவற்றில் பெரும் முதலீடு செய்துள்ள இவர் தமது தொழில்களுக்கு வசதியாக சட்டத்திட்டங்களை மாற்றி அமைத்துக் கொள்கிறார் என்ற குற்றச்சாட்டு பரவலாக உள்ளது.

அதுமட்டுமன்றி, 73 வயதான பெர்லுஸ்கோனி மீது பாலியல் குற்றச்சாட்டுகளும் சுமத்தப்பட்டுள்ளன. பிரதமர் தமது இல்லத்துக்கு 30 விபசார அழகிகளை அழைத்து கும்மாளம் போட்டுள்ளார் என்ற முறைப்பாடுகளும் உள்ளன. இதுபோன்ற குற்றச்சாட்டுகளின் காரணமாகவே பெர்லுஸ்கோனியின் மனைவியும் அவரை விவாகரத்து செய்துள்ளார்.

எனினும், இதெல்லாம் எதிர்க்கட்சிகளின் சதி என்றும், இந்த முறைப்பாடுகள் எதிலும் உண்மையில்லை என்றும் பெர்லுஸ்கோனி மறுத்து வருகிறார். எனினும், பெர்லுஸ்கோனி இராஜிநாமா செய்ய வேண்டும் என வலியுறுத்திக் கடந்த 5 ஆம் திகதி ஆயிரக்கணக்கான இத்தாலிய மக்கள் ரோம் நகரில் பேரணி நடத்தினர்.

இந்நிலையில், மிலன் நகரில் ஞாயிற்றுக்கிழமை மாலை நடந்த கூட்டமொன்றில் தனது ஆதரவாளர்கள் மத்தியில் ஆவேசமாகப் பேசிமுடித்துவிட்டு பெர்லுஸ்கோனி தமது காருக்குத் திரும்பிக்கொண்டிருந்தார். அச்சமயம், வழியில் சிலருக்காக ஓட்டோகிராப்பில் கையெழுத்திடுவதற்காக நின்றார். அப்போது 42 வயது நபர் ஒருவர் உலோகத்திலான மிலன் டியோமோ மினயேச்சர் சிலையை கையில் வைத்துக் கொண்டு ஓட்டோகிராப் வாங்குவது போல பிரதமரின் அருகில் வந்தார்.

ஓட்டோகிராப் வாங்கியதும் தடாலென யாரும் எதிர்பாராதவிதமாக பிரதமரின் முகத்தில் சிலையாலேயே ஓங்கி ஒரு குத்துவிட்டார். பெர்லுஸ்கோனி நிலை குலைந்து கீழே விழுந்தார். தடதடவென மூக்கிலிருந்தும், வாயிலிருந்தும் இரத்தம் வடிந்தது. பாதுகாவலர்கள் அந்த நபரை சுற்றிவளைத்துவிட்டனர்.

பிரதமரின் முகத்தில் குத்துவிட்ட நபரின் பெயர் மசிமோ டார்டாக்லியா. மசிமோ மீது இதுவரை எந்தவொரு குற்றவியல் வழக்கு இல்லை. இவர் ஒரு மனநோயாளி என முதல்கட்ட விசாரணையில் தெரிய வந்துள் ளது எனப் பொலிஸார் தெரிவித் துள்ளனர்.

# அமெரிக்காவில் இந்த வருடத்தில் 133 வங்கிகள் மூடப்பட்டன

நியூயோர்க், டிசெ. 15

அமெரிக்காவில் மாதம் 11 வங்கிகள் நிதி சீர்குலைவு காரணமாக நட்டமடைந்து வருகின்றன. இதுவரை இந்த ஆண்டு 133 வங்கிகள் காலியாகியுள்ளன. கடந்த ஆண்டைவிட இது ஐந்து மடங்கு அதிகமாகும்.

பொருளாதார சீர்குலைவால் பாதிக்கப்பட்ட அமெரிக்க வங்கிகள் தொடர்ந்து நட்டமடைந்து வருகின்றன. சராசரியாக மாதத்திற்கு 11 பெரிய மற்றும் சிறிய வங்கிகள் நட்டமடைந்து வருகின்றன. கடந்த ஆண்டு மொத்தம் 25 வங்கிகளே நட்டமடைந்தன. ஆனால், இந்த ஆண்டு இதுவரை 133 வங்கிகள் நட்டத்துக்குள்ளாகியுள்ளன.

கடந்த 18 ஆண்டுகளில் அதிகளவில் இந்த ஆண்டிலேயே வங்கிகள் நட்டமடைந்துள்ளன. கடந்த 1992 ஆம் ஆண்டு 181 வங்கிகள் நட்டமடைந்தமை குறிப்பிடத்தக்கது.

தற்போது ரிபப்ளிக் பெடரல் வங்கி, வேலி கெபிடல் பேங்க், சொலூசன்ஸ் வங்கி ஆகியவை மூடப்பட்டுள்ளன. டிசெம்பர் 11 ஆம் திகதி இவை கடையை மூடிவிட்டன.

கடந்த ஆண்டு லேஹ்மன் பிரதர்ஸ் வங்கி நட்டமடைந்தது. இதைத் தொடர்ந்து 25 வங்கிகள் மூடப்பட்டன. இந்த ஆண்டு நிலைமை இன்னும் மோசமாகி 133 வங்கிகள் மூடப்பட்டுள்ளன. அதாவது வாரந்தோறும் சராசரியாக 11 வங்கிகள் மூடப்பட்டுள்ளன.

மொத்தம் 148 வங்கிகள் மூடுவிழா கண்டுள்ளன. இவற்றால் அமெரிக்க காப்பீட்டுத்துறைக்கு ஏற்பட்டுள்ள இழப்பு 10 ஆயிரம் கோடி டொலர் என்கின்றனர் அதிகாரிகள்.

# ஆப்கானில் தீவிரவாதிகள் தாக்குதல்; 16 பொலிஸார் பலி; 28 பேர் காயம்

காபூல், டிசெ. 15

ஆப்கானிஸ்தானில் நேற்று திங்கட்கிழமை இருவேறு சோதனைச் சாவடிகள் மீது தலிபான் தீவிரவாதிகள் மேற்கொண்ட உக்கிர தாக்குதல்களில் மொத்தம் 16 பொலிஸார் கொல்லப்பட்டனர். 28 பேர் காயமடைந்தனர்.

ஆப்கானின் வட மாகாணமான பஹ்லேனிலுள்ள சோதனைச் சாவடி மீது நேற்று அதிகாலை தீவிரவாதிகள் மேற்கொண்ட தாக்குதலில் எட்டுப் பொலிஸார் கொல்லப்பட்டனர். 13 பேர் காயம டைந் தனர் என உள்துறை அமைச்சு தெரி வித்தது.

தென் ஆப்கானிஸ்தானிலுள்ள ஹெல்மாந் மாகாணத்தின் தலைநகரான லஷ்கர் ஹாவிலுள்ள பிறிதொரு சோதனைச் சாவடிமீது, இதே சமயத்தில் தலிபான் தீவிரவாதிகள் மேற்கொண்ட தாக்குதலில் எட்டுப் பொலிஸார் பலியாயினர். 15 பேர் காயமடைந்தனர் என்றும் இந்த அமைச்சு குறிப்பிட்டது.

வட மாகாணமான பஹ்லேனில் இடம்பெற்ற தாக்குதலின்போது, பொலிஸார் மேற்கொண்ட பதில் தாக்குதலில் 2 தீவிரவாதிகள் கொல்லப்பட்டார்கள். மூன்று தீவிரவாதிகள் காயமடைந்தார்கள் என மாகாண பிரதிப் பொலிஸ் அதிகாரி ஜல்மாய் மங்கல் தெரிவித்தார்.

உலக அரங்கில்

# டென்மார்க்கில் சுற்றுச்சூழல் விழிப்புணர்வு தேவாலயமணிகள் 350 முறைகள் ஒலிப்பு

கொபன்ஹேகன், டிசெ. 15

பருவநிலை மாறுபாடு, சுற்றுச்சூழல் ஆகியவை சம்பந்தமாக விழிப்புணர்வு ஏற்படுத்தும் பொருட்டு, ஞாயிற்றுக்கிழமை டென்மார்க் முழுவதிலுமுள்ள தேவாலய மணிகள் 350 முறைகள் ஒலிக்கச் செய்யப்பட்டன.

வளிமண்டலத்தில் 10 லட்சத்தில் 350 துளிகள் என்ற அளவில் கார்பன்டை ஆக்சைடு இருக்கவேண்டும் . இதுவே பாதுகாப்பானது என்று விஞ்ஞானிகள் கூறியுள்ளனர். இதனை வலியுறுத்தும் வகையில் தேவாலய மணிகள் 350 முறை ஒலித்தன.

பருவநிலை மாறுபாடு தொடர்பான உச்சிமாநாடு டென்மார்க்கின் தலைநகரான கொபன்ஹேகனில் நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

# பிரிட்டனின் அடுத்த அரசர் வில்லியம்; மகாராணியார் உறுதியான நடவடிக்கை

லண்டன், டிசெ.15

பிரிட்டனின் அடுத்த அரசராக இளவரசர் வில்லியம் தேர்ந்தெடுக்கப்படுவார் என்று தெரியவருகிறது. இதற்கான உறுதியான நடவடிக்கைகளை எலிசபெத் மகாராணியார் மேற்கொண்டு வருகிறார்.

இளவரசர் சார்ள்ஸ் - மறைந்த டயானா தம்பதியின் மூத்த புதல்வரான வில்லியமுக்குத் தற்போது 27 வயதாகிறது.

லண்டனில் வெளியாகும் 'டெய்லி மெயில்' பத்திரிகை இது தொடர்பாக வெளியிட்டுள்ள செய்தியில், ''பிரிட்டிஷ் அரசராக வில்லியத்தை அறிவிக்க உறுதியான நடவடிக்கைகளை எலிசபெத் மகாராணியார் மேற்கொண்டுள்ளார். இதன்படி தனது பொதுப் பணிகளில் சிலவற்றை வில்லியமிடம் ஒப்படைக்குமாறு அவர் கூறியுள்ளார். தனது மகன் இளவரசர் சார்ள்ஸை விட வில்லியம்தான் அரசர் பதவிக்குப் பொருத்தமானவராக இருப்பார் என்றும் மகாராணியார் கருதுகிறார்'' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

பிரிட்டிஷ் அரசின் உயரதிகாரி ஒருவருக்கு மகாராணியார் எழுதியுள்ள கடிதத்தின் மூலம் இந்தத் தகவல் பெறப்பட்டுள்ளது என்றும் அப்பத்திரிகைச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எலிசபெத் மகாரணியார் வழக்கமாகப் பங்கேற்கும் நிகழ்ச்சிகளில் அடுத்த ஆண்டு முதல் வில்லியம் கலந்துகொள்வார் எனத் தெரியவருகிறது. மகாராணிக்குத் தற்போது 83 வயதாகிறது.

இது தவிர இளவரசர்கள் வில்லியம், ஹரிக்குப் பணம் ஒதுக்குவது தொடர்பாக கருவூல அதிகாரிக்கு மகாராணியார் கடிதம் எழுதியுள்ளார். இந்த நடவடிக்கைகள் அனைத்தும் வில்லியமை அரசராக்கஅவர் தயாராகி வருகிறார் என்பதையே காட்டுகிறது.

# பருவநிலை மாற்றத்துக்கு உறுதியான முடிவுதேவை; வலியுறுத்தி கொபன்ஹேனில் ஆர்ப்பாட்டம்!

## 928 பேர் பொலிஸாரால் கைது

கொபன்ஹேகன், டிசெ. 15

டென்மார்க்கின் தலைநகரான கொபன்ஹேகனில் பருவநிலை மாற்றம் தொடர்பான மாநாடு நடைபெற்று வரும் கட்டடத்திற்கு வெளியே, பருவநிலைமாற்றப் பிரச்சினைக்கு உறுதியான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட 928 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

உலகம் வெப்பமயமாவதன் காரணமாகப் பருவநிலையில் மாற்றம் ஏற்பட்டுள்ளது. பனிமலைகள் உருகத் தொடங்கியுள்ளன. இதனால் கடல்மட்டம் அதிகரித்து குட்டித்தீவுகள் கடலில் மூழ்கும் அபாயம் ஏற்பட்டுள்ளன. அத்தோடு மழை குறைந்து வெயில் அதிகரித்து வருகிறது.

இதனால் பருவமழை மாற்றம குறித்து ஆராய்வதற்காகவும், புவி வெப்பம் அடைவதைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை எடுப்பதற்காகவும் உலக நாடுகளின் மாநாடு டென்மார்க்கின் தலைநகரான கொபன்ஹேகனில் நடைபெற்று வருகிறது.

இந்தப் பிரச்சினைக்கு உறுதியான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தி மாநாடு நிகழும் இடத்தில் சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் போராட்டம் நடத்தினார்கள். மாநாடு நிகழும் இடத்தை நோக்கி 4 மணி நேரப் பேரணி முன்னோக்கி வந்தது.

இதில் இலட்சக்கணக்கானோர் கலந்து கொண்டனர். அவர்கள் கைகளில் தங்கள் கோரிக்கைகள் அடங்கிய பதாகைகளை ஏந்தியிருந்தனர். அவர்கள் பட்டாசுகளைக் கொளுத்தித் தங்கள் போராட்டத்தின் மீது தலைவர்களின் கவனத்தை ஈர்க்க முயன் றனர்.

இந்தப் போராட்டத்தில் இந்தி சினிமா நடிகர் ராகுல் போஸ், ஹொலிவூட் நடிகை ஹெலன் பாக்ஸன்டேல், மனித உரிமைக்கான ஐ.நா. ஆளுநர் மாரிரொபின்சன், டேனிஷ் மொடரல் ஹெலினா கிறிஸ்டென்சன் ஆகியோர் உட்படப் பல நாடுகளின் பிரமுகர்கள், சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

பல்வேறு நாடுகளைச் சேர்ந்த சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் மக்கள் மத்தியில் பேசினார்கள். அப்போது, 'கார்பன் டை ஒக்சைட் வாயுவை வெளியே விடாதீர்கள் என்று சொல்வதற்குப் பதிலாகப் புதிய தொழில்நுட்பத்தைக் கண்டு பிடிக்க வேண்டும். காற்றை மாசுபடுத்தாத தொழில் நுட்பத்தைக் கண்டுபிடிக்க வேண்டும்'' என்று ராகுல் போஸ் தமது உரையில் குறிப்பிட்டார்.

# அடுத்த இராணுவ நடவடிக்கை வட பிராந்தியத்தில் ஆரம்பமாகும்

## பாகிஸ்தான் பிரதமர் ரஸா கிலானி

''பாகிஸ்தானின் பழங்குடியினப் பகுதியான தெற்கு வசிரிஸ்தானில் இராணுவம் மேற்கொண்டு வந்த இராணுவ நடவடிக்கை நிறைவு பெற்றுவிட்டது. அடுத்ததாக வடக்கிலுள்ள இன்னொரு பழங்குடியினப் பிராந்தியத்தில் இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப் படவுள்ளது'' என பாகிஸ்தான் பிரதமர் யூசுப் ரஸா கிலானி தெரிவித்தார்.

லாகூர் நகரில் செய்தியாளர்களிடம் இதனை தெரிவித்த அவர், ''ஓரக்ஸாய் என்ற இடத்துக்கு இராணுவ நடவடிக்கை தற்போது நகரலாம்'' என்றும் குறிப்பிட்டார்.

தெற்கு வசிரிஸ்தானிலிருந்த பல ஆயுததாரிகள் தற்போது ஓரக்ஸாய்க்கு தப்பியிருக்கலாம் என்று கருதப்படுகிறது.

இப்பகுதியில் கிளர்ச்சிக்காரர்களின் இலக்குகள் மீது பாகிஸ்தான் படையினர் அண்மையில் வான் தாக்குதல்களை நடத்தியுள்ளனர்.

பாகிஸ்தான் இராணுவம் தெற்கு வசிரிஸ்தான் பகுதியிலிருந்து வெளியேறுகிறது என்பது பிரதமர் கிலானியின் கூற்றுக்குப் பொருள் அல்ல என்று செய்தியாளர்கள் கூறுகின்றனர்.

# ரஷ்ய ஏவுகணைச் சோதனை மீண்டும் தோல்வியில் முடிந்தது

ரஷ்யா நடத்திய புதிய ஏவுகணை சோதனை மீண்டும் தோல்வியடைந்துள்ளது. ரஷ்யா 'புலாவா' என்ற புதிய நீர்மூழ்கி ஏவுகணை சோதனையை ஏற்கனவே பல முறை நடத்தி, அது தோல்வியடைந்திருந்தது.

இந்நிலையில், வியாழக்கிழமை மீண்டும் அதே ஏவுகணையை 'திமிதிரி டான்ஸ்கோய்' நீர்மூழ்கி கப்பலிலிருந்து ஏவி பரிசோதித்தது. ஆனால், மூன்றாவது கட்டத்தில் அது தோல்வியடைந்தது [illegible] ரஷ்ய பாதுகாப்புத்துறை வட்டாரங்களை மேற்கோள்காட்டி மாஸ்கோவிலிருந்து வெளியாகும் முன்னணி நாளிதழ்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

ரஷ்யா பழைய நீர்மூழ்கி ஏவுகணைகளை மாற்றியமைக்கும் நோக்குடனேயே இந்த புதிய ஏவுகணை சோதனைகளைத் தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது. ஆனால், இறுதி வடிவமைப்பில் தொடர்ந்து பிரச்சினைகளை சந்தித்து வருவதால் அதில் தோல்வி ஏற்பட்டு வருகிறது என அச்செய்திகள் மேலும் தெரிவிக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




01.04.1986

* இலங்கை இனப்பிரச்சினைத் தீர்வுக்கு காமன்வெல்த் மட்டத்தில் முயற்சிகள் மேற்கொள்ளும் யோசனைக்கு இந்தியா எதிர்ப்புத் தெரிவிப்பு.
* தமிழ்ப் பகுதிகளில் 1985ஆம் ஆண்டின் பிற்பகுதியிலும் 1986ஆம் ஆண்டின் முற்பகுதியிலும் இடம்பெற்ற அட்டூழியங்கள், படுகொலைகள் குறித்த நீண்ட அறிக்கை த.வி.கூட்டணியால் இந்திய அரசிடம் கையளிப்பு.

02.04.1986

* மட்டக்களப்பு நகரில் இடம்பெற்ற கிரனேட் வீச்சுத் தாக்குதலில் மூன்று பொதுமக்கள் பலி; பலர் காயம்.
* ஆனையிறவு உப்பளப் பகுதியில் இரவு பகலாக இடம்பெறும் தேடுதல் நடவடிக்கையால் பெருமளவிலான பொதுமக்கள் இடப்பெயர்வு.

03.04.1986

* கொக்காவிலில் இராணுவ வாகனம் நிலக்கண்ணியில் சிக்கிச் சிதறியதில் ஒரு அதிகாரி உட்படப் பத்து இராணுவத்தினர் பலி.
* தமிழ்ப் போராளிகளுக்கு உதவி வரும் பிரிட்டன் வாழ் தமிழ் மக்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு இலங்கை அரசு பிரிட்டிஷ் அரசிடம் கோரிக்கை.

04.04.1986

* சுவிற்சர்லாந்திலுள்ள இலங்கைத் தமிழ் அகதிகளை இந்திய அரசின் விருப்பத்துக்கு மாறாகத் திருப்பி அனுப்பாதென சுவிஸ் அரசு இந்தியாவுக்கு உறுதியளிப்பு.
* இனப்பிரச்சினை பற்றிப் பேச இந்தியாவுக்கு இலங்கை அரசு தனது பிரதிநிதியொருவரையும் அனுப்பாது என தேசிய பாதுகாப்பு அமைச்சர் அத்துலத்முதலி தெரிவிப்பு.
* வடபகுதி மக்கள் வங்கிக் கிளைகளில் அடகு வைக்கப்பட்ட பொதுமக்களது நகைகளை யாழ்ப்பாணத்தில் வைத்து மீளளிக்க யாழ்.இராணுவ இணைப்பதிகாரி நடவடிக்கை.

05.04.1986

* ஈழத் தமிழ் விடுதலை அமைப்புக்கள் யாவற்றையும் ஓர் அணியின் கீழ் ஒன்று திரட்ட தமிழ் நாட்டு அரசியல் தலைவர்களில் பலர் முயற்சி.
* இனப்பிரச்சினை தொடர்பான பேச்சுவார்த்தை, விசேட தூதுப்பணி என்பவற்றில் இந்திய முன்னாள் வெளிவிவகாரச் செயலாளர் ரொமேஸ் பண்டாரியை ஈடுபடுத்துவதில்லை என இந்திய அரசு முடிவு.
* இலங்கையில் அதிகரித்துவரும் தமிழர்கள் மீதான வன்செயல்கள் குறித்து இந்தியா வெறுமனே பார்த்துக்கொண்டிருக்க முடியாதென இந்தியத் தூதுவர் டிக்ஸிற் கருத்துத் தெரிவிப்பு.

06.04.1986

* ஊர்காவல் படையினருக்கு வழங்கப்பட்டுள்ள ஆயுதங்களை அரசு மீளப் பெறவேண்டுமென உள்நாட்டமைச்சர் கே.டபிள்யூ.தேவநாயகம் கோரிக்கை.
* காங்கேசன்துறை துறைமுகத்தில் பாதுகாப்புப் படையினரின் விசேட பிரிவொன்று நிலை நிறுத்தம்.

07.04.1986

* கோட்டையிலிருந்து வெளியே வர முயன்ற இராணுவத்தினருக்கும் போராளிகளுக்கும் இடையில் ஏற்பட்ட மோதலால் ஷெல் தாக்குதலில் இரு பொதுமக்கள் பலி; பலர் காயம்.
* தமிழர் பிரச்சினையில் இந்திய அரசின் அணுகுமுறை தமக்குத் திருப்தி அளிப்பதாக விடுதலைப்புலிகள் அமைப்பின் தலைவர் இந்திய சஞ்சிகைக்கு வழங்கிய பேட்டியில் தெரிவிப்பு.

08.04.1986

* ஜேர்மனியில் தஞ்சம் அடைந்துள்ள இலங்கைத் தமிழ் அகதிகளுக்குத் தமது அரசு தொடர்ந்தும் புகலிடம் கொடுத்து வருமென மேற்கு ஜேர்மனின் பொருளாதார அமைச்சர் தெரிவிப்பு.
* படையினரால் கைது செய்யப்பட்டு படையினரின் வாகனத்தில் அழைத்து வரப்பட்ட பொதுமக்கள் 5 பேர், வழியில் போராளிகளுக்கும் படையினருக்கும் இடையில் ஏற்பட்ட மோதலில் சிக்கிப் பலி.

09.04.1986

* நயினாதீவில் பொதுமக்கள் இரவு 8 மணிக்குப் பின்னர் வெளியில் நடமாடப் படையினர் தடை விதிப்பு.
* தத்தமது நாடுகளில் தங்கியுள்ள இலங்கைத் தமிழ்ப் போராளிகளை இலங்கைக்குத் திருப்பி அனுப்பிவைக்குமாறு இலங்கை அரசு இந்தியாவிடமும் பிரிட்டனிடமும் கோரிக்கை முன்வைப்பு.
* கரையோரப் பகுதிகளை அழித்துக் கொண்டு குடாநாட்டின் உட்பகுதிகளைத் தாக்குவதே அரசின் திட்டமென, கரையோரப் பகுதிகளிலிருந்து பொதுமக்களை வெளியேறுமாறு படைத் தளபதி எச்சரித்திருப்பது தொடர்பாகக் கருத்து வெளியிட்ட த.வி.கூட்டணிச் செயலாளர் அமிர்தலிங்கம் தெரிவிப்பு.

10.04.1986

* இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும் வரை இலங்கைக்கு உதவி செய்ய வேண்டாமென நிதி வழங்கும் நாடுகளிடம் முன்னாள் ' பிரிட்டிஷ் அமைச்சர் கோரிக்கை.
* தலைமன்னாரில் இடம்பெற்ற நிலக்கண்ணித் தாக்குதலில் அதிகாரியொருவர் உட்பட நான்கு பொலிஸார் பலி.
* இலங்கையில் தொடரும் வன்முறைகளைத் தடுக்க இலங்கை அரசு தவறுமானால் அது வல்லரசு நாடொன்றின் தலையீட்டுக்கு வழிவகுப்பதாக அமையும் என இந்திய வெளிவிவகார அமைச்சர் தெரிவிப்பு.

11.04.1986

* 'எமது நம்பிக்கைக்கு உகந்தவர் ரொமேஸ் பண்டாரிதான். அவரையே பேச்சுக்கள் நடத்த இலங்கைக்கு அனுப்புங்கள்' என இலங்கை அரசு இந்தியாவுக்குத் தெரிவித்துள்ளது.
* படையினரின் ஷெல் தாக்குதல் காரணமாக செல்வச்சந்நிதி ஆலய மணிக்கூட்டுக் கோபுரம் இடிந்து வீழ்ந்தது.

12.04.1986

* தமிழர் அமைப்புக்கள் ஒன்றுபட்டு பொதுக்கோரிக்கையொன்றை முன்வைத்தால் தாம் அதனை ஜனாதிபதியிடம் சமர்ப்பித்துப் பேசத் தயாரென அமைச்சர் தொண்டமான் தெரிவிப்பு.
* சாகும்வரை உண்ணாவிரதம் இருந்த ஏழு பிக்குமார் இனந்தெரியாதோரால் கடத்திச் செல்லப்பட்டுத் திக்குத் திக்காக இறக்கிவிடப்பட்டனர்.
* யாழ்.குடாநாட்டின் கரையோரப் பகுதிகளில் இருந்து பொதுமக்களை வெளியேறுமாறு பாதுகாப்புத் தரப்பு விடுத்த உத்தரவு வாபஸ் பெறப்பட மாட்டாதென அரச வட்டாரங்கள் தெரிவிப்பு.

13.04.1986

* இலங்கை இனப்பிரச்சினை தொடர்பான சகல அம்சங்களையும் இந்திய வெளிநாட்டமைச்சர் தலைமையிலான உயர்மட்டக்குழு விரிவாக ஆராய்வு.
* அரசின் புதிய யோசனைகளுடன் இந்தியா செல்லுமுன்னர் வெளிநாட்டமைச்சர் ஏ.சீ.எஸ்.ஹமீதும் தேசிய பாதுகாப்பு அமைச்சர் லலித்அத்துலத்முதலியுடன் இரகசியப் பேச்சுவார்த்தை.
* உலகத் தமிழ்ச் சங்கம் தமிழக முதலமைச்சர் எம்.ஜி.ஆரினால் மதுரையில் ஆரம்பித்து வைப்பு.

14.04.1986

* இலங்கை இனப்பிரச்சினைத் தீர்வுக்கு முன்னுரிமை வழங்கிச் செயற்படு மாறு பிரதமர் ராஜீவ்காந்தியிடம் தமிழ்நாடு முதலமைச்சர் எம்.ஜி.ஆர் உருக்கமான வேண்டுகோள்.
* போராளிகளுக்கு எதிரான தாக்குதல்களைத் தீவிரமாக்கப் போவதாகக் கூட்டுப்படைத் தளபதி தெரிவித்தமை குறித்து கொழும்பு ராஜதந்திர வட்டாரங்கள் அதிருப்தி.
* ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரம், நாடாளுமன்றத்தின் சட்டவாக்க அதிகாரம் என்பவற்றைப் பாதிக் காத விதத்தில் இலங்கை அரசின் புதிய யோசனைகள் அமைந்துள்ளதாக அரச வட்டாரங்கள் தெரிவிப்பு.

# யாழ்ப்பாணத்தில் மீளக்குடியமர்ந்துள்ள முஸ்லிம்களுக்கு எந்தவித உதவியும் இல்லை

## ரணிலுடனான சந்திப்பின்போது மூபின் விசனம்

வலி.வடக்கு, டிசெ.15

யாழ்ப்பாணத்தில் மீளக் குடியேறியுள்ள முஸ்லிம்களுக்கு இதுவரையில் எந்தவொரு உதவிகளும் வழங்கப்படவில்லை. வீட்டுத் திட்டங்களும் வழங்கப்படவில்லை.

மேற்கண்டவாறு யாழ்ப்பாணம் ஜும்மா பள்ளிவாசலைச் சேர்ந்த எஸ்.எஸ்.சி. மூபின் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை வரவேற்கும் நிகழ்வும் முஸ்லிம் மக்களுடனான சந்திப்பும் ஜும்மா பள்ளிவாசலில் இடம்பெற்றன.

இந்த நிகழ்வில் உரையாற்றிய மூபின் மேலும் தெரிவித்தவை வருமாறு:

1990ஆம் ஆண்டில் நாம் எமது சொந்த இடத்தில் இருந்தும், சொந்த வீடுகளில் இருந்தும் வெளியேற்றப்பட்டோம். இன்றும் நாம் ஏ-9 பாதையூடாகப் பயணம் செய்வதில் பிரச்சினைகளை எதிர்கொண்டுள்ளோம்.

இதேபோன்று வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட முடியாமலும், அவற்றுக்கான அனுமதிப்பத்திரங்களைப் பெறமுடியாமலும் பெரும் கஷ்டங்களுக்கு உள்ளாகி வருகின்றோம். இதனால் முஸ்லிம் மக்கள் யாழ்ப்பாணத்துக்கு வந்து தொழில் எதனையும் செய்யமுடியாத சூழ்நிலை காணப்படுகின்றது.

முஸ்லிம் மக்கள் ஆயுதம் தூக்கியவர்களும் அல்லர். போராட்டத்தை நடத்தியவர்களும் அல்லர். முஸ்லிம் மக்களுடைய வாழ்வுக்கு வழிகாட்ட வேண்டிய பொறுப்பும் கடமையும் ரணில் விக்கிரமசிங்கவுக்கே உரியது- என்றார்.

(50-86)

# தீவகத்தில் மீளக்குடியமர்ந்தோருக்கான கொடுப்பனவை அமைச்சர் டக்ளஸ் வழங்கினார்

யாழ்ப்பாணம்,டிசெ.15

இடம்பெயர்ந்த நிலையில் நலன்புரி நிலையங்களில் தங்கியிருந்து அண்மையில் சொந்த இருப்பிடங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்ட தீவகப் பகுதி மக்களுக்கான முதற்கட்ட கொடுப்பனவுகள் கடந்த 12 ஆம் திகதி சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் வழங்கப்பட்டன.

வேலணைப் பிரதேச செயலாளர் மு.நந்தகோபன் தலைமையில் வேலணை மண்கும்பான் பிள்ளையார் கோயில் திருமண மண்டபத்திலும் புங்குடுதீவு சர்வோதய மண்டபத்திலும் நடைபெற்ற நிகழ்வுகளின்போது பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இக்கொடுப்பனவுகளை வழங்கினார்.

இதன் பிரகாரம் இம்மக்களுக்கு 5 ஆயிரம் ரூபா வீதம் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டன.

இங்கு உரை நிகழ்த்திய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, மீளக்குடியமர்த்தப்பட்டுள்ள இம்மக்களுக்கு 50 ஆயிரம் ரூபா கொடுப்பனவை வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன, இத்தொகையானது எமது மக்களின் வாழ்க்கையை புதிதாக அமைத்துக் கொள்ளப்போதாது. எனினும் தற்போது கிடைக்கும் தொகையைப் பெற்றுக் கொண்டு நாளடைவில் மேலும் பல உதவிகளை நோக்கி முன்னகர முடியும் எனத் தெரிவித்தார்.

அத்துடன் தற்போது மீளக்குடியமர்ந்துள்ள மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளையும் தனித்தனியாகக் கேட்டறிந்து கொண்ட அமைச்சர் கூடிய விரைவில் இம்மக்கள் மீளக்குடியமர்ந்துள்ள பகுதிகளுக்கு வருகைதந்து அவர்களது பிரச்சினைகளைத் தீர்ப்பதாகவும் தேவைகளைப் படிப்படியாக நிறைவேற்றுவதாகவும் உறுதியளித்தார்.

(50)

## மீளக்குடியமர்ந்தோருக்கான கொடுப்பனவு வழங்கும் நிகழ்வு

யாழ்ப்பாணம், டிசெ.15

நலன்புரி நிலையங்களிலிருந்து விடுவிக்கப்பட்டு சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் மீளக்குடியேறியுள்ளவர்களுக்கு அகதிகளுக்கான ஐ.நா.தூதரகத்தின் 20 ஆயிரம் ரூபா கொடுப்பனவுக்கான வவுச்சர்கள் வழங்கும் நிகழ்வு இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு மானிப்பாய் சோதிவேம்படி பாடசாலையில் பிரதேச செயலர் மரியதாசன் ஜெகூ தலைமையில் நடைபெறும்.

பின்வரும் கிராமசேவையாளர் பிரிவில் உள்ளவர்களை கொடுப்பனவுகளைப் பெற்றுக்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

ஜே/133 (ஆனைக்கோட்டை), ஜே / 134 (நவாலி தெற்கு), ஜே/137 (மானிப்பாய் வடக்கு), ஜே/138 (மானிப்பாய் கிழக்கு), ஜே/139 (மானிப்பாய் தெற்கு), ஜே/140 (மானிப்பாய் மேற்கு). (50- 5)

# இந்து ஆலயங்களின் புனரமைப்புக்கு கலாசார அமைச்சு நிதி ஒதுக்கீடு

வலி.வடக்கு ,டிசெ.15

வடக்கின் வசந்தம் வேலைத்திட்டத்தின்கீழ் உடுவிலிலுள்ள இந்து ஆலயங்களுக்கு 5 லட்சத்து ஐம்பதாயிரம் ரூபா நிதி கலாசார அமைச்சினால் வழங்கப்பட்டுள்ளது.

இந்த நிதி இரண்டு ஆலயங்களைப் புனரமைப்புச் செய்வதற்கும், அறநெறிப் பாடசாலைகளுக்கு தளபாடங்கள், உபகரணங்கள் கொள்வனவு செய்வதற்கெனவும் வழங்கப்பட்டுள்ளது.

குப்பிளான் வடக்கு ஞான வைரவர் ஆலயத்திற்கு இரண்டு லட்சம் ரூபாவும், உடுவில் மல் வம் கந்தசாமி ஞானவைரவர் ஆலயத்திற்கு இரண்டு லட்சம் ரூபாவும் புனரமைப்பு பணிகளுக் கென வழங்கப்பட்டுள்ளன.

அறநெறிப் பாடசாலைகளான ஏழாலை வடக்கு கண்ணகி அறநெறிப் பாடசாலைக்கு 75 ஆயிரம் ரூபாவும் , ஏழாலை சைவசன் மார்க்க அறநெறிப் பாடசாலைக்கு 75 ஆயிரம் ரூபாவும் தளபாடங்கள், உபகரணங்கள் கொள்வனவுக்கு பயன்படுத்த வழங்கப்பட்டுள்ளன.

(50-86)




சமாதானத்திற்கும் நல்லிணக்கத்திற்குமான பணியகத்தினால் நலிவுற்ற பிள்ளைகளுக்கான கற்றல் உபகரணங்கள் அடங்கிய பொதிகள் அண்மையில் ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாசாலையில் வைத்து அதிபர் ந.சிவகடாட்சம் தலைமையில் சண்டிலிப்பாய் கோட்டத்தைச் சேர்ந்த சங்கானை, தெல்லிப்பழை, ஆகிய பாடசாலை மாணவர்களுக்கு வழங்கப்பட்டன. இந்தநிகழ்வில் கலந்துகொண்ட அந்த நிறுவனத்தின் இயக்குநர் அருட்திரு பிரவின் மகேசன், அ.ம.தி அதிபர் ந.சிவகடாட்சம் ஆகியோர் மாணவர்களுடன் நிற்பதைப் படத்தில் காணலாம். [படம்:நவாலிச் செய்தியாளர்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "நேச்சுரஸ் சீக்கரட்" நிறுவனத்தின் உற்பத்திகள் 26 நாடுகளில் பயன்பாட்டில் உள்ளன



நான் திருமதி கமலாதேவி குணாளராஜ் (அழகுக்கலை நிபுணர்). உங்களுக்குத் தேவையான சிற்சில அழகுக்கலைக் குறிப்புக்களைத் தரவுள்ளேன். நான் எனது அழகுக்கலை பயிற்சிகளை இலங்கை, இந்தியா, தாய்லாந்து போன்ற நாடுகளில் உள்ள பிரபல்யமான அழகுக்கலை நிபுணர்களிடம் கற்ற பின்னரே எனது அழகுக்கலை வாழ்க்கையை ஆரம்பித்தேன். நான் இத்துறைக்கு வந்து சுமார் 10 வருடங்கள் ஆகின்றன. கொழும்பு, மட்டக்களப்பு போன்ற மாவட்டங்களில் அழகுக்கலை நிலையங்களையும் பயிற்சி வகுப்புகளையும் நடத்தி வருகின்றேன். அத்துடன் "நேச்சுரஸ் சீக்கரட்" நிறுவனத்தினரின் அழகு சாதன உற்பத்திகளுடன் ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் நேத்ரா தொலைக்காட்சியில் காலை 9.30 மணிக்கு உங்கள் அனைவரையும் சந்தித்து வருகின்றேன்.

முதலில் "நேச்சுரஸ் சீக்கரட் பியுட்டி கிரியேசன் லிமிட்டட்" நிறுவனத்தைப் பற்றிச் சொல்ல வேண்டும். இந்நிறுவனம் "ஹொறன" என்னும் இடத்தில் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. இது 350 ஏக்கர் நிலப்பரப்பை உள்ளடக்கியதாக ஹொறனையில் அமைக்கப்பட்டுள்ளது. இங்கு சுமார் 220 வகையான இயற்கைத் தாவரங்கள் வளர்க்கப்பட்டு அதன் மூலம் தங்கள் உற்பத்திகளை மேற்கொள்கின்றனர். இவ்அழகு சாதன உற்பத்திகள் இலங்கையில் மாத்திரம் அல்லாமல் வெளிநாடுகளிலும் பிரபல்யம் அடைந்து வருகின்றன. இவ் உற்பத்திகளைச் சுமார் 26 நாடுகளில் உள்ள மக்கள் பயன்படுத்துகின்றனர். ஐரோப்பிய நாடுகளில் இயற்கை அழகுசாதன உற்பத்திகளுக்காகக் கிடைக்கும் அதியுயர் சான்றுதலாக ISO, GMP சான்றிதழ் பெற்ற இலங்கையில் உள்ள ஒரே ஒரு நிறுவனம் "நேச்சுரஸ் சீக்கரட்" நிறுவனம் என்னும் பெருமையைத் தனதாக்கிக் கொண்டுள்ளது. இவை மாத்திரமின்றி 220 வகையான தாவரங்களின் விவரங்களை உள்ளடக்கிய 200 பக்கங்களைக் கொண்ட புத்தகமொன்றைத் தமது எதிர்காலச் சந்ததியினருக்காக வெளியிட்டுத் தமக்கென ஒரு அழியாத இடத்தைப் பெற்றுள்ளது.

இனி "நேச்சுரஸ் சீக்கரட்" நிறுவனத்தின் உற்பத்திகள் மூலம் செய்யக்கூடிய சிகிச்சை முறைகளைப் பற்றிப் பார்ப்போம். முதலில் நாம் பார்ப்பது ஒயில் மசாஜை எவ்வாறு முறையாகச் செய்வது என்பதாகும். ஒவ்வொரு ஆணும், பெண்ணும் தனது முடி நீளமாகவும் அடர்த்தியாகவும், பளபளப்புடன் இருக்க வேண்டும் என்பதில் ஆர்வம் காட்டுகின்றார்கள். காரணம் கூந்தல்தான் எம் அழகை மேலும் மெருகூட்டுகின்றது. இது மாத்திரமின்றிக் கூந்தல் தலைக்குக் கவசமாகவும் உடலின் சீதோஸ்ண நிலையைச் சரியாக வைத்துக்கொள்ளவும் உதவுகின்றது. இவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்த கூந்தலை எவ்வாறு பாதுகாப்பது என்பது பற்றிப் பார்ப்போம். தலைமுடியை மூன்று பிரிவாகப் பிரிக்கலாம்.

1. வறண்ட் கூந்தல்
2. எண்ணெய்ப் பசையுள்ள கூந்தல்
3. ஆரோக்கியமான கூந்தல்

தலை தோலில் பொதிந்துள்ள எண்ணெய்ச் சுரப்பிகளின் சுரப்பை அடிப்படையாக வைத்தே கூந்தலை இவ்வாறு வகைப்படுத்தலாம். ஏறக்குறைய அனைவருக்கும் பிறவியிலேயே நல்ல ஆரோக்கியமான கூந்தல் இருக்கும். ஆனால் கவனக் குறைவாலும், கூந்தலை ஒழுங்காகப் பராமரிக்காமையும், ஊட்டச்சத்துக் குறைபாட்டாலும் கூந்தல் வளர்ச்சி குறைகின்றது. இவை மாத்திரமன்றி உடல் நோய்கள் காரணமாகவும் கூந்தல் பாதிக்கப்படுகின்றது.

இன்று நாகரிக மாற்றத்தினால் எமது கூந்தலைப் பல்வேறுபட்ட சிகை அலங்காரங்களுக்கு உட்படுத்துகின்றோம். இவ்வாறு செய்வதில் எந்தப் பிழையும் இல்லை. இவ்வாறு செய்ய விரும்பினால் முறையாகப் படித்த அழகுக்கலை நிபுணரை நாடி தனது முடியைப் பரிசோதித்துத் தரமான பொருள்களைக் கொண்டு செய்யவும். அத்துடன் அழகுக்கலை நிபுணரின் ஆலோசனைக்கமைய கூந்தலைப் பராமரித்து வரவும். சம்போ கண்டிசன்களை முறையாகப் பயன்படுத்தி வரவும். போஷாக்கான உணவுகளை உட்கொள்ளவும். உணவில் கீரைவகைகளைச் சேர்த்துக்கொள்வது நல்லது. இவற்றுக்கு மேலாக இரண்டு கிழமைக்கு ஒரு தடவை விதம் ஒயில் மசாஜ் செய்வது கூந்தலுக்கு நல்லது.

ஒயில் மசாஜ் செய்யும் முறை:

தலைக்கு ஒயில் மசாஜ் செய்யத் தேவையான எண்ணெயை எடுத்து Double boil முறையில் சூடாக்கவும்.

முடியைச் சிக்கில்லாது சீவிக்கொள்ளவும்.

முடியைப் பாகங்களாகப் பிரித்துச் சூடாக்கிய எண்ணெயைப் பஞ்சில் தொட்டுப் பிரித்த பகுதிகள் அனைத்திலும் பூசிக் கொள்ளவும்.

பூசிய பின்னர் கைவிரல்களைக் கொண்டு மென்மையாக மசாஜ் செய்யவும்.

கை இரண்டையும் நெற்றிப் பகுதியில் வைத்து தலையினை முன் பகுதியை மசாஜ் செய்து கொள்ளவும்.

கைகளைத் தலையின் பின் பக்கம் வைத்து மென்மையாக உச்சிப் பகுதி வரை மசாஜ் செய்யவும் (விரல்களால்).

கைவிரல்களைப் புருவ மத்தியில் வைத்து மென்மையாக அழுத்தம் கொடுக்கவும். அவ்வாறே மென்மையாக மசாஜ் செய்யவும்.

அதன் பின்னர் தலையை (Head massager) ரில் வைத்துப் பத்து நிமிடங்கள் தலைக்கு ஆவி பிடிக்கவும்.

இவ்வாறு செய்வதால் தலைமுடியிலுள்ள மீன் செதில்கள். (கியுடிகல்) போன்ற பகுதிகள் திறக்கப்பட்டு எண்ணெய் நன்றாக முடியில் உறிஞ்சிக் கொள்ளப்படும். 10 நிமிடங்களின் பின்னர் மீண்டும் 5 அல்லது 10 நிமிடங்கள் மசாஜ் செய்யவும். பின்னர் சம்போ, கண்டிஸனர் போட்டுத் தலையை நன்றாகக் கழுவவும்.

இவ்வாறு இரண்டு கிழமைக்கு ஒரு தடவை செய்து வர நல்ல பயனைப் பெறுவீர்.

அழகுக்கலை நிபுணர்
திருமதி கமலாதேவி குணாளராஜ்

# சிவனொளிபாத மலையில் சித்தாலேப மருத்துவ விடுதி

இது சிவனொளிபாத மலைக்கு யாத்திரை செல்லும் காலமாகும். வாழ்வில் ஒருதடவை சிவன் பாதத்தைத் தரிசிப்பதுஎன்பது பெரும் புண்ணியமல்லவா? பெரும் திருப்பதியல்லவா? அது இலங்கையின் மக்கள் சிவன் பாதத்தைத் தரிசிப்பதற்கு காட்டிநிற்கும் கௌரவத்தையும், பக்தியையும் புலப்படுத்துகின்றது. இன,மதபேதமின்றி தெய்வ அருளுடன் அனைத்து மக்களும் ஆண்டுக்கு ஒருதடவை தரிசனம் செய்வது சிரமத்துக்குரியதே. என்றாலும் மார்கழிமாத பூரணையுடன் இந்தக் குதூகலமான பயணம் ஆரம்பமாகிறது. சிரமமிக்க வாழ்க்கையைச் சற்றுக் கைவிட்டு ஆன்மீக திருப்தியுடன் சிவன் பாதத்தைத் தரிசிக்கச் செல்லும் இந்த யாத்திரையின் நோக்கம் மன ஆறுதல் மற்றும் தம்மை பரிசுத்தமாக்கிக் கொள்வதுமேயாகும்.

நல்ல தண்ணிக்கு என்ற இடத்துக்கு அப்பால் தடம்பதிக்கும் இவ் மனங்கவரும் பறவைகளின் இனிய குரலோசைகளைச் செவிமடுத்தவாறு தமது தோள்களில் கனக்கும் பயணப்பொதிகளைச் சுமந்தவாறு வரும் யாத்திரிகளது தாகத்தைத் தீர்த்து அவர்களது சுமைகளை இலகுவாகிப் பொறுப்பேற்றுக் கொள்வதற்கும் சூடான பானங்களை அவர்களுக்கு வழங்கி உபசரிப்பதற்கும் தரப்பொன்று பார்த்திருக்கிறது.

இயற்கை எழிலை மனதில் நிரப்பிக் குதூகலிக்கச் செய்யும் சூழலில் கங்குல தன்னவில் அமைந்துள்ள சித்தாலேப மருத்துவ விடுதியில் கால்பதித்ததும் சிவனொளிபாத மலைக்கு வரும் யாத்திரிகளான சிறார்கள், இளவயதினர், வயதுவந்தோர், முதியவர்கள் என்போரின் முகங்களில் தவழும் புன்னகையானது அவர்கள் உணரும் பெரும் ஆறுதலையே வெளிப்படுத்தி நிற்கிறது. அந்த மன ஆறுதலைத் தரும் சித்தாலேப மருத்துவ விடுதியிலுள்ள அனுபவம் மிக்க பண்புடன் பழகும் திறமையான உத்தியோகத்தர்கள்குழு வழங்கி நிற்கும் உபசாரங்களின் இதம் பெரிதும் போற்றத்தக்கதல்லவா?

சிவனொளிபாதமலைக்கு யாத்திரை செய்யும் தங்களது வாகனங்களைச் சித்தாலேப நிறுவனத்தின் பாதுகாப்பில் நல்ல தண்ணியில் நிறுத்தி வைக்க முடியும். அங்கிருந்து சித்தாலேப மருத்துவ விடுதி வரையிலும் தங்களது பயணப் பொதிகளை இலவசமாகவே எடுத்துச் சென்று கையளிப்பதற்கு நம்பகமானவர்கள் சேவையில் அமர்த்தப்பட்டுள்ளனர்.

சித்தாலேப மருத்துவ விடுதியானது குளிரை அகற்றும் வெது வெதுப்பான அறைகள் பலவற்றைக் கொண்டுள்ளது. அவற்றோடு இணைந்த குளியலறைகளில் 24 மணிநேரமும் சுடுநீரைப் பெறும் வசதிகள் உள்ளன. அந்த அறைகளுக்கு நியாயமான கட்டணங்களே அறவிடப்படுகிறது. களைப்பை நீக்கி இரவில் மீளவும் யாத்திரையை ஆரம்பிக்கலாம். தங்களது விருப்புக்கேற்ப சூடான தேநீர், கோப்பி, நெஸ்கபே அல்லது மோல்ட் பானங்களைச் சுவைத்து மகிழ்வதற்கு இந்த மருத்துவ விடுதி வாய்ப்பளிக்கிறது.

காலை உணவு, சோறு கறிவகைகள், "பிறைற்றைஸ்" போன்ற உணவு வகைகளை நியாயமான விலைகளில் சுடச்சுடச் சுவைப்பதற்கு முடியும். அனைத்து உணவுகளும் சுகாதார முறைப்படியும், சுவைமிக்கதாகவும் சமையல்கலை நிபுணர்களால் தயாரிக்கப்படுகின்றன.

பாத தரிசனம் செய்ததன் பின்னர், மீளவரும் யாத்திரிகள் மருத்துவ விடுதியில் தங்கி இதமான சுடுநீரில் தம்மைச் சுத்தப்படுத்திக்கொண்டு தமது உணவுத் தேவைகளை நிறைவு செய்து கொள்ளவும், தேவைப்படின் தமது உடலுறுப்புக்களை விஞ்ஞானத் தொழில்நுட்ப சாதனங்கள் மூலம் ஒத்தடம் (மசாஜ்) இட்டுக்கொள்வது தொடர்பான சேவையை வழங்கவும் விசேடபயிற்சி பெற்றோர் சேவையில் அமர்த்தப்பட்டுள்ளனர். அதைத் தொடர்ந்து சூடான பானங்கள் உணவுத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொண்டதன் பின்னர், மலையிறங்கி நல்ல தண்ணியிலுள்ள எமது சித்தாலேப மருத்துவ விடுதியின் பாதுகாப்பிலுள்ள தங்களது வாகனங்கள் வரையிலும் தங்களது பயணப் பொதிகளை எடுத்துச் சென்று கையளிப்பதற்கு செயற்றிறன் மிக்க இளைஞர்களின் சேவையும் வழங்கப்படுகின்றது. கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்வதன் மூலம் சிவனொளிபாத கங்குலதன்ன சித்தாலேப மருத்துவ விடுதியின் அறைகளை முற்பதிவு செய்துகொள்ள முடியும்.

றோஹான்: 077 7668930/011 2736910
அஜித்: 052 5671964/072 2446639

விளம்பர வரணம்

# கையடக்கத் தொலைபேசிகளை வாங்கும்போது, உத்தரவாதத்திலும் உடல் பாதுகாப்பிலும் வாடிக்கையாளர்கள் கவனம் செலுத்த வேண்டும்

## சலா நிறுவனத்தின் முகாமைப் பணிப்பாளர் சிந்தக விஜேவிக்கிரம

"மலிவான விலையில் கிடைக்கிறது என்ற காரணத்திற்காக சில வாடிக்கையாளர்கள் உற்பத்தியாளரின் உத்தரவாதம் இல்லாத அல்லது தரம் குறைந்த கையடக்கத் தொலைபேசிகளை வாங்குகிறார்கள். சிறிது பணத்தை மீதப்படுத்திவிட்டோம் என்று அவர்கள் ஆரம்பத்தில் மகிழ்ச்சி அடைந்தாலும், காலப்போக்கில் கொடுத்த பணத்தையும் இழந்து வீணான உடல் நலப் பிரச்சினைகளையும் தேடிக் கொள்வார்கள். உத்தரவாதம் அற்ற மலிவான கையடக்கத் தொலைபேசிகள் ஒருசில வாரங்களில் செயலிழந்துவிடும் என்பதால், அவற்றை வாங்கி ஏமாற்றமடைவது புத்தியான காரியமல்ல. நீங்கள் சலா நிறுவனத்திடமிருந்து சம்சுங் கையடக்கத் தொலைபேசி ஒன்றை வாங்கினால், உற்பத்தியாளரின் உத்தரவாதத்தையும் விற்பனைக்குப் பிற்பட்ட சிறந்த பராமரிப்புச் சேவையையும் பெறுவீர்கள். சம்சுங் கையடக்கத் தொலைபேசிகள் கதிரியக்கத்தையும் ஏனைய உடல்நலக் கேடுகளையும் தடுக்கக் கூடிய ஃபில்டர்களை போதியளவில் கொண்டிருப்பதால் அவற்றின் பாதுகாப்புக் குறித்து பாவனையாளர்கள் எவ்வித அச்சமும் கொள்ளத் தேவையில்லை". என்று சலா எண்டர்பிறைசஸ் முகாமைப் பணிப்பாளர் சிந்தக விஜேவிக்கிரம தெரிவித்துள்ளார்.

சம்சுங் நிறுவனம் மிகவுயர்ந்த உடல்நலப் பாதுகாப்புத் தர நியமங்களை அனுசரிக்கின்றது. சர்வதேச ஒழுங்குபடுத்துநர்களால் விதிக்கப்பட்டுள்ள குறைந்தபட்ச பாதுகாப்பு நியமங்களைவிட அவை எவ்வளவோ மேலானதாகும். கையடக்கத்தொலைபேசிகளிலிருந்து வெளியேறும் கதிரியக்கத்தினால் மூளைக் கழலைகள், மூளைச் செயற்பாட்டுக் குறைபாடு போன்ற பல உடல்நலப் பிரச்சினைகள் ஏற்படுகின்றன என்பதற்கு இப்போது ஆதாரங்கள் கிடைத்துள்ளன. உயர்மட்டத்திலான கதிரியக்கத்தை வெளியேற்றும் மலிவான கையடக்கத் தொலைபேசிகளின் பாவனையை மக்கள் தவிர்க்க வேண்டுமென அனேகமான மருத்துவ நிபுணர்கள் தெரிவிக்கின்றனர். சம்சுங் கையடக்கத் தொலைபேசிகள் போதுமான அளவு ஃபில்டர்களை கொண்டுள்ளன. ஆகவே அவற்றைப் பயன்படுத்துபவர்கள் உடல்நலப் பிரச்சினைகள் குறித்து கவலைப்படத் தேவையில்லை. சர்வதேச தர நியமங்களைவிட ஒருபடி முன்னேற்றமான பாதுகாப்பு தர நியமங்களை சம்சுங் கடைப்பிடிப்பது பாவனையாளர்களின் நலனில் அது கொண்டுள்ள ஆழ்ந்த அக்கறைக்குச் சான்றாகும்.

கையடக்கத் தொலைபேசிகளைப் பொறுத்த வரையில் சம்சுங் என்ற வர்த்தகப் பெயர் இலங்கையில் விரைவாகப் பிரபல்யம் அடைந்து வருகிறது. வர்த்தகப் பெயரின் மீது பல்லாண்டு காலமாகக் கட்டியெழுப்பப்பட்ட நம்பிக்கை இதற்குக் காரணமாகும். இலங்கையில் சம்சுங் கையடக்கத் தொலைபேசிகளின் ஏக முகவராக சலா எண்டர் பிறைசஸ் நியமிக்கப்பட்டுள்ளது. 1992 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட சலா எண்டர் பிறைசஸ், அதனால் விநியோகிக்கப்படும் தரமுயர்ந்த சாதனங்கள் உன்னதமான விற்பனைக்குப் பிந்திய பராமரிப்புச்சேவை என்பவற்றின் காரணமாக வேகமாக முன்னேறி தகவல் தொழில்நுட்பப் பண்டங்கள் சந்தையில் ஒரு முன்னணி இடத்தைப் பிடித்துக் கொண்டது. சலா எண்டர் பிறைசஸ் நாடளாவிய கிளை வலயமைப்பைக் கொண்டிருப்பதால் நகரவாசிகள் மாத்திரமன்றி கிராம வாசிகளும் அவற்றினால் வழங்கப்படும் சாதனங்களை இலகுவில் வாங்கக் கூடியதாக இருக்கின்றது. சலா எண்டர் பிறைசஸ் வேறுபல உலகப் புகழ்பெற்ற டியிற்றல் சாதனங்களின் ஏக முகவராகவும் இலங்கையில் செயற்படுகின்றது. புறோலிங்க் , டிலக்ஸ், ஸ்னாசி, சீக்கோ, எமார், டீலூம் என்பனவும் அவற்றுள் அடங்கும்.

புதிய தொழில்நுட்பங்களை இலங்கைக்கு அறிமுகப்படுத்தும் முன்னோடியாகவும் சலா எண்டர் பிறைசஸ் விளங்குகின்றது. முதலாவது 'பென் ட்ரைவ்', முதலாவது லெசர் பிரின்டட் மும்மொழி கீ போட் என்பவற்றை அதுவே அறிமுகப்படுத்தியது. லேசர் பிரின்டட் மும்மொழி கீ போட், சலா எண்டர் பிறைசஸ் முகாமைப் பணிப்பாளர் சிந்தக விஜேவிக்கிரமவின் கண்டுபிடிப்பு என்பது குறிப்பிடத்தக்கது. உலகப் புகழ்பெற்ற சம்சுங் நிறுவனம் இலங்கையில் அதன் ஏக முகவராக சலா எண்டர் பிறைசஸ்ஸை நியமித்தமை சலா எண்டர் பிறைசஸ் வழங்கும் சர்வதேசத் தரமான சேவைகளுக்குக் கிடைத்த அங்கீகாரமாகும்.

சலா எண்டர் பிறைசஸ் தொழில்நுட்ப நிபுணர்களின் பக்கபலத்துடன் உற்பத்தியாளர்களின் உத்தரவாதம் வழங்கப்படுவதால் வாடிக்கையாளர்கள் மேலதிக நம்பகத்தன்மையைப் பெறுவார்கள். Omnia II , Omnia pro, Star, Corby, M3510, Beal, E2120, C450 & B130T என்பன உள்ளிட்ட பல முன்னற்றகரமான மொடல்கள் கையிருப்பில் உள்ளன. ஆகவே பாவனையாளர்கள் தமக்குத் தேவையான தொலைபேசியைத் தெரிந்து வாங்கலாம். புதிய வியாபரப் பங்காளித்துவம் ஏற்படுத்தப்பட்டுள்ளதைக் கொண்டாடும் முகமாக வெகுமதித் திட்டம் ஒன்றையும் சலா எண்டர் பிறைசஸ் ஆரம்பித்துள்ளது. கொள்வனவு செய்யப்படும் ஒவ்வொரு சம்சுங் கையடக்கத் தொலைபேசியுடனும் ஒரு வெகுமதி வாய்ப்பு வழங்கப்படும். சலா எண்டர் பிறைசஸ்ஸில் அல்லது அதன் கிளை ஒன்றில் 3,900 ரூபாவுக்கு மேல் பெறுமதி வாய்ந்த கையடக்கத் தொலைபேசியொன்றை வாங்குபவர்கள் அவர்களுக்கு வழங்கப்படும் 'சுரண்டுங்கள்-வெல்லுங்கள்' கூப்பனின் மூலம் இந்த வெகுமதியை வெல்ல முடியும்.

# TVS Apache RTR-160 மோட்டார் சைக்கிள்

ரி.வி.எஸ்.வேக ஓட்டத் தொழில் நுட்பத்தில் உருவாக்கப்பட்டுள்ள அதிநவீன மோட்டார் சைக்கிள் இது. எதிர்த்து நிற்கும் ஏனைய வகை சைக்கிள்களுக்கு சவால் விடும் நிலையில் இந்த சைக்கிள் உருவாக்கப்பட்டுள்ளது.

அதன் கவர்ச்சியான தோற்றம், கையாளக் கூடிய தகைமை, சவாரிக்கு ஏற்ற நிலைமை, இருக்கையின் அமைப்பு, அசைந்து கொடுக்கும் கைபிடி, சொகுசு மற்றும் அதன் அகன்ற சக்கர அமைப்பு யாவும் வாங்குவோருக்குப் பரசவசமூட்டுவதாகும். Apache-150 இல் காணப்பட்ட எல்லாவிதக் குறைபாடுகளும் அகற்றப்பட்டு இப் புதிய ரகம் உருவாக்கப்பட்டுள்ளது.

Apache RTR 160 சிசி சைக்கிள் இரண்டு வெவ்வேறு வகைகளில் கிடைக்கும்- ஒன்று 'கிக் ஸ்ராட்' மற்றது 'செல்ப் ஸ்ராட்'.

Apache 150 ஐ விட Apache RTR 160 மேம்படுத்தப்பட்ட என்ஜினைக் கொண்டுள்ளது. 5000 ஆர்.எம்.பி.வரை இதன் எஞ்சின் எதுவித குறிப்பிடக்கூடிய அதிர்வுகளுமின்றிச் செயற்படுகிறது.

Apache RTR 160 சிசி சைக்கிள் பார்வையைக் கவரும் விதத்தில் வடிவமைக்கப்பட்டுள்ளது. நாட்டில் உள்ள பல்வேறு கவர்ச்சிமிக்க வாகனங்களில் இதுவும் ஒன்று என கூசாமல் கூற முடியும். இதனைப் பயன்படுத்தும்போது சகலவிதமான முன்னேற்ற அம்சங்களையும் கொண்ட வாகனத்தைச் செலுத்தும் உணர்வு ஏற்படும் என்பதில் சந்தேகமில்லை.

பன்னலையில் நடைபெற்ற தகுதிகாண் ஓட்டப் போட்டியில் இந்தியாவில் தயாரிக்கப்பட்ட ஏனைய மோட்டார் சைக்கிள்களைத் தோற்கடித்து முதல் இடத்தை இது பெற்றமை குறிப்பிடத்தக்கது. இலங்கை ஓட்டப்போட்டி சாரதிகள் சங்கத்தினரோடு இணைந்து இந்திய மோட்டார் சைக்[illegible]தப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயர்தரப் பரீட்சையில் உயர் பெறுபேறுகளைப் பெற்று கல்வித்துறையில் புகழ் சேர்த்த மாணவர்கள்

2009ஆம் ஆண்டு நடைபெற்ற ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் அண்மையில் வெளியாகின. இதில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று கல்வித்துறையில் சாதனை புரிந்த மாணவர்களின் அனுபவங்களையும் அவர்களது கருத்துக்களையும் உதயன் தொடர்ச்சியாக வெளிப்படுத்த உள்ளான். அதில் ஒரு பகுதி இங்கு பிரசுரமாகின்றது.

சந்திப்பு :
தமிழ்வண்ணன்,
வடநம்பி,விக்ரோறி



## சுவர்ணா சச்சிதானந்தம்

**வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை**

**உயிரியல் பிரிவு - 2ஏபி மாவட்ட நிலை - 09**

இப்பெறுபேறு கிடைத்தது எனக்கும் பெற்றோருக்கும் மிக்க மகிழ்ச்சியைத் தருகிறது. இதற்குக் காரணம் கடவுளின் கிருபையும், பெற்றோர்கள், கல்விச் சமூகத்தினர், உறவினர்கள் தந்த ஊக்கமே தரம் 5 வரை கல்வயல் ஸ்ரீ சண்முகானந்த வித்தியாலயத்திலும் 6 முதல் ஜி.சீ.ஈ சாதாரண தரம் வரை சாவகச்சேரி இந்துக் கல்லூரியிலும் ஜி.சீ.ஈ உயர்தரத்தை வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையிலும் கற்றேன். தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்ததுடன் ஜி.சீ.ஈ சாதாரண தரத்தில் 10ஏ பெறுபேறு பெற்று சித்தியடைந்தேன்.

சிறு வயது முதலே வைத்தியராக வேண்டும் என்ற விருப்பம் என்னுள் இருந்ததால் உயர்தரத்தில் உயிரியல் பிரிவை சுயவிருப்பின் பேரில் தெரிவு செய்து கொண்டேன். எனது தாயாரின் விருப்பமும் அதுவே. என்னால் இயன்றவரை முயற்சி செய்தேன். கடந்தகால வினாக்களை மீண்டும் மீண்டும் செய்ததால் துணிச்சலுடன் பரீட்சையை எதிர்கொள்ள முடிந்தது.

எனது பெறுபேற்றிக்கு துணாக நின்று உதவிய பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், தனியார் கல்வி நிறுவன ஆசிரியர்கள், நண்பர்களிற்கும் எனது வெற்றியை அனைவருடனும் பகிர்ந்து கொள்ள வாய்ப்பளித்த 'உதயன்' இற்கும் எனது மனப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



## தனுஜா உருத்திரகோடீஸ்வரன்

**வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை**

**கணிதப்பிரிவு - 3ஏ மாவட்டநிலை - 14**

வகுப்பறையில் ஆசிரியர்கள் பாடங்களைக் கற்பிக்கும் வேளையிலேயே அவற்றை இயன்றவரை கிரகித்துக் கொண்டமையும் பாடங்களில் எழுந்த சந்தேகங்களை ஆசிரியர்களிடமும், நண்பிகளிடமும் கேட்டு விளங்கிக் கொண்டமையும் அனைத்துப் பாடங்களிலும் தேவையான அளவிற்கு வினாக்களை செய்து பார்த்தமையும் நான் இப்பெறுபேற்றை பெற பெரிதும் உதவின. எனக்கு கல்வி புகட்டிய அனைத்து ஆசிரியர்களினதும் பாடசாலை அதிபரினதும் சிறந்த வழிகாட்டலும், ஊக்குவிப்பும் இப்பெறுபேற்றை பெற பெரிதும் உதவின. இறைவனது ஆசியும், குடும்பத்தினரது ஊக்குவிப்பும், நண்பிகளினது ஊக்குவிப்பும் பக்கபலமாக இருந்தது. கேட்கப்பட்ட வினாக்களிற்கு இயன்றவரை தெளிவாகவும், சரியான முறையிலும் பதில்களை உரிய நேரத்தில் எழுதி முடித்தல் வேண்டும் என்பதே பரீட்சை எழுதும்போது எனது எண்ணமாக இருந்தது. இந்தப் பெறுபேறு கிடைக்கும் என எதிர்பார்த்து இருந்தேன். பரீட்சை எழுதும்போது தெளிவான மனநிலையிலும் நிதானத்துடனும் இருந்தமையால் இப்பெறுபேறு கிட்டும் என எதிர்பார்த்திருந்தேன். எதிர்பார்த்த பெறுபேறு கிடைத்தமை எனக்கு பெருமகிழ்ச்சியை அளித்தது.

எதிர்காலத்தில் நன்கு கல்வி கற்று பொறியியலாளராகி சமூகத்திற்கு சிறந்த சேவை ஆற்றி நற்பிரஜையாக வாழ வேண்டும் என்பதே எனது இலட்சியம். இதற்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.



## வயிரமுத்து நிஷாந்தி

**மகாஜனக் கல்லூரி**

**கலைப்பிரிவு - ஏ2பி மாவட்டநிலை - 47**

நான் தரம் 6 இல் இருந்து மகாஜனக் கல்லூரியில் கல்வி கற்று வருகின்றேன். எனது சொந்த இடம் மயிலிட்டி தற்போது அளவெட்டி வடக்கில் வசித்து வருகிறேன்.

நான் வீட்டில் கடைசிப்பிள்ளை, எனது சகோதரர்கள் இடையில் படிப்பை நிறுத்தி விட்டார்கள், நான் மட்டும் தான் விடாமுயற்சியுடன் படித்தேன். எனக்கு ஏழு வயதில் எனது அப்பா இறந்து விட்டார். எனது கல்விக்குத் தேவையான அனைத்துப் பணவசதிகளையும் எனது அண்ணாமார் இருவரும் எந்தக்குறையுமின்றி தருவார்கள்.

எனது அம்மா, அக்காமார் , அண்ணாமார் எல்லோரும் எனது குடும்பத்தில் நான் என்றாலும் பல்கலைக்கழகம் செல்ல வேண்டும் என்று அக்கறையுடன் என்னைக் கற்பித்தார்கள். அவர்களின் கனவு நிறைவேற வேண்டும் என்ற ஆசையுடன் படித்தேன்.

நான் கலைப்பிரிவில் தமிழ், நாடகமும் அரங்கியலும், அளவையியலும் விஞ்ஞானமுறையும் ஆகிய பாடங்களைத் தெரிவு செய்து கற்றேன்.

எனக்குப் பரீட்சைக்கு 2 மாதங்களுக்கு முன்பு நெருப்புக் காய்ச்சல் வந்து என்னால் பரீட்சை எழுத முடியுமோ என்று நான் மிகவும் கவலையான நிலையில் இருந்தேன்.

இரண்டுமாதம் என்னால் படிக்க முடியவில்லை. ஆனாலும் பின்பு விடா முயற்சியுடன் படித்தேன்.

நான் கற்பதற்கு மிகவும் ஊக்கப்படுத்திய பாடசாலை அதிபர் மற்றும் எனக்கு கற்பித்த பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் தனியார் கல்வி நிறுவன ஆசிரியர்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

எனக்குப் பிடித்த பாடம் நாடகமும் அரங்கியலும் நான் பகல் நேரங்களில் அதிகம் படிப்பேன். காலையிலும் படிப்பேன். கடைசி 7 மாதங்களும் ஒரு நாளில் 4 அல்லது 5 மணிநேரம் 3 பாடங்களையும் படிப்பேன். இரவில் படிப்பது குறைவு, இரவில் ஒரு மணித்தியாலம் படிப்பேன்.

எனது எதிர்கால இலட்சியம் ஒரு ஆசிரியராக வந்து பல மாணவர்களுக்கு வழிகாட்டியாக இருக்க வேண்டும் என்பதே ஆகும்.



## நிருஷிகா சோதிநாதன்

**வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை**

**உயிரியல்பிரிவு - ஏ2பி மாவட்டநிலை - 25**

நான் இத்தகைய பெறுபேற்றை பெற்றதனையிட்டு மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன். எனது ஆரம்பக்கல்வியை உடுவில் மகளிர் கல்லூரியிலும், பின்னர் தரம் 6 இலிருந்து உயர்தரம் வரை வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையிலும் கற்றேன்.

நான் இறை நம்பிக்கையுடனும் தன்னம்பிக்கையுடனும் கற்றமையும், ஆசிரியரின் வழிகாட்டலும், பெற்றோரின் ஊக்குவிப்பும் இப்பெறுபேற்றினைப்பெறக் காரணமாய் அமைந்தது. மூன்று பாடங்களிலுமுள்ள ஒவ்வொரு பாட அலகுகளையும் கற்றபின் அவ்வலகிற்கான கடந்த கால வினாக்களைச் செய்து பார்ப்பேன். இதனால் பரீட்சைக்குத் தேவையான விடயங்களை என்னால் புரிந்து கொள்ள முடிந்தது.

மாணவர்கள் தம் சுயகற்றலுக்கான நேரத்தை ஒதுக்கி என்னால் முடியும் என்ற எண்ணத்துடன் முயற்சி செய்து கற்றால் சிறந்த பெறுபேற்றினைப்பெற முடியும். இப்பெறுபேற்றினைப் பெறுவதற்கு உந்துதலாயிருந்த எனது பாடசாலை அதிபர், ஆசிரியர்களுக்கும், தனியார் கல்வி நிலைய ஆசிரியர்களுக்கும், எனது பெற்றோர், அம்மப்பா, அம்மம்மா, சகோதரி, மற்றும் நண்பர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.



## வடிவேல் சுஜேந்திரன்

**கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்**

**கணிதப்பிரிவு - 2ஏபி மாவட்டநிலை - 28**

எனது ஆரம்பக் கல்வியை நல்லூர் காசிப்பிள்ளை வித்தியாலயத்தில் ஆரம்பித்து பின்னர் எனது மேல்வகுப்பினை கனகரத்தினம் மகா வித்தியாலயத்தில் தொடர்ந்தேன். ஜி.சி.ஈ. (சா/த) பரீட்சைக்குத் தோற்றியபின்னர் எனது குடும்பத்தார் என்னை நகர்ப்புறப் பாடசாலையில் சேர்க்க வேண்டும் என விரும்பினர். சேர்வதற்கான வாய்ப்பு வசதிகள் எல்லாமிருந்தும் நான் தொடர்ந்தும் எனது பாடசாலையிலேயே ஜி.சி.ஈ. உயர்தர வகுப்பினையும் கற்க வேண்டும் என மறுத்து விட்டேன்.

அதே பாடசாலையில் இருந்து பல்கலைக்கழகம் செல்ல வேண்டும் என்ற உறுதியுடன் கல்வி கற்றேன். பெற்றோர், சகோதரர்களின் வழிகாட்டலும் ஆசிரியர்களின் அறிவூட்டலுமே எனது வெற்றிக்குப் காரணமாக இருந்துள்ளன. எனது சகோதரர் ஒரு பொறியியலாளராக இருந்ததால் அவரின் ஆலோசனைகள் எனக்கு பெரும் உதவியாக இருந்தது. எல்லாவற்றிற்கும் மேலாக நான் வணங்கும் தெய்வமாம் அன்னை பராசக்தியின் அருட்கடாட்சமே என் வெற்றிக்கு வழி காட்டியது என்றால் மிகையாகாது.

இரவு வேளை எல்லோரும் தொலைக் காட்சி பார்க்கும்போது நானும் சேர்ந்து பார்ப்பேன், ஆயினும் எல்லோரும் உறங்கும்போது நான் உறங்காது விழித்திருந்து அமைதியாகக் கற்பேன் பகல் வேளைகளில் நண்பர்களுடன் சேர்ந்து கற்பேன். இரவு வேளைகளில் தனியாக கற்பேன். கிராமப் புறப்பாடசாலைகளை ஒதுக்காது எல்லோரும் தங்கள் அயல் பாடசாலை களில் கல்வி கற்று சிறந்த பெறுபேறுகளைப் பெறுவதன்மூலம் அப்பாடசாலைகளுக்கும் தனக்கும் தன் குடும்பத்திற்கும் பெருமை சேர்க்க வேண்டும்.

பல ரூபா பணம் செலவு செய்து நகரப் புறப் பாடசாலைகளுக்கு முண்டியடித்து ஓடுவதால் மட்டும் எதுவும் நடந்து விடாது. ஒரு சில பாடசாலைகளால் மட்டும் சிறந்த பெறுபேறுகளைப் பெற முடியும் என்பது திறமைசாலிகள் எல்லோரும் அங்கு போவதே காரணம். அவர்கள் கிராமப்புறப் பாடசாலைகளில் இருந்தாலும் சிறந்த பெறுபேறுகளைப் பெற முடியும். கல்வியானது பரவலாக அபிவிருத்தியடைய வேண்டும் அதற்கு எல்லோரும் உதவ வேண்டும் என்பதே என் விருப்பம்.



## தக்ஷாயினி லோகேஸ்வரன்

**வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை**

**கணிதப்பிரிவு - ஏ2பி மாவட்டநிலை - 47**

எனது இந்தப் பெறுபேற்றை அடைவதற்கு எனது பெற்றோரினதும் சகோதரர்களினதும் அன்பும் ஆதரவும் ஊக்குவிப்பும் விநாயகரின் அருளும் என்பதை இங்கு தெரிவிப்பதில் பேருவகை அடைகிறேன்.

நான் எனது 5 வயதில் ஏற்பட்ட இடம்பெயர்வு காரணமாக எனது தரம் ஒன்றிற்கான கல்வியை வவுனிக்குளம் பாலிநகர் மகா வித்தியாலயத்தில் மேற்கொண்டேன். பின் ஏற்பட்ட சுமூக நிலையினால் யாழ்ப்பாணத்திற்கு திரும்பி வந்து எமது கிராமப் பாடசாலையான தாவடி இந்து தமிழ்க் கலவன் பாடசாலையில் தரம் 2 இலிருந்து கல்வி கற்று தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் 177 புள்ளிகள் பெற்றதன் மூலம் எனது தொடர் கல்வியை யாழ்.வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் தொடர முடிந்தது.

சாதாரண தரப் பரீட்சையில் 7ஏ2பிசி எனது பெறுபேறாகும். எனக்கு சிறுவயது முதலே கணிதத்தில் ஏற்பட்ட ஆர்வம் காரணமாக உயர்தரத்தில் கணிதத் துறையை தெரிந்தெடுத்தேன். எனது உறவினர்கள் என்னை விஞ்ஞான துறையை தெரிந்தெடுக்குமாறு கூறிய நிலையிலும் எனது விருப்பமே தங்கள் விருப்பம் என எனது குடும்பத்தார் எனக்களித்த ஆதரவின் காரணமாக இன்று எனது இலட்சியத்தின் ஆரம்பப் படியை அடைந்திருப்பதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

நான் உயர்தரத்தில் பாடவேளை தயாரித்து படித்தமை, அதிக கடந்தகால வினாக்களை செய்தமை, வகுப்புகளில் விளங்காத பாட விளக்கங்களை ஆசிரியர்கள், சகோதரர்கள் சகபாடிகளிடம் கேட்டு விளங்கியமை ஆகியவையும் இறுதி நேரத்தில் கடந்தகால வினாக்களை சகபாடிகளுடன் கலந்துரையாடி மீட்டமையும் எனது பெறுபேற்றினைப் பெற நான் எடுத்துக்கொண்ட சில முயற்சிகளாகும்.

மற்றும் எனது சகோதரர்களும் உயர்தரத்தில் கணிதத்துறையை தெரிந்தெடுத்தமையால் உயர்தரக் கல்வியை கற்பதற்கான சில விளக்கங்கள், எளிய வழிகள் என்பவற்றை பெற்றதன் மூலம் உயர்தரக் கல்வியை நான் இலகுவாக எதிர்கொள்ள முடிந்ததை இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

எனது இப்பெறுபேற்றுக்குக் காரணமான எனக்கு கல்வி புகட்டிய அத்தனை ஆசிரியர்களுக்கும் எனது பாடசாலை அதிபர் மற்றும் என்னை ஊக்குவித்த எனது பாடசாலை ஆசிரியர்கள், ஆரம்பப் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் எனது சிறுவயது முதலேயான எனது கணித ஆசான் ஆகியோருக்கு இந்நேரத்தில் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

எதிர்காலத்தில் சிறந்த பொறியியலாளராகி அதன் மூலம் எனது குடும்பத்திற்கும் ஊரிற்கும் பாடசாலைக்கும் பெருமை சேர்க்கும் வகையில் திகழ வேண்டும் என்பதே எனது அவாவும் இலட்சியமுமாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் தீர்வு நிராகரிக்கப்பட்டால் மீண்டும் போர் வெடிக்கும்?

கொழும்பில் இயங்கும் மனித உரிமைகள் காப்பகத்தைச் சேர்ந்த சட்டத்தரணி கருணாரத்ன ஹேரத் 'ராவய' இதழில் எழுதிய கட்டுரையின் தமிழ் வடிவம் இது. தமிழில் தருபவர் : சரா

இன்று, அரசமைப்பின் 13 ஆவது திருத்தம், தொடர்பாக நாட்டில் அரசியல் அலசலொன்று களமிறங்கியுள்ளதைக் காணமுடிகிறது. விடுதலைப் புலிகள் அமைப்பு தோற்கடிக்கப்பட்டு யுத்தமென்ற சவால் வெற்றி கொள்ளப்பட்டதையடுத்து நாட்டில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்திவிடும் தீர்வுமார்க்கமொன்ருக அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்துக்கு அப்பால் செல்லும் விதத்திலான அதிகாரப் பகிர்வு வழங்கப்படுமென சர்வதேச சமூகத்துக்கு அரசினுல் வழங்கப்பட்ட உறுதி மொழியையும், அனைத்துக் கட்சிக் குழுவின் சிபாரிசுகளையும் அடித்தளமாகக் கொண்டே இப் புதிய அரசியல் சர்ச்சை தலை தூக்கியுள்ளது.

அரசின் இந்த அரசியற் செயற்பாட்டிற்கு எதிராக எழுந்து நிற்கும் தரப்புகளுள் ஆரம்பம் முதலே இந்த அதிகாரப் பகிர்வு யோசனையை எதிர்த்து வந்துள்ள ஜே.வி.பி., மக்கள் ஐக்கிய முன்னணி போன்ற அரசியல் கட்சிகளும், ஜாதிக ஹெல உறுமய, நாட்டுப்பற்றுள்ள மக்கள் அமைப்பு உட்பட பல்வேறு மக்கள் அமைப்புக்களும் முன்னணியில் நிற்கின்றன. அதிகாரப் பகிர்வுக்கு எதிராகப் போர்க்கொடி தூக்கி



நிற்கும் அதிகாரத்தரப்புக்களால் முன் வைக்கப்பட்டு வரும் முக்கிய வாதமாகியிருப்பது, நந்திக் கடல் பிரதேசத்தில் வைத்து விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரன் கொலையுண்டதன் தொடர்ச்சியாக இலங்கை இராணுவத்தால் விடுதலைப் புலிகள் அமைப்பு நிர்மூலமாக்கிவிடப்பட்டிருக்கும் நிலையில் மீளவும் எவ்விதத்திலுமான அதிகாரப் பகிர்வொன்றுக்கு அவசியமேயில்லை என்பதாகும்.

ஆனாலும், போர்ப்பலம் கொண்ட தீவிர சக்தியொன்றை போர் ரீதியில் தோற்கடித்து விட்டாலும் கூட அரசியல் பிரச்சினைகளை யுத்த மொன்றில் மூலம் முடிவுக்கு கொண்டுவர முடியாது. விடுதலைப் புலிகள் அமைப்பை ஆயுதமேந்திய யுத்தமொன்றுக்கு தள்ளிச் சென்றது பல தசாப்த காலமாகத் தீர்த்து வைக்கப்படாதிருந்த அரசியல் பிரச்சினையொன்றுக்குள் சிக்குண்டிருந்த தமிழ் மக்களேயென்பதை நாம் மறந்துவிட இயலாது. யுத்தத்தின் மூலம் புலிகளின் போர்ப்பலம் சிதைத்து விடப்பட்டாலும் கூட இற்றைவரையிலும் தீர்த்து வைக்கப்படாத தீர்வொன்றை எட்டாத தமிழ் மக்கள் முன்னுள்ள சிக்கலுக்கு அரசியல் தீர்வொன்று வழங்கப்படாதிருக்கும் நிலையில் மேற்படி அரசியல் பிரச்சினையானது, எதிர்காலத்தில் மேலுமொரு போரியல் குழுவொன்றின் வளர்ச்சிக்கான ஜன்ம பூமியாக ஆகிவிடக்கூடும்.

அதற்கும் மேலதிகமாக இலங்கையரசுக்குப் பயங்கரவாத யுத்தத்தைத் தோற்கடித்த தனது யுத்த வெற்றிக்கு அப்பால் சர்வதேச சமூகத்துடன் மனித உரிமைகள் மீறப்பட்டமை தொடர்பான மேலுமொரு யுத்தத்துக்கும் முகம் கொடுக்க வேண்டி நேர்ந்திருந்த தென்பதையும் நாம் மறந்துவிடக்கூடாது. அப்போராட்டத்தில் வெற்றியீட்டிக் கொள்வதற்கு இலங்கைக்கு பக்க பலமாக நின்ற இந்தியா, ரஷ்யா, சீன, பாகிஸ்தான் உள்ளிட்ட நாடுகள் ஒத்துழைப்பு வழங்கி நின்றமைக்கு, தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினை வெற்றிகரமான தொரு செயற்பாட்டின் மூலம் தீர்த்து வைக்கப்ப டுமென அவர்களுக்கு வழங்கப்பட்டிருந்த உறுதி மொழியே காரணமாகியிருந்தது. அந்த வகையில், அந்த வாக்குறுதியைக் காப்பாற்றும் பெரும் பொறுப்பையும் கூட இலங்கையரசு நிறைவேற்ற வேண்டியுள்ளது.

தமிழ் மக்கள் முன்னுள்ள இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வைத் தேடிப் பெறும் விடயத்தில், உண்மையிலேயே அவர்களுக்கு ஏற்பட்டுள்ளதாகக் கருதப்படும் அநீதியை அல்லது அவர்கள் சமநிலையில் வைத்துக் கருதப்படாத தன்மையை தெளிந்துணர்ந்து கொள்ள வேண்டியுள்ளது. இந் நாட்டில் ஆங்கிலேயரது ஆட்சி நிலவிய காலகட்டத்தில் இந்நாட்டின் தமிழ் மக்கள் தமக்கென்றொரு புறம்பான



நிர்வாகத்தையோ, ஒரே நாடென்ற ஐக்கிய இலங்கைக்குள் சமஷ்டி நிர்வாகமொன்றையோ கோரி நின்றதில்லையென்பது வரலாற்றை உற்று நோக்குகையில் தெளிவாகிறது. 1930 ஆம் மற்றும் 1940 ஆம் ஆண்டு காலங்களில் அன்றைய அரசியல் பிரமுகரொருவரான ஜீ.ஜீ. பொன்னம்பலத்தால் முன்வைக்கப்பட்ட ஐம்பதுக்கு ஐம்பது கோரிக்கை கூட தமிழ் மக்களால் நிராகரிக்கப்பட்டதோடு ஏறத்தாழ 1950களில் புறம்பானதொரு இராச்சியத்தைக் கோரி தனித்தொரு போராட்டத்தை மேற்கொண்ட எஸ். சுந்தரலிங்கத்தின் வாதமும் கூட தமிழர் அரசியலினுல் அப்போது நிராகரிக்கப்பட்டது என்பதை நாம் மறந்து விடக்கூடாது.

1926 இல் இளைய தலைமுறை அரசியல் வாதியொருவரான எஸ்.டபிள்யூ. ஆர்.டீ. பண்டார நாயக்கா, இலங்கைக்குப் பொருந்தும் நிர்வாக முறைமை சமஷ்டி நிர்வாகமேயாகுமென கருத்து வெளிப்படுத்தி நின்ற வேளையில், தமிழ் அரசியல்வாதிகளால் அது நிராகரிக்கப்பட்டு ஒற்றையாட்சி நிர்வாக முறைமையின் அவசியம் விதைத்துரைக்கப்பட்டுள்ளது. பத்திரிகைக்கு (1926.07.17. ) அன்று கருத்து வழங்கியிருந்த பிரமுகர் ஜேம்ஸ். ரீ. ரத்தினத்தின் கருத்து வெளிப்பாடு இது:

## சமாதானத்துக்கான நிரந்தர அரசியல் தீர்வைக்கான திறக்கப்பட்டுள்ள கதவு அதற்கு வழி விடுமா?

இலங்கைக்கு இனவாத ஆட்சி முறைமையொன்றை முன்வைப்போரின் குறிக்கோளாயிருப்பது மக்களிடையே ஒருமைப்பாட்டை உருவாக்குவதே எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவ்வாருன போதிலும், இந்த நாட்டு மக்களை பேதப் படுத்திவிடுவதற்கு அதைவிடப் பொருத்தமான வேறு அரசியல் முறைமையொன்று இல்லையென்பதே எனது நிலைப்பாடாகும் - என்றவாறு அமைந்திருந்து.

இலங்கை சுதந்திரமடைந்ததன் பின்னர் சமஷ்டி நிர்வாக முறைமை குறித்த அரசியல் கருத்தை முன்வைத்த எஸ்.ஜே.வி. செல்வநாயகத்தின் தமிழரசுக்கட்சி (சமஷ்டிக் கட்சி) கூட இலங்கை இராச்சியத்திலிருந்து வேறுபட்டு நிற்கும் இராச்சியமொன்று தொடர்பான கோரிக்கையை முன்வைத்ததில்லை. 1957 ஆம் ஆண்டில், அன்று வரையிலும் அரச கரும மொழியாகவிருந்த ஆங்கில மொழி நீக்கப்பட்டு சிங்கள மொழி அரசகரும மொழி யாக்கப்பட்ட மொழிச்சட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டமை, முதற்தடவையாக இலங்கையினுள் தாம் இரண்டாம் பட்சமான உரிமைகளுக்குரித்தாகும் குறைத்து மதிப்பிடப்படும் இனமொன்றே என்ற உணர்வை தமிழ் மக்களிடையே ஏற்படுத்தக் காரணமாகியிருந்தது. மேற்படிக் கருத்தியலின் காரணமாக தமிழ் சமூகங்களால் முன்னெடுக்கப்பட்ட போராட்டங்களின் விளைவாகவே 1957இல் பண்டாரநாயக்கா செல்வநாயகம் இடையிலான ஒப்பந்தமொன்று முகிழ்ந்தது. அப்போது கூட, பெரும்பான்மையாகத் தமிழ் மக்கள் வாழும் பிரதேசங்களில் செயல்படும் அரச அலுவலகங்கள் மற்றும் நீதிமன்றங்களில் தமிழ் மொழியைப் பயன் படுத்துவதற்கான உரிமை மற்றும் அப்பிரதே சங்களில் அரசினுல் மேற்கொள்ளப்படும் விவசாயக் குடியேற்றங்களில் காணிகளற்ற மேற்படி பிரதேச வாசிகளுக்கே முன்னுரிமை வழங்கப்படவேண்டும் என்பவையே தமிழ் மக்களின் கோரிக்கைகளாக இருந்துள்ளன.

இந்த மிக இலகுரக கோரிக்கைகள் கூட நிறைவேற்றப்படுவதற்குத் தடைகளை ஏற்படுத்தி நின்ற குறுகிய மனப்பாங்கு கொண்ட சிங்கள இனவாதிகள் அந்த ஒப்பந்தம் நடைமுறைப்படுத் தப்படுவதையும் புறமொதுக்கச் செய்தனர். அதன் பின்னர் 1965ஆம் ஆண்டில் அன்றைய பிரதமர் டட்லி சேனநாயக்கா செல்வநாயகம் இடையிலான ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. இந்த ஒப்பந்தத்திலும் கூட 1957இன் ஒப்பந்தத்தில் முன்வைக்கப் பட்டிருந்த கோரிக்கைகளுக்குச் சமமான சில கோரிக்கைகள் கூடத் தமிழ்மக்களுக்கு வழங்கப்படாத விதமாக அந்த அரசைத் தடுத்து



விடும் அளவுக்கு இந்நாட்டுச் சிங்கள இனவாதிகள் செயற்பட்டிருந்தனர்.

இலங்கையில் அடிமைத்தளை ஆட்சி நிலவிய யுகத்திலும், நாடு சுதந்திரமடைந்ததன் பின்னர், 1972இல் இலங்கைக் குடியரசு என்ற அரசமைப்பு முறை கொண்டுவரப்படுவதற்கு முன்னரான நிர்வாகக் காலத்திலும் ஜனநாயகவாத வழிமுறையிலான நியாயமான கோரிக்கைகளுடன் மட்டும் தமிழர்களது அரசியல் வியூகம் தம்மை வரையறுத்துக் கொண்டிருந்தது.

(மிகுதி நாளை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கரித்தாஸ் கியூடெக் நிறுவனத்தின் ஏற்பாட்டில் யாழ். பெரிய கடை மாதர் அபிவிருத்திச் சங்கத்திற்கு வாழ்வாதார திட்ட சுய தொழில் சுழற்சிக் கடன் வழங்கும் நிகழ்வும், சங்க அலுவலக திறப்பு விழாவும் அண்மையில் நடைபெற்றன.

இந்த நிகழ்வில் கியூடெக் நிறுவன இயக்குநர் அருட்திரு சி.ஜி.ஜெயக்குமார் யாழ்.பிரதேச செயலர் திருமதி சுகுணரதி தெய்வேந்திரம், உதவிப் பிரதேசசெயலர் திருமதி அஞ்சலிதேவி சாந்தசீலன், யாழ் மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி தவமணி ஜெயராஜன், யாழ்.பிரதேச கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி மாலினி பாஸ்கரன் ஆகியோர் கலந்து கொண்டதையும் யாழ்.பிரதேச செயலர் திருமதி தெய்வேந்திரம் பயனாளி ஒருவருக்கு கடன் தொகை வழங்குவதையும் படங்களில் காணலாம்.

## கப்பலில் உள்ள அகதிப் பெண்ணிடம் இந்தோனேஷியச் சிப்பாய் சேஷ்டை

இந்தோனேஷியக் கடற்பரப்பில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அகதிப் பெண் ஒருவர் மீது இந்தோனேஷியக் கடற்படைச் சிப்பாய் ஒருவர் தப்பாக நடந்து கொள்ள முயன்றார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது

இந்தோனேஷியக் கடற்பரப்பில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கப்பலில் தங்கியிருந்த பெண்ணொருவரின் குழந்தைக்கு சுகயீனம் ஏற்பட்டது. அதேநேரம் கப்பலில் இருக்கும் இன்னொருவருக்குக் கண்ணில் கோளறு ஏற்பட்டது. இவர்களை துறைமுக வைத்தியசாலைக்கு அழைத்துச் சென்று வைத்திய பரிசோதனைக்குட்படுத்தும் நோக்கோடு குறிப்பிட்ட இப்பெண் மொழி பெயர்ப்பாளராகச் சென்றிருந்தார்.

இதன்போது அங்கு பணி புரிந்த கடற்படைச்சிப்பாய் ஒருவர் இப் பெண்ணிடம் தப்பாக நடக்க முயற்சித்தார் எனத் தெரிவிக்கப்படுகிறது. (சி)

## கிளிநொச்சி வைத்தியசாலையை அபிவிருத்தி செய்ய நடவடிக்கை

கிளிநொச்சி வைத்தியசாலையை துரிதத் திட்டமொன்றின் மூலம் மீண்டும் அபிவிருத்திசெய்வதற்கு சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது. இது தொடர்பாக ஆராய சுகாதார அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா கடந்த வெள்ளியிரவு கிளிநொச்சிக்கு விஜயம் செய்தார்.

யுத்த காலத்தின்போது இந்த வைத்தியசாலையின் பிரதான கட்டடம் தவிர ஏனைய அனைத்துப் பௌதீக வளங்களும் அழிக்கப்பட்டிருந்தன.

இந்நிலையில் இதனைப் புனரமைப்புச் செய்வதுடன் ஒரு வார காலத்திற்குள் இவ் வைத்தியசாலைக்குத் தேவையான கட்டில்களைப் பெற்றுக்கொடுப்பதற்கும் சுகாதார அமைச்சர் நடவடிக்கை எடுத்துள்ளார் எனக் கூறப்படுகிறது.

இதேவேளை, ஈ.சி.ஜி, எக்ஸ் கதிர் இயந்திரம் உட்பட சத்திர சிகிச்சைக்கான உபகரணங்களையும் உடனடியாக இவ்வைத்தியசாலைக்குப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதற்கென பத்து லட்சம் ரூபா செலவிடத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என சுகாதார அமைச்சுக் கூறுகிறது.

## தடுத்து வைக்கப்பட்டிருக்கும் சிறுவர் போராளிகளை குடும்பத்தாருடன் சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்குக!

### ஐ.நா. பிரதிநிதி வலியுறுத்து

கொழும்பு, டிச. 15

தடுத்து வைக்கப்பட்டுள்ள சிறுவர் போராளிகளை விடுவித்து அவர்களைத் அவர் தம் குடும்பத்தாருடன் மீண்டும் சேர்க்குமாறு ஐக்கிய நாடுகள் சபை, இலங்கை அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளது எனத் தெரியவருகிறது.

இலங்கைக்கு விஜயம் செய்த சிறுவர் மற்றும் யுத்த மோதல்கள் தொடர்பான ஐக்கிய நாடுகளின் விசேட பிரதிநிதி மேஜர் ஜெனரல் பற்றிக் கெனர்ட் இந்தக் கோரிக்கையை முன் வைத்தார் என பி.பி.ஸி. தகவல் வெளியிட்டுள்ளது.

தமது குடும்பங்களைப் பிரிந்து வாழும் - இன்னும் சிறுவர்களாகவே இருக்கும் - நூற்றுக்கணக்கான பிள்ளைகளை, கூடிய விரைவில் அவர்களின் குடும்பத்தாருடன் சேர்த்துவிட வேண்டுமெனவும் அவர் வலியுறுத்தினார்.

முகாமிலுள்ள சிறுவர்களுக்கு உதவி புரிவதற்காக ஐக்கிய நாடுகள் அமைப்பு, செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு, சேவ் த சில்றன் போன்ற நிறுவனங்களுக்கு அனுமதி வழங்கவேண்டுமென இலங்கைக்கான தமது ஐந்து நாள் விஜயத்தின் முடிவில் மேஜர் ஜெனரல் பற்றிக் கெமாட் கூறியுள்ளார்.

ஐக்கிய நாடுகள் பிரதிநிதி இலங்கையில் தங்கியிருந்த காலப்பகுதியில் விடுதலைப் புலிகள் இயக்கத்தினரால் பலாத்காரமாகச் சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்த சுமார் 300 சிறுவர் போராளிகளைச் சந்தித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.(சி)

## யுத்தம் முடிவடைந்த பின்னரும் பாதுகாப்பு வலயங்கள் எதற்கு?

### மனோ கணேசன் எம்.பி. ஆவேசம்

கொழும்பு, டிச.15

யுத்தம் முற்றாக முடிவுற்றுள்ளதால் வடக்கு, கிழக்கிலுள்ள அதி உயர் பாதுகாப்பு வலயங்கள் கட்டம் கட்டமாக அகற்றப்பட்டு அவை அடியோடு இல்லாதொழிக்கச் செய்யப்பட வேண்டும் என மனோ கணேசன் எம்.பி. அரசிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளர் சரத் பொன்சேகாவை ஆதரிக்கும் அனைத்துக் கட்சிகளும் ஒன்றிணைந்து நேற்று முன்தினம் கொழும்பில் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் அங்கு தெரிவித்தவை வருமாறு:-

மஹிந்த ராஜபக்ஷவின் ஊழல் மோசடி மிக்க ஆட்சியில் இருந்து நாட்டை மீட்டெடுக்கும் இரண்டாம் கட்ட நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

நாட்டை மீட்டெடுக்கும் முதற்கட்ட நடவடிக்கையின் போது தமிழர்களுக்கு பல பாதிப்புகள் ஏற்பட்டன. பொன்சேகாவை ஜனாதிபதியாக்கும் ஒரே தீர்மானத்தில் இன்று வடக்கு, கிழக்கு தமிழ் மக்கள் உள்ளனர். தெற்கு மக்களை விட வடக்கு - கிழக்கு மக்களே அதிகளவில் பொன்சேகாவுக்கு வாக்களிப்பர்.

இத்தேர்தலில் தமிழ் தேசிய கூட்டமைப்பு பல கோரிக்கைகளை முன்வைத்து இரு வேட்பாளர்களுடன் பேச்சு நடத்தி வருகின்றது. அக்கட்சி முன்வைக்கும் அத்தனை கேள்விகளுக்கும் மஹிந்த ராஜபக்ஷ பதிலளிக்க வேண்டும்.

யுத்தம் முடிந்த பிறகு கைதுசெய்யப்பட்டுள்ளவர்கள், காணாமல் போனவர்கள் தொடர்பான விவரங்களை வெளியிடுமாறு நாம் அரசிடம் தொடர்ச்சியாக கேட்டுக் கொண்டு வருகின்றோம். கைது செய்யப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு அந்த விவரங்கள் பெரும் உதவியாக இருக்கும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன் வைக்கும் கோரிக்கைகளுள் ஒன்றுதான் வடக்கு, கிழக்கில் பாதுகாப்பு வலயங்கள் நீக்கப்பட வேண்டும் என்பது.

பாதுகாப்பு வலயங்கள் உருவாக்கப்பட்டது புலிகளின் பீரங்கித் தாக்குதலில் இருந்து இராணுவ முகாம்களைப் பாதுகாப்பதற்காக. இப்போது புலிகள் இல்லை. அதி உயர் பாதுகாப்பு வலயங்களுக்கான தேவை எதுவும் இல்லை.

ஆகவே, கட்டம்கட்டமாக இப் பாதுகாப்பு வலயங்களை நீக்கி அப்பகுதிகளில் மக்கள் குடியேற வழியமைத்துக் கொடுக்க வேண்டும். அரசே இதைச் செய்ய வேண்டும்.இந்தச் சந்தர்ப்பத்தில் வடக்கு - கிழக்கு உள்ளிட்ட நாட்டின் அனைத்து பகுதிகளிலும் உள்ள மக்கள் ஒன்றிணைந்து மஹிந்தவின் ஆட்சியைக் கவிழ்த்து பொன்சேகாவின் தலைமையில் நல்லதோர் ஆட்சியை உருவாக்க முன்வர வேண்டும். - என்றார். (7)

## 221 வெளிநாட்டுப் பிரஜைகள் நாடு கடத்தப்பட்டுள்ளனராம்

கொழும்பு, டிச.15

இந்த ஆண்டின் நவம்பர் மாதம் வரையில் சுமார் 221 வெளிநாட்டு பிரஜைகள் நாடு கடத்தப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

நாட்டின் குடிவரவு குடியகல்வு சட்ட திட்டங்களை மீறியவர்களே இவ்வாறு பெரும்பாலும் நாடு கடத்தப்பட்டுள்ளனர் என குடிவரவு குடியகல்வுத் திணைக்களத் தின் உயரதிகாரி தேவேந்திரராஜா தெரிவித்துள்ளார்.

இதில் அதிக எண்ணிக்கையிலானோர் இந்தியர்கள் எனவும், பாகிஸ்தான் மற்றும் சீனர்களும் அதிகளவில் நாடு கடத்தப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு நாடு கடத்தப்படும் வெளிநாட்டு பிரஜைகளின் பெயர்கள் கறுப்புப் பட்டியலில் இடப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். குடிவரவு, குடியகழ்வு சட்டங்களை மீறிய மேலும் 50 பேர் இன்னமும் மிரிஹான பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (சி)

## கடந்த பத்து ஆண்டுகள் அதி வெப்பமான காலம்

### தட்பவெப்பவியல் கழகம் தெரிவிப்பு

கொபன்ஹேகன், டிச.15

என்றுமே இல்லாத அளவுக்கு கடந்த பத்து ஆண்டுகள் அதிக வெப்பமான காலமாக உள்ளது என ஐ.நாவின் உலக தட்பவெப்பவியல் கழகம் தெரிவித்துள்ளது.

கொபன்ஹேகனில் புவிவெப்ப மாற்ற மாநாடு ஆரம்பமாகியுள்ள இத்தருணத்தில் கடந்த பத்து ஆண்டுகளில்தான் உலக மக்கள் அதிக வெப்ப நிலையை சந்தித்து வருகிறார்கள் என இந்தக் கழகம் தெரிவித்துள்ளது. இந்தியாவின் பெரும்பாலான பகுதிகளும் இதில் அடக்கம் என்றும் இக்கழகம் குறிப்பிட்டுள்ளது.

இதுகுறித்து இக்கழகத்தின் செயலாளர் மிச்சல் ஜெராட் கொபன்ஹேகனில் செய்தியாளர்களிடம் பேசுகையில், ''2000 ஆம் ஆண்டு முதல் தற்போதைய ஆண்டு வரை உலகின் வெப்பம் அதிகரித்துள்ளது. 90களில் இருந்ததைவிட இந்த காலகட்டத்தில்தான் அதிக வெப்ப நிலை நிலவியுள்ளது. நிலவி வருகிறது. 80களைவிட தற்போதைய வெப்ப நிலை அதிகமாகும்'' என்றார்.

''1850 ஆம் ஆண்டிலிருந்து இந்த ஆண்டு வரை பதிவான வெப்ப நிலையைக் கணக்கிட்டால், 2009 ஆம் ஆண்டு தான் ஐந்தாவது அதிக வெப்பம் மிகுந்த ஆண்டாக உருவெடுத்துள்ளது'' என்றும் மிச்சல் ஜெராட் சுட்டிக்காட்டினார்.

''உலகின் கடற்பரப்பிலும், நிலப்பரப்பிலும் காற்றின் வெப்ப நிலை 2009 ஆம் ஆண்டில் (ஜனவரி முதல் ஒக்டோபர் வரையிலான காலகட்டம்) 0.44 டிகிரி சென்டிகிரேடாக உள்ளது. இது 1961 ஆம் ஆண்டில் இருந்ததைவிட அதிகமாகும்'' என்றும் அவர் குறிப்பிட்டார்.

காலநிலை மாற்றம் தொடர்பாக கொபக்ஹேகன் மாநாட்டில் உலக வானிலை ஆய்வு அமைப்பும் பிரிட்டனின் வானிலை அலுவலகமும் தமது கண்டுபிடிப்புகளை சமர்ப்பித்துள்ளன.

இவை வழங்கிய புள்ளிவிவரங்கள் கடந்த 4 தசாப்தங்களில் உலக வெப்ப நிலை திடமாக அதிகரித்து வந்துள்ளதை தெரிவிக்கின்றன.

பிரிட்டிஷ் பல்கலைக்கழகத்தின் காலநிலை ஆராய்ச்சி மைய மின் அஞ்சல்கள் கைப்பற்றப்பட்டு வெளிக்கொண்டுவரப்பட்ட அண்மைய பிரச்சினை தொடர்பாக எழுந்த சர்ச்சையின்போது வெளியான வெப்பநிலை பதிவுகள் குறித்தும் அங்கு விவாதங்கள் நடந்தன.

எனினும், உலகம் சூடாகின்றது என்பதில் எந்தவிதமான சந்தேகமும் கிடையாது என உலக வானிலை ஆராய்ச்சி அமைப்பு தெரிவித்துள்ளது. (சி)



ஜனாதிபதிக்கு ஆதரவு தெரிவித்து கலைஞர்கள் சிலர் அவரை நேற்றுமுன் தினம் அலரிமாளிகையில் சந்தித்தனர். அதன்போது கலைஞர் ஒருவர் ஜனாதிபதியின் உருவத்தை பச்சைகுத்தியிருப்பதைக் காண்பிப்பதையும், ஜனாதிபதி அதைக் கண்டு மகிழ்வதையும் படத்தில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை உல்லாசப் பயண நடமாடும் சேவை
## யாழ்ப்பாணம்

## ஒரே இடத்தில் சேவைகள் வழங்கல்,...

இலங்கை உல்லாசப் பயண அபிவிருத்தி அதிகார சபையின் தரமான சேவையினை உறுதிப்படுத்தும் பிரிவினாலே நடத்தப்படும் நடமாடும் சேவை

### மிலேனியம் றெஸ்ட்
இல.70, இராமநாதன் வீதி, யாழ்ப்பாணம்.
2009 மார்கழி 16 ஆம், 17, 18ஆம்
திகதிகளில் மு.ப.9 மணிமுதல்
பி.ப.4 மணிவரை நடத்தப்படவுள்ளது.
தொலைபேசி இல.021 222 5876

* யாழ்ப்பாணத்திலுள்ள அனைத்து உத்தரவு பெற்றவர்களையும் இந்த சேவையை, பயன்படுத்தி 2010 ஆம் ஆண்டிற்றான சிபார்சுகளை இந்தச் சேவையின்போது பெற்றுக்கொள்ளும்படி அன்புடன் வேண்டு கின்றோம்.
* அனைத்து தேசிய வாகன சாரதிகள் மற்றும் சுற்றுலா இடங்கள் பற்றிய வழிகாட்டி விளக்கம் தருவோர் ஆகியோரும் தங்கள் அனுமதிப் பத்திரங்களை இந்தச் சேவையின்போது புதுப்பித்துக் கொள்ளலாம்.
* இந்தக் காலப்பகுதியிலே சிறிய மற்றும் நடுத்தர உல்லாச பயணத் துறை ஸ்தாபனங்களையும் ஒன்றிணைப்பதற்கான திட்டம் நடைமுறைப்படுத் தப்படும்.

தலைவர்,
இலங்கை உல்லாசப் பயணத்துறை
அபிவிருத்தி அதிகாரசபை,
இல.80,காலி வீதி, கொழும்பு 03.

மேலதிக விவரங்களுக்கு:
தொலைபேசி இல. : 2437057, 2437954.
உல்லாசப் பயணத்துறை அமைச்சு


# மரண அறிவித்தல்

## திருமதி செல்லத்துரை பாக்கியம்
(ஓய்வுபெற்ற ஆசிரியர்- அச்சுவேலி சரஸ்வதி வித்தியாலயம்)



கோப்பாய் தெற்கு, பழைய தபாற்கந்தோர் முன் ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும் 19/4, செட்டித்தெரு ஒழுங்கை, நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்லத்துரை பாக்கியம் 11.12.2009 வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சிதம்பரப்பிள்ளை செல்லத்துரை (ஓய்வுபெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்) அவர்களின் அன்பு மனைவியும் சிறீஸ்கந்தசெல்வன்(காப்புறுதி ஆலோசகர், சிறீலங்கா இன்சூரன்ஸ்), குமாரசெல்வி, காலஞ்சென்ற சந்திரகுமாரி மற்றும் உருத்திரகுமாரி (கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி- உப அதிபர்), விக்னகுமார் (London), பாஸ்கரகுமாரி(Canada),கௌரிகுமார் (Canada), விஷ்ணுகுமார் (Canada) ஆகியோரின் தாயும் காலஞ்சென்ற கனகாம்பிகை (Pensioner Jaffna Kachcheri) மற்றும் அரியரட்ணம் (Pensioner Jaffna Kachcheri, Nehrp world Bank, Project Trincomalee), சுரேந்திரகுமார் (Retired Engineer) சகுந்தலா, பாலராணி, சுகந்தி, சுதாகரன் (Engineer) ஆகியோரின் மாமியும் காலஞ்சென்ற துஷ்யந்தி (Bachelor of law (LLB), Attorney- at-law, Notaric Public, Commissioner For Oaths, Company Secretary), கஜேந்தினி (B.Sc.- பகுப்பாய்வாளர் S.G.S. Lanka B.B.T-LTD), ஆரணி, Dr.கரிகஜன், கரிகேசன் (Computer research in Soft Ware engineering), துவாரகா (IT), மாதங்கி, கௌசிகன், கௌசியன், கௌசிகா, எதுர்சன், சர்மிலா, பிரியன், சர்மினி, கிருஷ்ணா, குமரன் ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (16.12.2009) புதன்கிழமை முற்பகல் 11 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் செம்மணி இந்து மயானத்திற்கு தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
பிள்ளைகள்
பேரப்பிள்ளைகள்.

19/4 செட்டித்தெரு ஒழுங்கை,
நல்லூர். (91450)

# பன்றிக்காய்ச்சலுக்கு 21 பேர் பலி!

கொழும்பு, டிசெ. 15

பன்றிக்காய்ச்சல் தொற்றால் இதுவரை 21 பேர் உயிரிழந்துள்ளனர் என சுகாதார பிரிவின் தொற்று நோய் ஒழிப்பு பிரிவின் பணிப்பாளர் டாக்டர் பபா பலிகவடன தெரிவித்துள்ளார்.

உயிரிழந்தவர்கள் ஏ.எச்.என். வைரஸ் தொற்றோடு இன்னும் சில நோய்த் தாக்கங்களுக்கும் உள்ளாகி இருந்தனர் என அவர் தெரிவித்தார். உயிரிழந்தவர்களுள் கர்ப்பிணிப் பெண்களும் அடங்குகின்றனர்.

இதுவரை 420 பேர் இன்புளுவன்சா ஏ.எச். என். வைரஸ் தொற்றுக்குள்ளானவர்கள் உள்ளனர் எனசுகாதார அமைச்சு தெரிவித்துள்ளதோடு இத்தொற்றுக்கான தடுப்பூசிகளை இறக்குமதி செய்வதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் ஜனவரி மாதமளவில் தடுப்பூசிகளைப் பெற்றுக்கொள்ள முடியும் என டாக்டர் பபா பலிகவடன நம்பிக்கை தெரிவித்திருப்பதோடு தடுப்பூசிகளை ஏற்றுவதற்கான நடவடிக்கைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன என அவர் தெரிவித்தார்.

இதன் முதற்கட்டமாக கர்ப்பிணித் தாய்மார்களுக்கு இந்த தடுப்பூசிகள் ஏற்றப்பட்டுள்ளது என டாக்டர் பபா பலிகவடன தெரிவித்த அதேவேளை இது தொடர்பான விளக்க கையேடுகளை அனைத்து வைத்தியசாலைகளுக்கும் அனுப்ப நடவடிக்கை எடுத்துள்ளார் எனவும் தெரிவித்துள்ளார். (சி)

## நவாலியில் புதிய மின்மாற்றி

நவாலி,டிசெ.15

நவாலியில் மின்சார சபையினரால் அதிசக்தி வாய்ந்த மின்மாற்றியொன்று பொருத்தப்பட்டுள்ளதால் ஆனைக்கோட்டை, நவாலிப் பகுதி மக்கள் அதிக பிரகாசமான வெளிச்சத்தைப் பெற்று வருகின்றனர்.

சில காலமாக இப்பகுதியில் மின்சாரம் சீரின்மையால் மக்கள்மிகக் குறைந்த மங்கிய வெளிசத்தையே பெற்று வந்தனர். இது பற்றி மக்கள் சுட்டிக்காட்டியதைத் தொடர்ந்து அண்மையில் பொருத்தப்பட்ட புதிய மின்மாற்றியினால் தற்போது பிரகாசமான வெளிச்சம் சீரான முறையில் கிடைக்கின்றது.

இச் செயலை இப்பகுதி மக்கள் மிகவும் பாராட்டியுள்ளனர். (50-100)

## அறநெறிப் பாடசாலைக்கு 25ஆயிரம் ரூபா ஒதுக்கீடு

நவாலி,டிசெ.15

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவிலுள்ள வடலியடைப்பு இந்து இளைஞர் மன்ற அறநெறிப்பாடசாலைக்கும், மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய அறநெறிப் பாடசாலைக்கும் இந்து சமய அலுவல்கள் கலாசார அமைச்சினால் தலா 75ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ள தெரிவிக்கப்படுகிறது. (50-20-100)


இதோ!
ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட இருமல் நிவாரணி.
தீராத இருமல், சளி, இளைப்பு மற்றும் நுரையீரல் சுவாச நாளங்களில் உண்டாகும் சளி நோய்கள், தொண்டையில் ஏற்படும் நமைச்சல் ஆகிய நோய்களை விரைவில் குணமாக்கும் அதியற்புத தேசிய ஔடதம்

பீம் வாசக சிரப் (Vasaka Syrup)
இருமல் பாணி

யாழ்.குடாநாட்டின் அனைத்து பாமர்ஸிகளிலும் கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

Manufactured By:
Beamhela osulanka (PVT) LTD
18/263 Kethsiry Place
High Level Road, Kottawa
Pannipa Panniptiiya
Puttalam, Road, Chilaw.
(Reg.No: 6382)AR/PR/No.228 (சி/562080)

யாழ்.மாவட்ட ஏக விநியோகஸ்தர்:
சிவா நறுமணப்பூங்கா
இல.288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்,
தொ.பே: 021 222 2567


# 31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 20 . 10 . 1923



மறைவு 15 . 11 . 2009

## அமரர் செல்லத்துரை சின்னத்தங்கச்சி

நிலையில்லாத இவ்வுலகில்
நிலைத்திருக்கும் உங்கள் உறவால்
நினைவிழக்க மாட்டாமல்
நீந்துகின்றோம் கண்ணீரில்
மனம் இருக்கும் நாள்வரையில்
நிழல் இருக்கும் பூமியிது
நாம் இருக்கும் நாள்வரையில்
அம்மம்மா என்றும் இருப்பீர்கள் எம் மனதில்.

இன்று (15.12.2009) செவ்வாய்க்கிழமை அன்னாரின் இல்லத்தில் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் நடைபெறும். இந்நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்போர்:
மகள்: லீலாவதி அருணாந்துரை (கனடா),
மருமகன்: அருணாந்துரை (ஓய்வுபெற்ற சுகாதார உத்தியோகத்தர்- கனடா),
பேரப்பிள்ளைகள்: சதீஸ்குமார் (கனடா), நிவா சதீஸ்குமார் (கணக்காய்வாளர்- கனடா), சபேஸ்குமார் (பொறியியலாளர்- கனடா), பாமினி சபேஸ்குமார் (கணக்காளர்- கனடா),
காலஞ்சென்றவர்களான ஜெயக்குமார் பூபாலசிங்கம், சுதீஸ்குமார்.
பூட்டப்பிள்ளைகள்: பிரதீஸ் (பொறியியலாளர்-கனடா), நவேஸ் (மாணவன்), மிதுஷா (ஆசிய பல்கலைக்கழக மாணவி- கனடா), நிலீஸ் (கனடா).
ஒன்ராறியோ, கனடா. (91413) தகவல்: குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## சங்கரப்பிள்ளை செல்வவிநாயகம்
(ஓய்வுபெற்ற ஆசிரியர்-யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை)



இணுவிலைப் பிறப்பிடமாகவும் கோண்டாவில் நெட்டிலிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட சங்கரப்பிள்ளை செல்வவிநாயகம் (11.12.2009) காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை- தில்லையம்மா தம்பதியரின் மகனும் சீதாலட்சுமியின் (இளைப்பாறிய ஆசிரியை, யாழ்.கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை) அன்புக் கணவரும் திருவருட்செல்வி, சிவானந்தி, ஸ்ரீசங்கர், கிருபா, கோகிலா (லதா), பாலகுமரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் சிவபாலன், மோகனதாஸ், ஆனந்தசந்திரசேகர், சுவேதினி ஆகியோரின் மாமனும் காலஞ்சென்றவர்களான இராமநாதன்-சிவகாமிப்பிள்ளை தம்பதியரின் மருமகனும் தெய்வநாயகி, சர்வேஸ்வரன், சர்வேஸ்வரி, தேவாம்பிகை, விக்னேஸ்வரி, யோகேஸ்வரன், தயாபரன், நிர்மலாதேவி ஆகியோரின் சகோதரனும் காலஞ்சென்ற கார்த்திகேசு, நல்லதம்பி, மயில்வாகனம், ஆறுமுகம் ஆகியோரின் மருமகனும் அரசரட்ணத்தின் மைத்துனரும் சிந்து, சகானா, சாலவி, ஆரணி, பிரணவன், றிசான், தாமரை, அங்கணன், முல்லை ஆகியோரின் அருமைப் பேரனும் முத்துப்பிள்ளையின் பெறாமகனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (16.12.2009) புதன்கிழமை மு.ப.10.30 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காகக் காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மனைவி,
பிள்ளைகள்.

நெட்டிலிப்பாய்,
கோண்டாவில். (91445)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







வலிகாமம் கல்வி வலயப் பாடசாலை அணிகளின் 13 வயதுப் பிரிவினருக்கு இடையே நடைபெற்ற உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் சம்பியன் கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்ட வசாவிளான் மத்திய மகாவித்தியாலய அணியினர், இரண்டாம் இடத்தைப் பெற்றுக்கொண்ட மாதகல் சென்.ஜோசப் வித்தியாலய அணியினர், உதவிக் கல்விப்பணிப்பாளர்கள் மற்றும் ஆசிரியர்களுடன் காணப்படுவதை படங்களில் காணலாம். (படங்கள்: நேசன்)

# வேலணை மத்திய கல்லூரியை வீழ்த்தி கிண்ணம் வென்றது சென்.அன்ரனிஸ்

## நாரந்தனை றோ.க. மூன்றாம் இடம் பெற்றது

வலி.வடக்கு, டிசெ.15

தீவக வலயப்பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்ற 18 வயதுப் பிரிவினருக்கான உதைபந்தாட்டப் போட்டியில் ஊர்காவற்றுறை சென்.அன்ரனிஸ் கல்லூரி சம்பியனாகியது.

ஊர்காவற்றுறை சென்.அன்ரனிஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் வேலணை மத்திய மகாவித்தியாலயமும் ஊர்காவற்றுறை சென்.அன்ரனிஸ் கல்லூரியும் மோதிக்கொண்டன.

போட்டி ஆரம்பமாகி சில நிமிடங்களில் சென்.அன்ரனிஸ் கல்லூரி தனது முதலாவது கோலைப் பெற்றுக்கொண்டது. தொடர்ந்து வேலணை மத்திய கல்லூரி தன்னை சுதாகரித்துக் கொண்டு விளையாடிய போதிலும் மேலும் ஒரு கோலை சென். அன்ரனிஸ் கல்லூரி பெற்று முன்னிலையில் இருந்த வேளையில் முதல்பாதி ஆட்டம் முடிவுற்றது.

இரண்டாவது பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் கோல்கள் பெறவேண்டும் என்ற பெரும் துடிப்புடன் களமிறங்கி விளையாடின. வேலணை மத்திய கல்லூரி கோல் பெற எடுத்த முயற்சிகளை முறியடித்த சென். அன்ரனிஸ் கல்லூரி, மேலும் ஒரு கோலைப் பெற்று தனது வெற்றியை உறுதிப்படுத்திக் கொண்ட நிலையில் போட்டி முடிவடைந்தது.

போட்டி நிறைவில் சென்.அன்ரனிஸ் கல்லூரி 3:0 என்ற கோல் கணக்கில் வேலணை மத்திய கல்லூரியை வெற்றி பெற்று தீவக வலய சம்பியனாகியது.

மூன்றாம் இடத்திற்கான போட்டியில் காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரியும் நாரந்தனை றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையும் மோதிக் கொண்டன. இதில் நாரந்தனை றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை 1:0 என்ற கோல் கணக்கில் காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரியை வென்று மூன்றாம் இடத்தைப் பெற்றுக்கொண்டது. (50-86)

## கூடைப் பந்தாட்டப் போட்டி

யாழ்ப்பாணம்.டிசெ.15

யாழ்.மாவட்ட கூடைப்பந்தாட்ட சங்கத்தில் அங்கம் வகிக்கும் அணிகளுக்கு இடையில் நடத்தப்படும் கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் நாளை புதன்கிழமை பி.ப. 3.30 மணியளவில் யாழ்.வேம்படி மகளிர் கூடைப்பந்தாட்டத் திடலில் இடம் பெறும் ஆட்டங்களில் மோதவுள்ள பெண் அணிகளின் விவரம் வருமாறு-

உடுவில் விளையாட்டுக்கழகம் எதிர் கே.சி.சி விளையாட்டுக்கழகம். (50-23)

## உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் 16 வயதுப் பிரிவு உதைபந்தாட்ட அணிகளுக்கிடையிலான சுற்றுப்போட்டிகள் எதிர்வரும் 26ஆம் திகதி சனிக்கிழமை மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய ம.வி மைதானத்தில் நடைபெறுமென வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் அறிவித்துள்ளார். (50-207)

## சிறந்த பந்து வீச்சாளர்களாக யாழ்ப்பாணத்திலிருந்து இருவர்

யாழ்ப்பாணம்,டிசெ.15

இலங்கை கிரிக்கெட் சபையினால் மாவட்ட, மாகாண மட்டங்களில் நடத்தப்பட்ட கிரிக்கெட் போட்டிகளில் இருந்து யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த இரண்டு வீரர்கள் சிறந்த வேகப் பந்து வீச்சாளர்களாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

யாழ்.கொக்குவில் இந்துக்கல்லூரியைச் சேர்ந்த ராகுலன், சென். பற்றிக் கல்லூரியைச் சேர்ந்த பிரதாப் ஆகிய இருவருமே சிறந்த பந்து வீச்சாளர்களாகத் தேசிய தெரிவாளர் நிசாந்தவினால் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள்.

இவர்களுக்கான பயிற்சிகளைத் தம்புள்ளவில் வழங்குவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதாக வட மாகாணப் பயிற்றுவிப்பாளர் மஞ்சுள கருணரட்ண தெரிவித்தார். (50-23)

## வடக்கு- கிழக்கிலிருந்து நால்வர் சிறந்த கிரிக்கெட் வீரர்களாகத் தெரிவு

யாழ்ப்பாணம்,டிசெ.15

இலங்கை கிரிக்கெட் சபையினால் மாவட்ட, மாகாண மட்டத்தில் நடத்தப்பட்ட கிரிக்கெட் போட்டிகளில் இருந்து யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த நான்கு வீரர்கள் சிறந்த வீரர்களாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.




யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த எஸ். ராகுலன் (கொக்குவில் இந்துக் கல்லூரி), திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த லக்சித மடுமால், மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த எஸ். சஞ்ஜீவ், என்.பிரசாத் ஆகியோரே சிறந்த வீரர்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான பயிற்சிகளைத் தம்புள்ளவில் வழங்குவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதாக வடக்கு- கிழக்கு மாகாண கிரிக்கெட் பயிற்றுநர் மஞ்சுள கருணரத்ண தெரிவித்தார். (50-23)

# பொன்சேகா மீது எனக்கு அன்போ, பாசமோ கிடையாது; ஜனாதிபதி மஹிந்தவை வீட்டுக்கு அனுப்பச் சரியான தெரிவு அவர்

## வெளிவாரி மாணவர்கள் மத்தியில் மனோகணேசன் உரை

வலி.வடக்கு,டிசெ.15



சரத்பொன்சேகா மீது அன்போ, பற்றோ, பாசமோ, காதலோ கிடையாது. மஹிந்தராஜபக்ஷவையும் அவரது அரசையும் வீட்டுக்கு அனுப்புவதற்குக் கிடைத்த சரியான நபரே இந்த சரத் பொன்சேகா.

இவ்வாறு தெரிவித்தார் ஜனநாயக மக்கள் முன்னனியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மனோகணேசன் .

அண்மையில் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்ட எதிர்கட்சித் தலைவர் ரணிலுடன் வருகை தந்த மனோகணேசன் ஆரியகுளம் உயர்கலைக் கல்லூரியில் வெளிவாரிப் பட்டதாரி மாணவர்களிடையே உரையாற்றினார். அதன் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கொடுங்கோல் ஆட்சி நடத்தி அராஜகத்தை மேற்கொண்டு தமிழ் மக்களை கொடுமைப்படுத்தும்- துன்புறுத்தும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவையும் அவர் தம் குடும்பத்தையும் வீட்டுக்கு அனுப்புவதற்கு ஆதரவு திரட்டவே யாழ்ப்பாணம் வந்துள்ளோம்.

பலர் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடலாம். பல காரணங்களைக் கூறலாம். எதனை எவர் கூறினாலும் ஜனாதிபதி மஹிந்தவை வீட்டுக்கு அனுப்பக் கூடிய வழி சரத்பொன்சேகாவை ஆதரிப்பதுதான்.

யாழ்.குடாநாட்டு மக்களுடன் எனது உதிரமும் கலந்துள்ளது. கடந்த மூன்றாண்டு காலத்தில் இம் மண்ணில் 4 ஆயிரத்துக்கும் மேற்பட்ட இளைஞர், யுவதிகள் காணாமற் போயுள்ளார்கள்; பலர் படுகொலை செய்யப்பட்டுள்ளார்கள்.

கொழும்பில் மட்டும் 575 இளைஞர் , யுவதிகள் கடத்தப்பட்டு காணாமற் போயுள்ளார்கள். எனது கைகளைப் பிடித்து அப்பாவைத் தாருங்கள் என்று கேட்டு அழுத பிள்ளைகள், கணவரைத் தாருங்கள் என்று அழுத சகோதரிகள், பிள்ளைகளைத் தாருங்கள் என்று அழுத பெற்றோர்கள் எண்ணிலடங்காதவர்கள். இவைகளை நான் எச்சந்தர்ப்பத்திலும் மறக்கமாட்டேன். சரத்பொன்சேகாவைத் தவிர்த்து மஹிந்த குடும்பத்தை வீட்டுக்கு அனுப்ப வேறு வழி ஏதாவது இருந்தால் கூறுங்கள்.

எமது இளைஞர்கள், யுவதிகள் தொடர்ந்து கடத்தப்படவும் காணாமற் போகவும் கொலை செய்யப்படவும் தொடர்ந்து அனுமதிக்க முடியாது. ஆகையினால் தமிழ் மக்கள்அனைவரும் தமது வாக்குகளை கடந்த காலங்களைப் போன்று பகிஷ்கரிக்காது உரிய முறையில் வாக்குகளைப் பயன்படுத்த வேண்டும்- என்றார். (50-86)

# காரைநகர் மொந்திபுலம் வீதியும் மதகும் 30 வருடங்களுக்குமேல் புனரமைக்கப்படவில்லை

## இதனால் இரவு வேளைகளில் விபத்துக்கள் ஏற்படும் அபாயம்

காரைநகர், டிசெ.15

காரைநகர் மொந்திபுலம் கல்லூரி வீதியும் மதகும் கடந்த 30 வருடங்களுக்கு மேல் புனரமைப்புச் செய்யப்படாமையால் அந்த வீதியின் ஊடாகப் போக்குவரத்துச் செய்யும் பொதுமக்கள் பெரும் சிரமங்களை எதிர் நோக்கி வருகின்றனர்.

இந்த வீதியில் உள்ள மதகு சேதமடைந்து வீதியின் நடுவில் பாரிய குழி ஏற்பட்டிருப்பதால் அந்த வீதியின் ஊடாக இரவு வேளைகளில் போக்குவரத்துச் செய்வோர் அதனுள் விழுந்து காய[illegible] உள்ளதாக இப்பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இந்த மதகினைப் புனரமைத்துத் தருமாறு கடந்த 15 வருடங்களாகப் பிரதேச சபையினரிடமும், உரிய அதிகாரிகளிடமும் தொடர்ச்சியாக மகஜர்கள் மூலமும் நேரடியாகவும் கோரிக்கை விடுத்தும் உரிய அதிகாரிகள் இதனைக் கருத்தில் எடுப்பதாகத் தெரியவில்லை என மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

காரைநகரில் பல்வேறு வீதிகள் புனரமைக்கப்பட்டு வருகின்றபோதிலும் விவசாயிகள், பாடசாலை மாணவர்கள் எனப் பலரும் அதிகமாகப் பயன்படுத்தும் இந்த வீதியை



புனரமைக்க நடவடிக்கை எடுக்காமை குறித்து மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (50-250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுவசெத
Suwasetha சுவசெத
லொத்தா

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு இலக்கம் 340
சீட்டிழுப்பு திகதி: 13.12.2009

வெற்றி எழுத்து: W வெற்றி இலக்கங்கள்: 20 29 60 61 போனஸ் இலக்கம் 26

| | கூட்டு | பரிசுத்தொகை | வெற்றிப் பெற்ற தொகை |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | ஆங்கில எழுத்து ஒன்றுடன் 4 இலக்கங்களும் பொருந்தினால் | ரூ. 9,922,015.00 | - |
| 1 பரிசு | 4 இலக்கங்கள் மாத்திரம் பொருந்தினால் | ரூ. 2,000,000.00 | - |
| 2 பரிசு | 3 இலக்கங்களுடன் போனஸ் இலக்கமும் பொருந்தினால் | ரூ. 50,000.00 | 01 |
| 3 பரிசு | 3 இலக்கங்கள் மாத்திரம் பொருந்தினால் | ரூ. 1,000.00 | 102 |
| 4 பரிசு | 2 இலக்கங்களுடன் போனஸ் இலக்கமும் பொருந்தினால் | ரூ. 500.00 | 142 |
| 5 பரிசு | 2 இலக்கம் மாத்திரம் பொருந்தினால் | ரூ. 40.00 | 4386 |
| 6 பரிசு | 1 இலக்கத்துடன் போனஸ் இலக்கமும் பொருந்தினால் | ரூ. 40.00 | 2931 |
| 7 பரிசு | 1 இலக்கம் மாத்திரம் பொருந்தினால் | ரூ. 20.00 | 55619 |

இந்த முறை வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத் தொகை ரூ. 1,628,060.00

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 10,206,534.50

வெற்றி பெறும் டிக்கட்டுகள் சீட்டிழுப்புத் திகதியிலிருந்து 6 மாதங்கள் மட்டுமே செல்லுபடியாகும். ஐந்து இலட்சம் அல்லது அதற்குக்கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரிச்சட்டதிட்டங்களுக்கு உட்பட்டது. பரிசைப் பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

சீட்டிழுப்புப்பணியின் முன்னோடி
தேசிய லொத்தர் சபை
234/2, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி அவசர : 2470662, 2470663
தேவைக்கு: 2473360, 2433631 இணையத்தளம்:www nlb lk

அடுத்த சீட்டிழுப்பில் இருபது இலட்சம் ரூபாய் முதற் பரிசையும் வேறு பல பரிசுகளையும் வெல்லுங்கள்.



SATS-TECH ENGINEERS
மாதகட்டணம் ரூ. 400/= இருந்து
பக்கேஜ்களுக்கான கட்டணங்கள் செலுத்திக் கொள்ளலாம்
தேவைக்கேற்ப தெரிவு Rs.8000/= ONWORDS
XMAS NEW YEAR OFFER
SPORTS NEWS MOVIES MUSIC
No: 300 KKS Road Jaffna.
Phone:- 021 2228812 / 222 4559
0217210228


## தொடர்பு கொள்ளவும்

யாழ்ப்பாணத்திலும் பின்னர் இரணைமடு கிளிநொச்சியிலும் வசித்துவந்த மயில்வாகனம் வசந்தராஜா என்பவரை அல்லது அவரது குடும்ப அங்கத்தவர்கள் எவரையாவது கனடாவில் வசிக்கும் **கந்தையா ஸ்ரீதரன்** என்பவர் தொடர்பு கொள்ள விரும்புகிறார்.

தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம்:- 0014252562100

(92955)

## முக்கிய அறிவித்தல்

### கிருஷ்ணா அடகு கடை

இல.37, கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம்.
பதிவு இல:- J/DS/BR/472

மேலே குறிப்பிட்ட எமது ஸ்தாபனத்தில் 2008 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 30 ஆம் திகதிக்கு (30.10.2008) முன்னர் அடகு வைத்து மீட்கப்படாமல் இருக்கும் அடகு நகைகள் யாவற்றையும் 2010 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 15 ஆம் திகதிக்கு (15.01.2010) முன்பு மீட்கவும். மீட்க முடியா விட்டால் ஒரு பகுதி பணத்தைக் கட்டிப் புதுப்பித்துக் கொள்ளவும். இரண்டும் செய்யத்தவறின் (15.01.2010)இல் விற்கப்படும் என்பதை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத் தருகின்றோம்.

தொ.பே.: 0212225046
370, கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம். (சி/563011) **உரிமையாளர்.**

## இராணுவ காவலரண் அகற்றப்பட்டது

வண்ணை, டிசெ.15


யாழ்.பிரதான வீதியில் திருக்குடும்பக் கன்னியர் மடம் முன்பாக பத்து வருடங்களுக்கும் மேலாக அமைக்கப்பட்டிருந்த படையினரின் பாரிய காவலரண் அண்மையில் முழுமையாக அகற்றப்பட்டது.

சிறிய அளவில் அமைக்கப்பட்டிருந்த மேற்படி காவலரண் 1998 ஆம் ஆண்டளவில் பலப்படுத்தப்பட்டது.

ஏறத்தாழ பத்து வருடங்களுக்கு மேலாக இருந்துவந்த காவலரணால் அப்பகுதியில் போக்குவரத்து நெருக்கடி நிலைமைகள் இருந்து வந்தன. காவலரண் அகற்றப்பட்டதால் திருக்குடும்பக் கன்னியர்மடம் பாடசாலை மற்றும் வித்தியாலய மாணவிகள், பொதுமக்களின் போக்குவரத்துக்கு இருந்துவந்த இடைஞ்சல் நீங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(50-160)

## 6 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 03 ✱ 08 ✱ 1936
மறைவு 22 ✱ 11 ✱ 2003

### அமரர் சின்னத்தம்பி தம்பிப்பிள்ளை

திதி: 15.12.2009 சதுர்த்தசி

ஆண்டுகள் ஆறு ஓடி மறைந்தாலும்
உங்கள் நினைவு எங்கள் மனதைவிட்டு அகலாது
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அச்செழு, நீர்வேலி. மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

(சி/563260)

## நல்லூர் பிரதேச சபை, கொக்குவில்
## பொது அறிவித்தல்-2010

**01. படவரைஞராகப் பதிவு செய்தல்-2010**

2010 ஆம் ஆண்டு படவரைஞராகப் பதிவுசெய்வதற்கு விரும்புவோரும், ஏற்கனவே எமது சபையில் பதிவு செய்துள்ளவர்களும் 2010 ஆம் ஆண்டு ஜனவரி 31 ஆம் திகதிக்கு முன்னர் தமது பதிவுகளைச் செய்து கொள்ளவும்.-மேலதிக விவரங்களை அலுவலக நேரத்தில் அறிந்துகொள்ளலாம்.

**02. வியாபார உரிம அனுமதிப் பத்திரம்-2010**

இப்பிரதேச எல்லைக்குள் வியாபாரம் செய்வோர் 2010 ஆம் ஆண்டிற்கான அனுமதிப்பத்திரத்தைப் பெறுவதற்கான விண்ணப்பப் படிவத்தை 2009 ஆம் ஆண்டு டிசெம்பர் 25 ஆம் திகதிக்குள் பெற்று அதனைப் பூரணப்படுத்தி நல்லூர்/கொக்குவில் உப அலுவலகங்களில் சமர்ப்பிக்குமாறு உரிய கட்டணங்களை 31.01.2010 ஆம் திகதிக்குள் செலுத்தி உரிமத்தைப் பெற்றுக்கொள்ளுமாறும் கேட்டுக் கொள்கிறேன்.

**03. வீடமைப்பு நகர சீர்திருத்தக் கட்டளைச் சட்டம் பிரிவு-268 இன் பிரகாரமான அறிவித்தல்.**

3.1 நல்லூர் பிரதேச சபையின் அனுமதியின்றி சபை எல்லைக்குள் அரச, தனியார் கட்டடங்கள், மதில், மலகூடங்கள், குழாய்க்கிணறுகள் என்பவற்றை அமைத்தல், புதுப்பித்தல் வேலைகள் செய்தல் போன்றன சட்டத்தின்படி தண்டனைக்குரிய குற்றமென்பதனை அறியத்தருகின்றேன்.

எனவே, நல்லூர் பிரதேச சபையால் விநியோகிக்கப்படும் விண்ணப்பப் படிவத்தின் மூலம் விண்ணப்பம் செய்து சபையின் முன்னங்கீகாரம் பெறப்படாது கட்டப்படும் மேற்படி கட்டடங்கள் யாவும் எதுவித நட்டஈடும் வழங்கப்படாது சபையினால் அகற்றப்படும்.

3.2 ஏற்கனவே அனுமதி பெற்றவர்கள் கட்டடம் கட்டி முடிக்கப்படாத பட்சத்தில் அனுமதியைப் புதுப்பித்தல் வேண்டும்.

3.3 அனுமதிபெற்றுக் கட்டடம் கட்டி முடித்தவர்கள், கட்டி முடிக்கப்பட்டமை தொடர்பாக அலுவலகத்திற்கு அறியத்தந்து உரிய அமைவுச் சான்றிதழைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

**04. துவிச்சக்கர வண்டி, மிருகங்களின் உரிமம் பெறல்.**

2010 ஆம் ஆண்டிற்கான துவிச்சக்கர வண்டி, மிருகங்களுக்கான உரிமத்தை பங்குனி மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் பெற்று சபையுடன் ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**05.நல்லூர்/கொக்குவில் உப அலுவலக ஆதனவரி அறிவித்தல்-2010**

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் கீழ் உரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி நடப்பு வருடம் அறவிடப்பட்ட ஆதனவரி வீதத்தின் பிரகாரம் 2010 ஆம் ஆண்டுக்கான ஆதனவரி அறவீடு செய்யப்பட வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. 2010 ஆம் ஆண்டிற்கான ஆதனவரியை 31.01.2010 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்துவோருக்கு அவ்வருட மொத்த வரியில் 10% கழிவு வழங்கப்படும். ஒவ்வொரு காலாண்டுக்குமுரிய வரியை அந்தந்தக் கந்தாயத்தின் முதல் மாத முடிவுக்குள் செலுத்துவோருக்கு காலாண்டு வரியில் 5% கழிவு வழங்கப்படும். குறிப்பிட்ட திகதிக்குள் ஆதனவரியைச் செலுத்தத்தவறின், வசிப்பிடங்களுக்கும் வெற்றுக் காணிகளுக்கும் முறையே 15% உம் ஏனைய ஆதனங்களுக்கு 20% உம் விறாந்துக் கட்டணமாக வரியுடன் சேர்த்து அறவிடப்படும். எனவே தங்கள் ஆதனங்களுக்குரிய வரியை 31.01.2010 ஆம் திகதிக்கு முன் அந்தந்த உப அலுவலகங்களில் முழுமையாகச் செலுத்தி வரிக் கழிவுகளைப் பெற்று சபையுடன் ஒத்துழைக்குமாறு வரியிறுப் பாளர்களை அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன். மேலும் எமது சபை எல்லைக்குள் ஆதனங்களைக் கொள்வனவு செய்பவர்களும் ஏற்கனவே கொள்வனவு செய்து சோலைவரி பெயர் மாற்றத்தினை மேற்கொள்ளாதவர்களும் எமது உப அலுவலகங்களுடன் தொடர்பு கொண்டு பெயர் மாற்றத்தினை மேற்கொள்ளுமாறும் கேட்டுக் கொள்கின்றேன்.

**06. சூழல் பாதுகாப்பு உரிமம்**

மத்திய சூழல் அதிகார சபைத் தலைவர் 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க தேசிய சூழல் பாதுகாப்புச் சட்டத்தின் 26 ஆம் பிரிவின் கீழ் உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு எனக்கு வழங்கப்பட்ட குறிக்கப்பட்ட அதிகாரங்களின் கீழ், நல்லூர் பிரதேச சபையின் நிர்வாக பாதுகாப்புப் பிரதேசத்தில், 1533/16 இலக்க 2008.01.25 ஆம் திகதிய மற்றும் 1534/18 இலக்க 2008.02.01 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானிப் பத்திரிகைகளில் விதந்துரைக்கப்பட்ட தொழில் நடவடிக்கைகளுக்கு அமைவாக மேற்குறிப்பிட்ட அறிவித்தலுக்கு இணங்க வியாபாரத்தை/தொழிலை நடத்துகின்ற உரிமையாளர்களுக்கு சூழல் பாதுகாப்பு உரிமம் வழங்கவேண்டிய பொறுப்பு எனக்கு வழங்கப்பட்டுள்ளது. ஆகவே சம்பந்தப்பட்டவர்கள் நல்லூர் பிரதேச சபையின் தலைமைப் பணிமனையுடன் தொடர்புகொண்டு சூழல் பாதுகாப்பு உரிமத்தைப் பெற நடவடிக்கை எடுக்கவும். இவ்வாறு உரிமம் பெறாத எவரும் 2010 ஆம் ஆண்டு மேற்குறிப்பிடப்பட்ட தொழில்களை நடத்த அனுமதிக்கப்படமாட்டார்கள் என்பதனையும் இத்தால் அறியத் தருகின்றேன். விதந்துரைக்கப்பட்ட தொழில் முயற்சிகள் பற்றிய விவரங்கள் அடங்கிய வர்த்தமானி அறிவித்தல்கள் நல்லூர்/கொக்குவில் உப அலுவலகங்களில் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது.

நல்லூர் பிரதேச சபை,
கொக்குவில் கிழக்கு,
10.12.2009 (சி/563263)

**மேரியோசப் சாந்தசீலன்,**
செயலாளர்,
நல்லூர் பிரதேச சபை.

## மரண அறிவித்தல்

### திருமதி செல்லத்துரை நாகம்மா



பண்டத்தரிப்பு, செட்டிகுறிச்சியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட செல்லத்துரை நாகம்மா நேற்று (14.12.2009) திங்கட்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரையின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை- சின்னத்தங்கம் தம்பதியரின் மகளும் காலஞ்சென்றவர்களான சபாபதி-சிவக்கொழுந்து தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்றவர்களான செல்லம்மா, சிதம்பரப்பிள்ளை, நாகலிங்கம், அன்னம்மா, பொன்னம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற நாகம்மா மற்றும் சரஸ்வதி காலஞ்சென்றவர்களான முத்தையாபிள்ளை, மயில்வாகனம், அன்னம்மா ஆகியோரின் அன்பு மைத்துனியும் காலஞ்சென்ற சாமியார்சிவம் மற்றும் சிற்றம்பலம் (கனடா), இராஜேஸ்வரி, பரமகுரு (கனடா) ஆகியோரின் தாயாரும் பிரிந்தா, மகேந்திரன், மைலா ஆகியோரின் மாமியாரும் சாமிகா, சஹானா, யாழினி, அபராஜிதன், தாரணி, சுலக்ஷன், திவ்வியன் ஆகியோரின் பேர்த்தியும் மதுஷனின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.12.2009) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருவடிநிலை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

செட்டிகுறிச்சி,
பண்டத்தரிப்பு. (91456)

தகவல்:
**சோ.மகேந்திரன்** (மருமகன்).

## மரண அறிவித்தல்

### திருமதி சபாரத்தினம் கனகலட்சுமி (இராசமணி)



சுண்டுக்குளியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சபாரத்தினம் கனகலட்சுமி (இராசமணி) (13.12.2009) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அப்பாத்துரை - பொன்னம்மா தம்பதியரின் மகளும் காலஞ்சென்ற நாகமுத்து சபாரத்தினத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற கந்தசாமி மற்றும் சிவயோகம் ஆகியோரின் சகோதரியும் சந்திரகுமார் (பிரான்ஸ்), காலஞ்சென்ற பாலகுமார் மற்றும் ஜெயமாலினி (கொழும்பு), சூரியகுமார் (லண்டன்), ஜெயந்தி, மாலா (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (15.12.2009) செவ்வாய்க்கிழமை மு.ப. 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக துண்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.03, சுப்பிரமணியம் ஒழுங்கை,
சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம். (91444)

தகவல்:
**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அலரி மாளிகை இன்று ஒரு அன்னதான சபையாகி விட்டது அதற்குச் சம்பந்தன் வருவாரா எனக் காத்திருக்கிறார் மஹிந்த

## புத்தளத்தில் நடைபெற்ற கூட்டத்தில் ஹக்கீம்



கொழும்பு,டிசெ.15

அலரிமாளிகை இன்று ஒரு அன்ன தானசாலை. இந்த அன்னதான.சாலைக்கு சம்பந்தன் வருவாரோ வரமாட் டாரோ என்று வழி மேல் விழி வைத்து காத்திருக் கிறார் ஜனாதிபதி மஹிந்த.

இப்படி சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் ஐக்கியதேசிய முன்னணியின் இணைத் தலைவருமான ரவூப் ஹக்கீம் தெரி வித்தார்.

கடந்த சனிக்கிழமை மாலை புத்தளம் ஹீதா பள்ளிவாசல் முன்றிலிலும், புத்தளம் எருக்கலம்பிட்டி ஜும்மாப் பள்ளியிலும் இடம்பெற்ற கூட்டங்களில் ஜனாதிபதித் தேர்தலில் சரத் பொன்சேகாவுக்கு ஆதரவளிப் பதற்கான காரணங்களை யாழ்., வன்னிப் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்த முஸ்லிம் மக்களுக்கும் புத்தளம் பகுதி மக்களுக்கும் அவர் விளக்கினார். அச்சமயமே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மு.கா. தவிசாளரும், கிழக்கு மாகாண எதிர்க்கட்சித் தலைவருமான பஷீர் சேகுதாவூத், கட்சியின் பிரதிச் செயலாளர் நாயகம் நிஸாம் காரியப்பர், முன்னாள் அமைச்சர் நூர்தீன் மசூர், புத்தளம் மாவட்ட ஐ.தே.க. அமைப் பாளர் பாலித்த ரங்கே பண்டார எம்.பி., புத்த ளம் நகரசபை உபதலைவர் அலிக்கான், வட மேல் மாகாணசபை உறுப்பினர் எஹியா ஆகியோரும் அங்கு உரையாற்றினர்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குள் உள்வாங் கப்பட்டுள்ள கிழக்கின் ஆயுதக் கும்பல்கள் அரசுக்கு ஆதரவாக இந்த ஜனாதி பதித் தேர்தலில் அட்டகாசம் புரிவதற்கு, ஜெனரல் சரத்பொன்சேகாவுக்கு ஆதரவு வழங்கும் பிர தான எதிர்க்கட்சிகளின் கூட்டு எவ்விதத் திலும் அனுமதிக்கமாட்டாது.

ரவூப் ஹக்கீம் அங்கு மேலும் கூறியவை வருமாறு:-

இன்று ஜனாதிபதியின் அலரி மாளிகை ஓர் அன்னதான சாலையாக மாறியிருக்கிறது என்று சகலரும் பேசுகின் றனர். காலை, பகல், இரவு என்ற வித்தியா சமின்றி ஊடகவிய லாளர்கள், கலைஞர்கள், அரச அதிகாரிகள், பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள் என்று பலதரப்பின ருக்கும் அங்கு கூட்டங்கள் நடத்தப்படு கின்றன. இந்த அன்னதான சாலைக்கு சம்பந்தன் வருவாரோ மாட்டாரோ என்று ஜனாதிபதி வழிமேல் விழி வைத்துக் காத்துக்கொண்டி ருக்கிறார். அப்படியொரு பெறுமதி இன்று தமிழ்த் தேசியக் கூட்ட மைப்புக்குக் கிடைத்திருக்கிறது. 'தேசத்து ரோகிகள்' என்றும், 'புலிகளுக்கு வக்காலத்து வாங்கு பவர்கள்' என்றும் அவர்களுக்குச் சேறு பூசிய அரசுக்கும் தற்போதைய ஜனாதிப திக்கும் இப்போது சம்பந்தன் இந்த அன்ன தான சாலைக்கு வருவது மிக அவசியமாகிப் போயுள்ளது.

நாள்தோறும் - மூன்று வேளையும், ஜனாதிபதித் தேர்தல்வரையும் உண்ணத் தருவார்கள்.

சரத்பொன்சேகாவை ஜனாதிபதி வேட் பாளராக நாம் நியமித்ததும் நடுக்கம் கொண்டிருக்கும் அரசும், ஆளும் தரப்பும் பாதாளக் கோஷ்டிகளைப் பயன்படுத்தி எம்மைப் பயமுறுத்தப் பார்க்கின்றன. அச்சு றுத்தியும் அடாவடித்தனம் செய்தும் ஜனா திபதித் தேர்தலில் வென்று விட லாம் என்று மனப்பால் குடிக்கும் அவர்களது எண்ணம் நாளாந்தம் தேய்வடைந்து கொண்டே போகி றது. வேறு வழியில்லாத நிலையிலும் தொடர்ந்தும் பாதாள உலகக் கோஷ்டிகளின் தயவையே அரசு நாடி நிற்கிறது.

இன்று வடக்கு - கிழக்கில் ஏற்பட்டிருக் கும் உணர்வலைகளும் எண்ண வெளிப் பாடுகளும் இந்த ஆட்சியை மாற்றியே ஆகவேண்டும் என்ற கருத்தையே வெளிப் படுத்தி நிற்கின்றன. தேர்தல் களில் வாக் களித்துத் தமக்கு எதுவும் நடக்கப் போவ தில்லை என்று மூலையில் முடங்கிக் கிடந்தவர்கள் இன்று தீர்மா னிக்கும் சக்தி தமது கைகளில் வந்துவிட்டது என்று மகிழ்ச் சியடையும் நிலைமையை ஜெனரல் சரத் பொன் சேகாவின் வருகை ஏற்படுத்தி யிருக்கிறது.

கிழக்கு மாகாண முதலமைச்சருக்கும் அவரது சகாக்களுக்கும் மத்திய அரசுடன் முரண்பாடு ஏற்பட்டு ஆளுநரை மாற்ற வேண்டும் எனக் கோரிக்கை விடப்பட்டிருக் கிறது. ஆனால் ஆளுநரை மாற்றி எதனையும் அவர்கள் அடையப்போவ தில்லை. ஆட் சியையே மாற்றவேண்டும்.

அளவுக்கு அதிகமாக அதிகாரங்கள் உள்ள இடத்தில் இருந்தே அநியாயங்கள் பிறக்கின்றன என்பதை இவர்கள் உணர வேண்டும்.

உத்தரவாதங்கள் காற்றில் பறக்கவிடப் பட்ட பல வரலாறுகளைக் கண்டவர்கள் நாம். ஸ்ரீலங்கா சுதந்திர கட்சிக்குள் உள் வாங்கப்பட்டுள்ள ஆயுதக் கும்பல்கள் அரசுக்கு ஆதரவாக இம்முறை தேர்தலில் அட்டகாசம் புரிவதற்கு சரத்பொன்சேகா வுக்கு ஆதரவு வழங்கும் பிரதான கட்சிக ளின் கூட்டு எவ்விதத்திலும் அனுமதிக் கப் போவதில்லை. அதற்கான ஏற்பாடுகளு டன் தான் இத்தேர்தலை நாம் சந்திக்க இருக் கிறோம் - என்றார் அவர். (சி)

# பனம்பொருள் உற்பத்தித்துறையில் அபிவிருத்திகள் இடம்பெறவேண்டும்

## ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ.15

யாழ்ப்பாணத்தின் முக்கிய பொருளா தார வளங்களில் ஒன்றாக பனம் பொருள் கள் உள்ளன. எனவே, அவற்றின் உற்பத்தித் துறையில் மிகவும் கூடுதலான அபிவிருத் திகள் இடம்பெறவேண்டும். அதற்காக அரசாங்கம் வடக்கின் வசந்தம்திட்டத்தின் கீழ் நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகிறது எனவும் பனந்தொழில் வல்லுநர் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றிய வடக்கு மாகாண ஆளுநர் ஜி.ஏ. சந்திரசிறி தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு-

பனை அபிவிருத்தி தொடர்பாக இங்கே விடுக்கப்பட்ட கோரிக்கைகளை நிறை வேற்று வதில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா எங்களுடன் தொடர்புகளைக் கொண்டிருக் கிறார். பனை வள அபிவிருத்திக்கு மட்டு மன்றி ஏனைய அபிவிருத்தி நடவடிக்கை களுக்கும் அரசு கூடுதல் உதவிகளை வழங்கி வருகிறது. வடக்கின் அபிவிருத்திக் காக தேவையான நடவடிக் கைகள் மேற்கொள்ளப் படும் - என்றார்.

(50-111-16)

# நுளம்பைக் கட்டுப்படுத்த குளத்தில் விடப்பட்ட மீன்களை சிலர் பிடித்துச் செல்கின்றனர்

## இதனால் டெங்கு பரவும் அபாயம்

யாழ்ப்பாணம்.டிசெ.15

நுளம்புப் பெருக்கத்தைக் கட்டுப்படுத் துவதற்காக மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினரால் குளத்தில் விடப்பட்ட மீன்களைச் சிலர் உணவுக்காக பிடித்துச் செல்கின்றனர்.

இதனால் நுளம்புக் குடம்பிகளின் பெருக் கம் அதிகரித்து டெங்கு பரவும் அபாயம் சங்க ரத் தைப் பகுதியில் ஏற்படலாம்.

இவ்வாறு வலி.மேற்குப் பிரதேசசபை யின் செயலாளர் சு.புத்திசிகாமணி தெரி வித் துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சங்கரத்தைக் குளத்தை அண்டிய பகுதி யில் 300 முதல் 425 வரையிலான குடும்பங் கள் வாழ்ந்து வருகின்றன.

இந்நிலையில் சங்கரத்தைக் குளத்தில் இருந்து உற்பத்தியாகும் நுளம்பினை கட் டுப்படுத்துவதற்காக கடந்த 2 வரு டங்க ளுக்கு முன்னர் நுளம்புக் குடம்பிகளை உண் ணும் மீன்கள் மானிப்பாய் சுகாதார வைத்திய அதி காரி பணிமனையினரால் குளத்தில் விடப் பட்டன.

தற்போது சங்கரத்தையைச் சூழவுள்ள சிலரால் அங்குள்ள மீன்கள் இரவு வேளை களில் பிடித்துச் செல்லப்படுவதாக பிரதேச சபையில் முறையிடப்பட்டுள்ளது.

அத்துடன் வலி.மேற்குப் பிரதேச சபை யினரால் மீன்களைப் பிடிக்கக்கூடாது என போடப்பட்ட விளம்பரப் பலகையும் தூக்கி வீசப்பட்டுள்ளது.

மேற்படி பகுதியில் குளத்தில் விடப்பட்ட மீன்களை பாதுகாப்பதற்கு வட்டு. வை.எம்.எச்.ஏ உறுப்பினர்கள் முன்வந்துள் ளனர்-என்றார். (50-302)

## திருவாசக முற்றோதல்

யாழ்ப்பாணம், டிசெ.15

ஸ்ரீ சிவகாம சுந்தரி சமேத தில்லை நடராஜப் பெருமாள் கோயிலின் திருவாசக முற்றோதல் நிகழ்வு நாளை புதன்கிழமை நடைபெறவுள்ளது.

நாளை காலை 7 மணி முதல் பி.ப.1 மணி வரை இந்துசமயப் பேரவை கந்தர்மடம், மேற்படி ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் மெய்யடியார்கள் அனைவரும் பங்குபற்றி பெருமான் திருவருளைப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (50-16)

## நேர்முகப்பரீட்சை பிற்போடப்பட்டுள்ளது

தென்மராட்சி பிரதேச செயலக கிராம அபிவிருத்திப் பிரிவினரால் இன்று செவ்வாய்க் கிழமை நடத்தப்படவிருந்த தையற்பயிற்சி நெறிக்கான நேர்முகப் பரீட்சை மறு அறிவித்தல் வரை பிற்போடப்பட்டுள்ளதாகவும், நேர்முகப் பரீட்சை நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப் படும் எனவும் பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் அறிவித்துள்ளார். (50-202)



வல்வை சிவகுரு வித்தியாசாலைக்கு கணனித் தொகுதி கையளிக்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் வல்வை அம்பாள் வெதுப்பக உரிமையாளர் இ.அமரசேனாபதி கணனித் தொகுதி ஒன்றினை பாடசாலை அதிபர் எஸ்.சிவநாதனிடம் கையளிப்பதையும், நிகழ்வில் கலந்து[illegible] பகுதியினரையும் படங்களில் காணலாம். [illegible]

# செய்திச் சரம்

## பயிற்சிப்பட்டறை

கைதடி, டிசெ.15

சமூக முன்னெடுத்தல் குழுக்களின் இயலளவை அதிகரிப்பதற்கான பயிற்சிப் பட்டறை ஒன்று அண்மையில் கைதடி மத்தி வளர்மதி சனசமூகநிலையக் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

தொடர்ந்து மூன்று நாள்கள் நடை பெற்ற இப்பயிற்சிப்பட்டறையில் கெயர் (சர்வதேசம்) நிறுவனத்தின் திட்ட இணைப்பாளர்கள் மற்றும் வெளிக்கள இணைப்பாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டு விரிவுரைகளை நிகழ்த்தினர்.

'சீடா' நிறுவனத்தின் நிதியுதவியுட னும், கெயர் சர்வதேச நிறுவனத்தின் லிவ்ற் திட்டம் 2இன் அனுசரணையு டனும் தென்மராட்சிப் பிரதேசத்தில் உருவாக்கப்பட்ட சமூக முன்னெடுத்தல் குழுக்களின் நிர்வாகிகள், அங்கத்தவர் கள் மற்றும் ஆர்வலர்கள் பலரும் பங்கு பற்றிச் சிறப்பித்துள்ளனர். (50-201-288)

## 'அறிவியல் ஊற்று' சஞ்சிகை வெளிவந்தது

சாவகச்சேரி இந்துக்கல்லூரி உயர்தர விஞ்ஞான மன்றத்தின் 'அறிவியல் ஊற்று' சஞ்சிகை நூல் வெளியீட்டு விழா அண்மை யில் சாவகச்சேரி இந்துக்கல்லூரியின் 'பி' மண்டபத்தில் விஞ்ஞான மன்றத் தலைவர் செல்வன் த.ஆதவன் தலைமை யில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதமவிருந்தினராக கோப்பாய் உதவிப்பிரதேச செயலர் செல்வி பிறேமினி சபாரத்தினம் அறிவியல் ஊற்று சஞ்சிகையை சம்பிரதாயபூர்வமாக வெளியிட்டு வைத்தார். முதற்பிரதியை மக்கள் வங்கி சாவகச்சேரி கிளையின் முகாமையாளர் க.சண்முகலிங்கம் பெற்றுக் கொண்டார்.

நூலின் ஆய்வுரையை தென்மராட்சி கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் (திட்டமிடல்) எஸ்.ரவீந்திரநாதன் நிகழ்த் தினார். (50-201-131)

## கடற்றொழிலாளர் சங்கத்திற்கு நிதியுதவி

சண்டிலிப்பாய்.டிசெ.15

கடற்றொழில் அமைச்சு, சாவல் கட்டு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தின் காரியாலய தேவைக்காக ஒரு லட்சம் ரூபாவை வழங்கியுள்ளது.

தளபாட வசதியின்றி இயங்கிவரும் மேற்படி சங்கத்தின் நிலைப்பாடு குறித்து சங்கத்தலைவர் என்.பொன்னம்பலம் கடற்றொழில் அமைச்சுக்கு எடுத்து விளக்கியதைத் தொடர்ந்து காரியாலயத் திற்குரிய தளபாடங்களை வழங்குவதற் காக கடற்றொழில் அமைச்சு ஒரு லட்சம் ரூபாவை வழங்கியுள்ளது. (50-201-115)

## கூட்டுறவுத் தந்தையின் நினைவுதின நிகழ்வு

சண்டிலிப்பாய்,டிசெ.15

கூட்டுறவுத்தந்தை வி.வீரசிங்கத்தின் நினைவு தினம் மானிப்பாய் கோவில்பற்று பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் ஆடம் பரமின்றி அனுஷ்டிக்கப்பட்டது.

சங்கக் காரியாலயத்திற்கு முன்பாக நிறுவப்பட்டுள்ள அன்னாரின் சிலைக்கு சங்கத் தலைவர் இ.வன்னிய சிங்கம் மலர் மாலைசூட்டி அஞ்சலி செலுத்தினார். அதைத் தொடர்ந்து வலி.தென்மேற்குப் பிரதேச சபையின் முன்னாள் செயலாளரும், ஈழ மக்கள் ஜனநாயக்கட்சியின் உறுப்பின ருமான அன்ரன் ஜோன்சன், மகேந்திர ராஜா உட்படச் சங்கப் பணியாளர்களும் அன்னாரின் சிலைக்கு மலரஞ்சலி செலுத்தினர். (50-201-115)

## பாடல் ஆக்கப் போட்டியில் அதிபர் முதலிடம்

யாழ்ப்பாணம்.டிசெ.15

தென்மராட்சிப் பிரதேச செயலகத்தி னால் நடத்தப்பட்ட 2009ஆம் ஆண்டுக் குரிய தேசிய கலை இலக்கியப் போட்டி களில் பாடல் ஆக்கம் திறந்த போட்டியில் மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய மகாவித்தியாலய அதிபர் புலவர் மு.பாலசுப்பிரமணியத்தின் ஆக்கம் பிரதேச, மாவட்ட மட்டங்களில் முதலி டத்தையும், மாகாணமட்டத்தில் இரண் டாமிடத்தையும் பெற்றுள்ளதாக பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் அறிவித்துள்ளார். (50-207)

## ஓய்வூதியர் கூட்டம்

யாழ்ப்பாணம், டிசெ.15

பகிரங்க சேவைகள் ஓய்வூதிய நம்பிக்கை நிதியத்தின் காரைநகர் உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட ஓய்வூதியர்களுக்கான கூட்டம் அண்மை யில் காரைநகர் உதவி அரசாங்க அதிபர் பணிமனை மாநாட்டு மண்டபத்தில் பணிமனை நிர்வாக உத்தியோகத்தர் ஆ.சத்தியமூர்த்தி தலைமையில் நடை பெற்றது.

இக்கூட்டத்தில் காரைநகர் உதவி அரசாங்க அதிபர் பிரிவு ஓய்வூதியர் களுக்கான நிர்வாகக் குழு தெரிவு செய் யப்பட்டது. நிர்வாகக் குழுத் தலைவராக ஓய்வுபெற்ற அதிபர் பண்டிதர் மு.சு. வேலாயுதம்பிள்ளையும், உப தலைவராக ஓய்வுபெற்ற நிதி உதவியாளர் புலவர் வே.குமாரசாமியும், செயலாளராக ஓய்வுபெற்ற உதவிக்கல்விப் பணிப் பாளர் அ.கமலாகரனும், உப செயலாள ராக ஓய்வுபெற்ற அதிபர் கா.குமாரவே லுவும், பொருளாளராக ஓய்வுபெற்ற தபாலதிபர் எஸ்.சண்முகரத்தினமும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இக்கூட்டத்திற்கு 80இற்கும் மேற் பட்ட ஓய்வூதியர்கள் கலந்துகொண் டனர். (50-201-250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அளவெட்டி சைவ வாலிபர் சங்கத்தினால் நடத்தப்பட்ட போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம்,டிசெ.15

அளவெட்டி சைவ வாலிபர் சங்கத்தின் ஏற்பாட்டில் பாடசாலை மாணவர்களுக்கிடையே நடத்தப்பட்ட பண்ணிசை, பேச்சு, மனனப் போட்டிகளின் முடிவுகள் வருமாறு:

**பண்ணிசைப் போட்டி**

*பாலர் கீழ்ப்பிரிவு - ஆண்*

ம.இலட்சிகன் (அருணோதயக் கல்லூரி), ஆர்.மதுர்ஷன் (அளவெட்டி வடக்கு அ.மி.த.க.பாடசாலை), அ.ஞா.பமில்டன் (அள.வடக்கு அ.மி.த.க. பாடசாலை).

பெண்

செ.ஜென்சிகா (சதானந்தா வித்தியாலயம்), வ.டக்சிகா (அள.வடக்கு அ.மி.த.க. பாடசாலை), செ.உஷாவி (அள.வடக்கு அ.மி.த.க.பாடசாலை), சி.அபர்ணா (அள. வடக்கு அ.மி.த.க.பாடசாலை),

**பாலர் மேற்பிரிவு**

*ஆண்*

நி.சிவாஜன் (அருணோதயக் கல்லூரி), ம.கஜவரன் (அருணோதயக் கல்லூரி), ம.மேருஜன் (அருணோதயக் கல்லூரி), இ.செந்தூரன் (சதானந்தா வித்தியாலயம்).

பெண்

சி.கேதுஷா (அள.வடக்கு அ.மி.த.க. பாடசாலை), வ.சாத்ஷகா (அள.வடக்கு அ.மி. த.க.பாடசாலை), க.மாதுஷா (சதானந்தா வித்தியாலயம்).

*கீழ்ப்பிரிவு - ஆண்*

ஜெ.ஜெஷாந்தன் (சதானந்தா வித்தியாலயம்), பே.நிவேதன் (சீனன்கலட்டி ஞானோதயா), சமேவின் தூர்ஜகான் (சீனன் கலட்டி ஞானோதயா).

பெண்

ஆ.ஜீவிதா (சீனன்கலட்டி ஞானோதயா), ர.பிரதுஷிகா (அருணாசலம் வித்தியாலயம்),ஐ.சிந்துஜா (அருணாசலம் வித்தியாலயம்).

*மத்திய பிரிவு - ஆண்*

நி.சிந்தூரன் (அருணாசலம் வித்தியாலயம்).

**பேச்சுப்போட்டி**

*பாலர் பிரிவு - ஆண்*

அ.மதுஷன் (அள.வடக்கு அ.மி.த.க. பாடசாலை), இ.கஜானன் (அள.வடக்கு அ.மி.த.க.பாடசாலை), ம.ஜிந்துஜன் (அள.வடக்கு அ.மி.த.க.பாடசாலை).

பெண்

இ.டிலக்ஷனா (அள.வடக்கு அ.மி.த. க.பாடசாலை), ம.மதுஷாயினி (அள. வடக்கு அ.மி.த.க.பாடசாலை), ஜெ.டிலக்சியா (சதானந்தா வித்தியாலயம்).

**பாலர் மேற்பிரிவு**

*ஆண்*

இ.வினோஜன் (அள.வடக்கு அ.மி.த. க.பாடசாலை), ஐ.சிவாம்ஜன் (அள. வடக்கு அ.மி.த.க.பாடசாலை), கு.துவாரகன் (அருணோதயக் கல்லூரி).

பெண்

யோ.ரிஷானி (அருணோதயாக் கல்லூரி), ஜெ.சரண்ஜா (அருணாசலம் வித்தியாலயம்), உ.கபியங்கா (அள.வடக்கு அ.மி.த.க.பாடசாலை), க.மதுஷா (சதானந்தா வித்தியாலயம்).

**மனனப் போட்டி**

*பாலர் கீழ்ப்பிரிவு - ஆண்*

ஆ.மதுஷன் (அள.வடக்கு அ.மி.த.க. பாடசாலை), இ.கஜானன் (அள.வடக்கு அ.மி.த.க.பாடசாலை), உ.விதுஷன் (அருணாசலம் வித்தியாலயம்).

பெண்

கே.சாருஜா (அருணாசலம் வித்தியாலயம்), ஜெ.டிலக்சிகா (சதானந்தா வித்தியாலயம்), இ.டிலக்ஷனா (அள.வடக்கு அ.மி.த.க.பாடசாலை).

*பாலர் மேற்பிரிவு - ஆண்*

கி.வினோஜன் (அள.வடக்கு, அ.மி.த. க.பாடசாலை), செ.துஷ்யந்தன் (அள. வடக்கு அ.மி.த.க.பாடசாலை), சி.திஸாணன் (அள.வடக்கு, அ.மி.த.க.பாடசாலை).

பெண்

உ.கபியங்கா (அள.வடக்கு, அ.மி.த.க. பாடசாலை), ச.வேணுஜா (அருணோதயக் கல்லூரி), ப.கீர்த்திகா (அள.வடக்கு அ.மி.த.க.பாடசாலை).

**பேச்சுப் போட்டி**

*கீழ்ப்பிரிவு - பெண்*

சி.சுபாசினி (சீனன்கலட்டி ஞானோதயா), ஆ.ஜீவிதா (சீனன்கலட்டி ஞானோதயா), ப.ஜென்சிகா (சதானந்தா வித்தியாலயம்). (50-204)


## வாஞ்சையுடன் வாழ்த்துகின்றோம்



லயன்

**V.S.சிவநாதன்**

அவர்கள்

(இலங்கை வங்கியின் வடமாகாணச் செயற்பாட்டு முகாமையாளர்)

வடமராட்சி லயன்ஸ் கழகத்தின் வாய்த்த தலைவராய்
திடமாகச் சேவை செய்யும் சித்தமுள்ள சீரியரே!
இலங்கை வங்கியாம் தேசத்து வங்கியின் வடபால்
இலங்கும் செயற்பாட்டு முகாமையாளராய் உயர்வுபெற்ற
நலமான செய்தியினை நாமறிந்தோம் வாழ்த்துகின்றோம்.

வடமராட்சி லயன்ஸ் கழகத்தினர்.

(சி/563248)


## பகிரங்க அறிவித்தல்
## யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்று

நம்பிக்கைப் பொறுப்புக்கள் கட்டளைச் சட்டத்தின் 112ஆம் பிரிவின் கீழ்ச் செய்யப்படும் சென்றடைதல் கட்டளைக்கான விண்ணப்பம்.

வழக்கு இல: நம்பிக்கைச் சொத்து/57

1.கனகரத்தினம் சண்முகநாதன்
ஊரெழு கிழக்கு, சுன்னாகம்

2.நடேசன் கண்ணலிங்கம்
ஊரெழு கிழக்கு, சுன்னாகம்

3.துரைஐயா விக்னேஸ்வரன்
ஊரெழு கிழக்கு, சுன்னாகம்

மூவரும் முறையே தலைவர், செயலாளர், பொருளாளர், ஊரெழு ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய நிர்வாகசபை.

மனுதாரர்கள்

11.12.2009ஆம் திகதி

மேற்குறித்த மனுதாரர்கள் இதன் பின் குறித்த 1ஆம், 2ஆம் ஆதன அட்டவணைகளில் விவரித்த ஆதனங்களும் அவைக்குச் சேர்ந்தவைகளும் ஊரெழு ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலயத்துக்கு சொந்தமும் ஆட்சியுமுடைய ஆதனங்கள் என்றும் இவற்றை நிர்வகிக்க குறித்த நிர்வாக சபைக்கு சென்றடைதல் கட்டளை (VESTING ORDER) வழங்க வேண்டும் என்று நம்பிக்கை பொறுப்புக் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 112 உப பிரிவு 1இன் கீழ் மனு தாக்கல் செய்துள்ளமையால் குறித்த ஆதனங்கள் தொடர்பாக எவராவது உரிமை கோரின் அவர்கள் இந்நீதிமன்றில் 18.12.2009ஆம் திகதி காலை 9 மணிக்குத் தோன்றி தமது உரிமைக் கோரிக்கையை சமர்ப்பிக்க வேண்டும் என்று இப்பகிரங்க அறிவித்தல் வெளியிடப்படுகிறது.

மன்று கட்டளைப்படி

து.சிறீமோகன்
பதிவாளர்
மாவட்ட நீதிமன்று
யாழ்ப்பாணம்.

1ஆம் ஆதன அட்டவணை

வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் வலிகாமம் கிழக்குப் பகுதி, கோப்பாய் கோவிற்பற்று, ஊரெழு இறை, ''மடத்துவாசல்'' நில.பர 19 குளி 10.017 உம் ஆலயமும் கல்யாண மண்டபமும் கிணறும் அதற்குள் அமைந்துள்ள கிராம அபிவிருத்திச் சங்க மண்டபம் இதற்கு எல்லை, கிழக்கு பலாலி வீதி வடக்கு நாகரத்தினம் தவராசா, இந்து மனைவி ஜெயமணிக்கும் மறு பெயருக்கும் உரிய ஆதனங்கள் மேற்கு இராசையா மகேந்திரன் நாகரத்தினத்தின் உரிமைக்காரர் என்பவர்களின் ஆதனமும் ஒழுங்கை முகப்பும். தெற்கு வலிகாமம் கிழக்கு ப.நோ.கூட்டுறவுச் சங்கத்தின் ஆதனம். இதடங்கலும் இது நில அளவையாளர் S.நிர்மலேந்திரன் அவர்களால் 14.09.2007ஆம் திகதி 937ஆம் இலக்கத்தில் அளந்து வரையப்பட்டுள்ள படத்தில் துண்டு 01 எனக் காட்டப்பட்டுள்ளது.

2ஆம் ஆதன அட்டவணை

வட மாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் வலிகாமம் கிழக்குப் பகுதி, கோப்பாய் கோவிற்பற்று, ஊரெழு இறை.

''தோப்ப சிதைவு கொடுந்தாப்புலமும் மறு பிரிவுகளும்'' நில.பர 29குளி 5 4/3 உம் கிழக்கு எல்லையில் உள்ள கிணற்றில் மேற்கு அரை வாசிப்பங்கும் இது நில அளவையாளர் S.நிர்மலேந்திரன் அவர்களால் 12.09.2007ஆம் திகதி 937ஆம் இலக்கத்தில் அளந்து வரையப்பட்டுள்ள படத்தில் துண்டு 01 எனக் குறித்த படி நில.பர 28 குளி 13.274 இதற்கு எல்லைகள். கிழக்கு பசுபதி இராசேந்திரமும் மனைவி தயாநிதியும் கணபதி இராசையா மனைவி சரோஜாதேவியும், சுந்தர்ராசா மனைவி புஸ்பமலர் என்பவர்களின் ஆதனம் வடக்கு ஒழுங்கை மேற்கு சுந்தரம் நித்தியானந்தனுக்கும் மறுபெயருக்குமுரிய ஆதனம் தெற்கு ஐயாத்துரை மகேந்திரமும், சின்னத்தம்பி தவநாயகம் என்பவர்களின் ஆதனம் இதடங்கலும்.

து.சிறீமோகன்
பதிவாளர்
மாவட்ட நீதிமன்று
யாழ்ப்பாணம்.

வரைவு
மனுதாரரின் சட்டத்தரணி
க.சிவசுப்பிரமணியம். (91452)

## வீதி விளக்குகள் பொருத்தப்படாமையால் மக்கள் சிரமம்

வீதி விளக்குகள் பொருத்தப்படாமையினால் நாவாந்துறை வடக்குப் பகுதியில் பிரதான வீதி மற்றும் குறுக்கு வீதிகள் இரவில் இருளில் மூழ்கிக் காணப்படுகின்றன.

இதனால் இப் பிரதான வீதியூடாகவும் குறுக்கு வீதிகளூடாகவும் பயணம் செய்வதில் அப்பகுதி மக்கள் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

இந்தப் பகுதிகளில் மின் விளக்குகள் நீண்ட காலமாகப் பொருத்தப்படவில்லையெனவும் எனவே அவற்றை விரைவில் பொருத்தி இரவில் மக்கள் அச்சம் இன்றி நடமாடுவதற்கு ஆவன செய்யுமாறும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் மக்கள் கோரியுள்ளனர். (50-23)

## மரண அறிவித்தல்கள்



### சுப்பிரமணியம் இராசமணி

நுணாவில் மேற்கைப் பிறப்பிடமாகவும், கனடாவை வதிவிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் இராசமணி 12.12.2009 சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற ஜெயிலர் சுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும், சுகந்தி (கனடா), சுமதி (கனடா), ஜனனி (கனடா), ஜனேந்திரன் (கனடா), சுபாஜினி (கனடா), ஐங்கரன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயாரும், சற்குண்ராசா, ரங்கநாதன், சிவகுமார், தவச்செல்வம் மற்றும் லலிதா, சசி ஆகியோரின் அன்பு மாமியாரும், ஷாரனா, ஷாரூபன், சிந்துஜன் ஆகாஷினி, ஜெனிசா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.12.2009) செவ்வாய்க்கிழமை கனடாவில் நடைபெறும். அன்றைய தினத்தில் அன்னாரின் நுணாவில் இல்லத்தில் துக்கம் அனுஷ்டிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

நுணாவில் மேற்கு. (சி/563259) தகவல்:சு.பூபாலசிங்கம்J.P.



### ஆசை குணசிங்கம்

கலைவாணி வீதி, சித்தங்கேணியைச் பிறப்பிடமாகவும், ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட ஆசை குணசிங்கம் (12.12.2009) சனிக்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆசை - இராசமணி தம்பதியரின் அன்பு மகனும், சறோஜினிதேவியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற கந்தையா மற்றும் சற்குணம், காலஞ்சென்ற இராஜேஸ்வரி மற்றும் குணசேகரர் (காந்தி) ஆகியோரின் பாசமிகு சகோதரரும், காலஞ்சென்ற குணாளினி மற்றும் கிரிதரன் (கனடா), குமணன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஜீவாகரன், சர்மிலா (கனடா), ஜனா (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், சூரியா, விபுலன், ஜெருசா (கனடா), யோசுவா (கனடா), குணா (கனடா) ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் ஜேர்மனியில் நடைபெறும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: மனைவி குடும்பத்தினர்.

தியேட்டரடி, சங்கானை. (91454)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



### அமரர் சௌபாக்கியவதியம்மா குமாரசாமி (கதிர்மலர்)

தோற்றம்: 23★04★1930 மறைவு:15★11★2009

மாதம் ஒன்று சென்றதம்மா
ஆறவில்லை எம் துயரம்
அன்புடன் எமைக் காத்து
அறிவுரைகள் பல கூறி
பண்புடன் எமை வளர்த்துப்
பாரினில் எமை உயர வைத்தீர்
ஆயிரம் உறவுகள் இருந்தென்ன
அம்மா உன் அன்புபோல் வருமா?
கண்ணீரில் நாம் தோய
எமைப்பிரிந்து சென்றீரோ
என்றும் உமை இதயத்தில் சுமந்திருப்போம்.

கடந்த (15.11.2009) அன்று இறைபதம் அடைந்த எமது அன்புத் தெய்வத்தின் மரண நிகழ்வில் பங்குபற்றியோருக்கும் தொலைபேசி மூலம் துயர் பகிர்ந்தோருக்கும் மற்றும் அனைத்து வகையான உதவி புரிந்தவர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவிப்பதோடு, இன்று (15.12.2009) செவ்வாய்க்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும்கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கணவர் - ஆ.குமாரசாமி
(ஓய்வுபெற்ற இலங்கை காப்புறுதிக் கூட்டுத் தாபன உத்தியோகத்தர்)
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

இல.8(20) பீ.ஏ.தம்பிலேன்,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.
தொ.பே.: 222 6194

(91453)


## வீடு விற்பனைக்கு

கல்வியங்காடு,3ஆம்கட்டை,பருத்தித்துறை வீதியிலிருந்து 25m தூரத்தில் கலைமணி வீதியில் சுற்றிலும் மதிலால் சூழப்பட்ட 4 அறைகளைக் கொண்டதும், நவீன வசதிகளுடனும் (மோட்டார் ... லைன் கராஜ்) பயன்தரு மரங்கள் சூழ்ந்ததுமான 2¼ பரப்பளவில் உள்ள பெரிய வீடு விற்பனைக்குண்டு.

தொடர்பு:- 0776624500
0776660400 (91455)

## காணி விற்பனைக்கு

முதலாம் குறுக்குத் தெருவில் ஆஸ்பத்திரி வீதிக்கு மிக அண்மையில் இல.17இல் அமைந்துள்ள கடை அல்லது களஞ்சியம் அமைக்கக் கூடிய இடம் 16.5குழி காணி விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு:
0779439813 077 9382868 (91457)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நல்லை ஆதீனத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற சிவத்தமிழ் வித்தகர் சிவமகாலிங்கத்தின் 'ஞான தீபம்' நூல் வெளியீட்டு விழாவில் எடுக்கப்பட்ட படங்கள் இவை.
நீர்வேலி கந்தசுவாமி கோயில் பிரதம குரு இ.சுவாமிநாதக்குருக்களிடம் இருந்து ஈஎஸ்.பி. நிறுவன உரிமையாளர் பி.நாகரத்தினம் முதலாவது பிரதியைப் பெறுவதையும் நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் சிவமகாலிங்கத்துக்கு ஆசி வழங்குவதையும் நிகழ்வின் தலைவரும் இந்து நாகரிகத்துறைத் தலைவருமான கலாநிதி மா.வேதநாதன், பிரதம விருந்தி னராகக் கலந்துகொண்ட வைத்திய கலாநிதி சி.சிவன்சுதன் ஆகியோர் உரையாற்றுவதையும் படங்களில் காணலாம்.
(படங்கள்: லக்ஸ்மன்)

# வாக்களிக்க தேசிய அடையாள அட்டை இல்லாதவர்களுக்கு விசேட அடையாள அட்டைகள்

## கிராமசேவையாளர்களிடம் விண்ணப்பப்படிவங்கள்

யாழ்ப்பாணம்,டிசெ.15

அடுத்த வருடம் நடைபெறவிருக்கும் தேர்தல்களில் வாக்களிப்பதற்கு அடையாளத்தை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் இல்லாதவர்களுக்குத் தற்காலிக விசேட அடையாள அட்டைகள் வழங்கப்படவுள்ளன. கிராம சேவையாளர்களுடன் தொடர்பு கொண்டு அவற்றுக்கான விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளவும்.

யாழ்.அரச அதிபர் கே. கணேஷ் நேற்று இந்த அறிவுறுத்தலை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அரச அதிபர் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

வாக்களிப்பதற்கு அடையாள ஆவணங்கள் இல்லாதவர்களுக்கு 2010 ஆம் ஆண்டில் நடைபெறவுள்ள தேர்தல்களின் போது வாக்களிப்பதற்குத் தகைமை அளிக்கும் வகையில் தேர்தல் ஆணையாளரினால் ஏற்றுக்கொள்ளக்கூடிய தற்காலிக அடையாள அட்டைக்கான விண்ணப்பப் படிவங்கள் சகல பிரதேச செயலர்களுக்கும் தற்போது கையளிக்கப்பட்டுள்ளன.

எனவே, இவ்விசேட அடையாள அட்டைக்கு விண்ணப்பிக்கவுள்ளோர் உடனடியாக தங்கள் பிரிவுக் கிராம உத்தியோகத்தர்களுடன் தொடர்பு கொண்டு விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

வாக்களிப்பதற்கு தேர்தல்கள் ஆணையாளரினால் அனுமதிக்கப்பட்ட அடையாள ஆவணங்கள் வருமாறு:-

*ஆள்களைப் பதிவு செய்யும் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை.

*செல்லுபடியான வெளிநாட்டுக் கடவுச்சீட்டு.

*செல்லுபடியான சாரதி அனுமதிப் பத்திரம்.

*அரச சேவை ஓய்வூதிய அடையாள அட்டை.

*முதியோர் அடையாள அட்டை.

*ஆள்களைப் பதிவுசெய்யும் திணைக்களத்தினால் வணக்கத்துக்குரியவர்களுக்காக வழங்கப்பட்ட அடையாள அட்டை.

*2010 ஆம் ஆண்டில் நடத்தப்படும் வாக்கெடுப்புகளின்போது வாக்களிக்கும் நடவடிக்கைகளுக்காக ஆள்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட அடையாள அட்டை.

*தேர்தல் திணைக்களத்தினால் விநியோகிக்கப்பட்ட தற்காலிக அடையாள அட்டை. (ஒ-1)

# தேர்தல் திணைக்களச் செயலகத்திற்கு நேற்று முதல் விசேட பாதுகாப்பு

கொழும்பு, டிசெ.15

தேர்தல் திணைக்களச் செயலகத்திற்கு நேற்று முதல் விசேட பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதாகத் தேர்தல்கள் திணைக்களம் அறிவித்துள்ளது.

ஜனவரி மாதம் முடிவடையும் வரை இந்த விசேட பாதுகாப்பு அமுலில் இருக்கும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

தேர்தல் திணைக்களத்தின் பிரதான செயலகத்திற்கு முன்பாக பொலிஸ் சோதனை முகாம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இங்கு 15 பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். வெலிக்கடை பொலிஸார் இந்தச் சோதனை முகாமுக்கு பொறுப்பாகச் செயற்படுவர்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட இதுவரையில் 12 பேர் கட்டுப்பணம் செலுத்தியுள்ளதாகவும் தேர்தல் செயலகம் அறிவித்துள்ளது. (50)

# பிரான்ஸில் வட்டுக்கோட்டை தீர்மானத்திற்கு ஆதரவாக 30,936 வாக்குகள் பதிவு

பரிஸ், டிசெ. 15

பிரான்ஸில் 12 ஆம், 13 ஆம் திகதிகளில் 37 வாக்குச் சாவடிகளில் வட்டுக்கோட்டைத் தீர்மானத்தின் கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பு நடைபெற்றிருந்தது.

தற்போது கிடைத்த இறுதித் தகவலின்படி 31,148 வாக்குகளிக்கப்பட்டதாகவும் அதில் 30,936 வாக்குகள் ''ஆம்'' என வாக்களிக்கப்பட்டுள்ளது எனவும், 43 வாக்குகள் மட்டுமே ''இல்லை'' என வாக்களிக்கப்பட்டதாகவும் 169 வாக்குகள் செல்லுபடியற்றதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வரலாற்றுச் சாதனையை புரிந்து பிரான்ஸ் வாழ் புலம்பெயர் தமிழர்கள் மீண்டுமொரு முறை ஆணித்தரமாக சர்வதேசத்துக்கு ''தமிழீழமே இறுதித் தீர்வு'' என எடுத்துக்கூறியுள்ளனர்.

பிரான்ஸில் நடைபெற்றுள்ள இந்த வாக்கெடுப்பு மிகப்பெரும் வெற்றியடைந்துள்ளதை வாக்கெடுப்பின் முடிவுகளில் இருந்து அறியக்கூடியதாக இருப்பதாகவும் இது ஏனைய நாடுகளில் நடைபெறப் போகும் வாக்கெடுப்புக்கு முன் உதாரணமாக இருக்கும் எனவும் அவதானிகள் தெரிவித்துள்ளனர். (ஒ-சி)

# மின் அடுப்பில் தண்ணீர் கொதிக்க வைத்த போது மின்சாரம் தாக்கி இளம் கர்ப்பிணிப்பெண் மரணம்

யாழ்ப்பாணம்,டிசெ.15

தண்ணீரைக் கொதிக்க வைக்க மின் அடுப்பை(ஹீற்றரைப்) பாவித்தபோது மின்சாரம் தாக்கி இளம் குடும்பப்பெண் ஒருவர் மரணமடைந்துள்ளார். இந்தச்சம்பவம் நேற்றுப் பகல் 11.30 மணிக்கு இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தின்போது நீதிவான் முகாம், மல்லாகத்தைச் சேர்ந்த 20 வயதான காந்தசொரூபன் அர்ச்சனா என்பவரே மரணமடைந்துள்ளார். இவர் ஆறு மாதக் கர்ப்பிணிப் பெண் ஆவார்

இவரது சடலத்தை தெல்லிப்பழைப் பொலிஸார் யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைத்தனர்.

(ஒ-10-78)

# பாடசாலைக்கு நிதி ஒதுக்கீடு

யாழ்ப்பாணம்,டிசெ.15

அத்தியார் இந்துக் கல்லூரியின் வகுப்பறைக் கூரையைப் புனரமைப்பதற்கென பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழ் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் 50 ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-201-72)

# பெரும் துரோகம் இழைக்கப்பட்டு விட்டதாக இராணுவத் தளபதி ஜகத் சீற்றம்



கொழும்பு, டிசெ.15

இராணுவத்திற்கு சிலமணி நேரங்களின் முன்னர் பெரிய துரோகம் இழைக்கப்பட்டுள்ளது என இராணுவத் தளபதி லெப்டினண்ட் ஜெனரல் ஜகத் ஜெயசூரிய குற்றஞ்சாட்டியுள்ளார்.

இராணுவத் தளபதி, இந்தத் துரோகத்தை இழைத்தவர் யார் என்பது போன்ற விடயங்களை வெளியிடாவிட்டாலும், முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் சரத் பொன்சேகாவின் கருத்தையே அவர் இவ்வாறு விமர்சித்திருக்கலாம் எனப் பரவலாகக் கருதப்படுகின்றது.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தத்தில் பங்கெடுத்த படையினரைக் கௌரவிக்கும் நிகழ்வு நேற்று கொழும்பில் இராணுவத் தலைமையகத்தில் நடைபெற்றபோதே அவர்இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் குறிப்பிட்டுள்ளவை வருமாறு:-

பயங்கரவாதத்தை தோற்கடித்ததன் மூலம் இராணுவம் பெற்ற மகத்தான வெற்றிக்கு இப்போது சில மணி நேரங்களுக்கு முன்னர் துரோகமிழைக்கப்பட்டுள்ளது.

இலங்கை இராணுவத்திற்கு எதிரான குற்றச்சாட்டுகளைக் கடுமையாகக் கண்டிக்கிறேன்.

இந்தத் துரோகம் காரணமாக பாதுகாப்புப் படையினர் உற்சாகமிழக்கக் கூடாது. அல்லது கலக்கமடையக் கூடாது.

பயங்கரவாதத்தைத் தோற்கடிப்பது என்பது தனியொரு நபரால் சாதிக்கப்பட்ட விடயமல்ல.

இதில் சம்பந்தப்பட்ட சகல தரப்பினரினதும் கூட்டு முயற்சியால் சாத்தியமான விடயம் இது.

பயங்கரவாதிகளைத் தோற்கடிக்கப் பாதுகாப்புப் படையினர் கடந்த காலங்களில் பல முயற்சிகளை மேற்கொண்டனர். எனினும், உரிய அரசியல் தலைமைத்துவம் இல்லாததால் அந்த முயற்சிகள் வெற்றிபெறவில்லை.

எனினும், இம்முறை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மற்றும் பாதுகாப்புச் செயலாளரின் அரசியல் தலைமைத்துவமும் உதவியும் யுத்தத்தில் வெற்றி பெறுவதற்குப் பெருமளவிற்கு உதவின.

முன்னர், ஜெனரல் டென்ஸில் கொப்பேகடுவவும், விஜய விமலரட்ணவும் வடமராட்சி இராணுவ நடவடிக்கைகளை மேற்கொண்ட வேளை, பயங்கரவாதிகள் இப்போது இருப்பது போன்று அப்போதும் பலவீனமடைந்திருந்தனர்.

எனினும், பலவீனமான ஸ்திரமற்ற அரசியல் தலைமை காரணமாக அந்த வெற்றிகரமான நடவடிக்கை திடீரெனக் கைவிடப்பட்டது.

தற்போது அரசியல் தலைமைத்துவம், மக்கள் ஆதரவு, இராணுவத்தின் பலம் ஆகியவை காரணமாகவே முழு முயற்சியும் வெற்றியில் முடிந்தது.

உரிய அரசியல் தலைமைத்துவம் இல்லாவிட்டால், பயங்கரவாதத்தை அழித்திருக்க முடியாது என்பது எமக்குத் தெரியும்.

இராணுவத்தின் 60 வருட நிகழ்வில் நான், ஜனாதிபதியின் பெயர் வரலாற்றில் பொன் எழுத்துகளால் பதிக்கப்படும் எனத் தெரிவித்திருந்தேன். - இப்படி அவர் அங்கு குறிப்பிட்டுள்ளார். (ஒ-சி)

# மின்னிணைப்பு, நீர்க்குழாய் பொருத்துதல் இருபாலாரும் விண்ணப்பிக்க முடியும்

## தென்மராட்சி பிரதேச செயலர் அறிவிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.15

தென்மராட்சி பிரதேச செயலகத் தொழிற்பயிற்சிப் பிரிவினர் அடுத்த வருடம் நடத்தவுள்ள தொழிற்பயிற்சிகளுக்கென விண்ணப்பங்களைக் கோரியுள்ளனர். வீட்டு மின்னிணைப்பு, நீர்க்குழாய் பொருத்துதல், தையல் ஆகிய பயிற்சி நெறிகளுக்கே விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

வீட்டு மின்னிணைப்பு, நீர்க்குழாய் பொருத்துதல் ஆகிய பயிற்சி நெறிகளுக்கு ஆண், பெண் இருபாலாரும் தையல் பயிற்சிகளுக்கு பெண்களும் விண்ணப்பிக்கலாம். தையல் பயிற்சி நெறிக்கு நலன்புரி நிலையங்களிலிருந்து விடுவிக்கப்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த பெண்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

பிரதேசத்தைச் சேர்ந்த 18 வயதுக்கும் 25 வயதுக்குமிடைப்பட்டவர்கள் சுயமாகத் தயாரித்த விண்ணப்பத்தினை எதிர்வரும் 21 ஆம் திகதிக்கு முன்னர் நேரடியாகவோ அல்லது தபாலிலோ அனுப்பி வைக்குமாறு பிரதேச செயலர் செ.ஸ்ரீனிவாசன் அறிவித்துள்ளார். (ஒ-207)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கச்சதீவை இலங்கைக்குச் சொந்தமென்பதா? கிருஷ்ணாவை கடுமையாகக் கண்டிக்கிறார் ஜெயலலிதா!



சென்னை, டிச. 15

கச்சதீவு இலங்கைக்குச் சொந்தமானது என்று மத்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணா கூறியிருப்பதற்கு அ.தி.மு.க. பொதுச் செயலாளர் ஜெயலலிதா கண்டனம் தெரிவித்திருக்கிறார்.

கச்சதீவுப் பிரச்சினையில் முதல்வர் கருணாநிதிக்கு அக்கறை இல்லை என்றும் அவர் குற்றம் சாட்டியிருக்கிறார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

கச்சதீவு இலங்கைக்குச் சொந்தமானது என்று மத்திய அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா நாடாளுமன்றத்தில் பேசியிருப்பது வருத்தம் அளிப்பதாக உள்ளது. உண்மையிலேயே கச்சதீவு குறித்த விவரங்கள் அவருக்குத் தெரியுமா என்பது தெரியவில்லை.

அறியாமையின் அடிப்படையில்தான் 1974ஆம் ஆண்டு கச்சதீவு இலங்கைக்கு தாரைவார்க்கப்பட்டது.

இதே அறியாமைதான் இன்றும் கூட நிலவுகிறது. மத்திய அரசின் இத்தகைய செயல் தமிழகத்திற்கு குறிப்பாக மீனவர்களுக்கு விபரீதமான விளைவுகளை ஏற்படுத்தும்.

இராமநாதபுரம் மன்னரின் சொத்தாக விளங்கியது கச்சதீவு. மீனவர்கள் படகுகளை உலரவைக்கவும், பிடிபட்ட மீன்களை இனவாரியாக வகைப்படுத்துவதற்கும் தமிழ்நாடு மற்றும் இலங்கையைச் சேர்ந்த மீனவர்கள் கச்சதீவைப் பயன்படுத்தி வந்தார்கள்.

புனித அந்தோனியாருக்கு அர்ப்பணம் செய்யப்பட்ட கத்தோலிக்க தேவாலயம் இந்த தீவில் உள்ளது. இரு நாடுகளையும் சேர்ந்த புனித பயணிகள் ஆண்டுதோறும் இந்த விழாவில் கலந்துகொள்வது வழக்கம். ஆனால் இதற்கு நேர்மாறான கருத்தை கிருஷ்ணா நாடாளுமன்றத்தில் தெரிவித்திருக்கிறார்.

தமிழக மீனவர்கள் கச்சதீவுப் பகுதியில் மீன் பிடிக்க விரும்பினால் இலங்கையுடன் ஓர் உடன்படிக்கை செய்து கொள்ள வேண்டும் என்று எஸ்.எம்.கிருஷ்ணா கூறியிருப்பதிலிருந்து, தமது அறியாமையையும், மீனவர்கள் மீதான அவமதிப்பையும் அவர் வெளிச்சம் போட்டுக் காட்டியிருக்கிறார்.

கச்சதீவு தாரை வார்க்கப்பட்டது தவறு மட்டுமல்ல, சட்டப்படியான பிழை என்று அ.தி.மு.க. கருதுகிறது.

தமிழக மீனவர்களைக் கருத்தில் கொள்ளாமல் கச்சதீவு காவு கொடுக்கப்பட்டிருக்கிறது. எனவே தாரை வார்க்கப்பட்ட கச்சதீவை இலங்கை அரசிடமிருந்து திரும்பப்பெற வேண்டும் என்று மத்திய அரசுக்கு உத்தரவிடக்கோரி அ.தி.மு.க. உச்சநீதி மன்றத்தில் வழக்குத் தொடர்ந்திருக்கிறது.

இந்தப் பிரச்சினை உச்சநீதிமன்றத்தின் முன் விசாரணையில்இருக்கும்போதே கச்சதீவு இலங்கைக்கு சொந்தமானது என்ற எஸ்.எம்.கிருஷ்ணாவின் இரக்கமற்ற அறிவிப்பு, துரதிருஷ்டவசமானது. இதைத் தடுக்கத் தேவையான நடவடிக்கையை எடுக்காத கருணாநிதியின் செயல் மிகவும் வருத்தத்திற்குரியது - என்றுள்ளது.

# ஈழத்தமிழர்கள் சம உரிமை பெற வேண்டி இராமேஸ்வரத்தில் ஞானவேள்வி யாகம்

## இந்து மக்கள் கட்சியின் ஏற்பாட்டில்நடைபெற்றது

இலங்கைத் தமிழர் சம உரிமை பெற்று தமிழ் ஈழம் மலர வேண்டி இந்து மக்கள் கட்சி சார்பில் இராமேஸ்வரத்தில் ஞான வேள்வி நடந்தது. இராமேஸ்வரம் சன்னதி தெருவில் நேற்றுமுன்தினம் இந்து மக்கள் கட்சி சார்பில் தமிழ் திருமுறை ஞான வேள்வி நடத்தப்பட்டது.

இலங்கைத் தமிழர் சம உரிமை பெற்று தமிழ் ஈழம் பெறவும், தமிழக மீனவர் வாழ்வுரிமைக் காக்கவும், கச்சதீவு மீட்கப்பட்டு இந்தியா வல்லரசு ஆகவும் வேண்டி நடத்தப்பட்ட வேள்விக்கு கோவை க்ங் காதர தேசிகர் சுவாமிகள் தலைமை வகித்து வேள்வியை தொடக்கி வைத்தார். விநாயகர் வழிபாட்டை தொடர்ந்து திருவிளக்கு வழிபாடு, நடராஜருக்கு சிறப்பு பூஜை செய்யப்பட்டது.

தொடர்ந்து திருமுறை இன்னிசையுடன் மகேஸ்வர பூஜைசெய்து வேள்வி நடந்தது. காமாட்சிபுர ஆதினம் சிவலிங்கேசுவர சுவாமிகள், பிள்ளையார் மடம் பொன் மணிவாசக அடிகளார், நாகதிபீடம் சிவசண்முக சுந்தர சுவாமிகள், கச்சியப்பர் மடாலயம் சடாட்சர வேல் சுவாமிகள், காளிதாஸ் சுவாமிகள், இந்து மக்கள் கட்சி மாநில தலைவர் அர்ஜூன் சம்பத் உட்பட பலர் கலந்து கொண்டனர். இலங்கை அகதிகள் பலரும் பங்கேற்றனர்.

# மீனவருக்கு எதிரான பிரேரணை வராதென அறிவித்த பிறகும் போராட்டம் தேவையா?

## எதிர்க்கட்சிகளிடம் முதல்வர் கேள்வி



சென்னை, டிச. 15

மீனவர்களுக்கு எதிரான பிரேரணை வராது என்று மத்திய அமைச்சர் சரத்பவார் அறிவித்த பிறகும் அ.தி.மு.க., இந்திய கம்யூனிஸ்ட்டு கட்சிகள் ஆர்ப்பாட்டம் நடத்தப்படும் என அறிவித்திருப்பது தேவையா - என்று முதல்வர் கருணாநிதி கேள்வி எழுப்பியுள்ளார்.

இதுகுறித்து முதல்வர்வெளியிட்ட கேள்வி - பதில் அறிக்கை வருமாறு -

மீனவர் வாழ்வுரிமையை பறிக்கும் பிரேரணையைக் கைவிடக்கோரி, இந்தியக் கம்யூனிஸ்ட் மாநிலச் செயலர் தா.பாண்டியன் வரும் 17, 18ஆம் திகதிகளில் ஆர்ப்பாட்டம் நடத்தப் போவதாக அறிவித்துள்ளாரே?

தோழமைக் கட்சியான அ.தி.மு.க., டில்லியில் ஆர்ப்பாட்டம் நடத்தவுள்ளபோது, இவர்கள் தமிழகத்திலாவது ஆர்ப்பாட்டம் நடத்த வேண்டாமா? மத்திய அமைச்சர் சரத்பவார் தெரிவித்த உறுதிமொழி பற்றி செய்திகள் வெளி வந்த பிறகும், ஆர்ப்பாட்டம் நடத்தப் போகின்றனர் என அறிவித்திருக்கின்றனர்.

மத்திய அமைச்சரே மீனவர் பிரேரணை குறித்துக் கூறிய பின்னரும் ஆர்ப்பாட்ட அறிவிப்புத் தேவையா என்பதை, அ.தி.மு.கவும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியும் சிந்தித்து முடிவெடுப்பது நல்லது. இப்பிரச்சினையில் தி.மு.கவும் கட்சி வேறுபாடின்றி குரல் கொடுக்கத் தயாராக உள்ளது - என்றுள்ளது.

# தெலுங்கானா தவிர மற்ற மாநிலங்களை பிரிப்பதற்கு மத்திய அரசு இடமளிக்காது

## அமைச்சர் பிரணாப் முகர்ஜி திட்டவட்டம்



டில்லி, டிச. 15

தனித் தெலுங்கானாவைத் தவிர்த்து வேறெங்கும் மாநிலப் பிரிவினையை அங்கீகரிக்க முடியாது. வேறு எந்த மாநிலத்தையும் பிரிக்கும் திட்டம் மத்திய அரசிடம் இப்போதைக்கு இல்லை - என்று மத்திய நிதியமைச்சர் பிரணாப் முகர்ஜி திட்டவட்டமாகக் கூறியுள்ளார்.

தனித் தெலுங்கானா மாநிலம் அமைக்கப்படும் என்று மத்திய அரசு அறிவித்ததை அடுத்து பல மாநிலங்களிலும் எங்களுக்கும் தனி மாநிலம் வேண்டும் என்ற கோரிக்கைகள் குவியத் தொடங்கியுள்ளன.

தமிழகத்திலிருந்து உத்தரப் பிரதேசம் வரை ஏகப்பட்ட மாநிலங்களில் புதிய மாநிலக் கோரிக்கைகள் கேட்க ஆரம்பித்துள்ளன.

உத்தரப்பிரதேசத்தை மேலும் 3 மாநிலங்களாக பிரிக்க வேண்டும் என்று முதல்வர் மாயாவதி கோரிக்கை விடுத்துள்ளார். தமிழகத்தில் தென்மாவட்டங்களைப் பிரித்து தனி மாநிலமாக்கினால் வளர்ச்சி ஏற்படும் என்று பா.ம.க. தலைவர் ராமதாஸ் குரல் எழுப்பினார்.

மேற்கு வங்காளம், குஜராத், மகாராஷ்டிரா, மத்திய பிரதேசம் ஆகிய மாநிலங்களிலும் தனி மாநில கோஷங்கள் எழுந்துள்ளன.

இதுகுறித்து பிரணாப் முகர்ஜி கூறியவை வருமாறு -

தனித் தெலுங்கானாமாநிலக்கோரிக்கை 60 ஆண்டு காலமாக உள்ளது. எனவேதான் மத்திய உள்துறை அமைச்சர் இதுதொடர்பான அறிவிப்புகளை வெளியிட்டார். அதைக் காரணம் காட்டி மற்ற மாநிலங்களிலும் பிரிவினை கேட்பது சரியாக இருக்காது. இதற்குப் பின்னர் மேலும் புதிய மாநிலங்களை உருவாக்கும் திட்டம் மத்திய அரசிடம் இல்லை. இதற்கு அனு மதிக்கவும் முடியாது - என்றார்.

# மக்கள் விரும்பினால் மாநிலங்களை பிரிக்கலாம் என்கிறார் அப்துல்கலாம்



இந்தூர், டிச. 15

மாநிலங்கள் வளர்ந்தால்தான் நாடு வளர்ச்சி அடைய முடியும். எனவே தனி மாநிலம் குறித்து அந்தந்த மாநில மக்கள் என்ன விரும்புகிறார்களோ அதைச் செய்வது நல்லது - என்று முன்னாள் குடியரசுத் தலைவர் அப்துல்கலாம் கருத்துத் தெரிவித்தார்.

மாநிலங்களைப் பிரிப்பதைக் காட்டிலும் மக்களின் விருப்பமே முக்கியம் என்றும் அவர் கூறியுள்ளார்.

இந்தூரில் நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்க வந்த அப்துல் கலாமிடம் தனி மாநில கோரிக்கைகள் பரவலாக அதிகரித்து வருவது குறித்து கேட்டபோது அவர் கூறியவை வருமாறு -

இந்த மாநிலத்தைப் பிரிக்கலாம், இதை பிரிக்கக் கூடாது என்று சொல்வது மிகவும் சிரமம். என்னைப் பொறுத்தவரை அந்தந்த மாநில மக்களின் கருத்து, விருப்பம் என்ன என்பதை பார்க்க வேண்டும். அவர்களின் விருப்பப்படியே செய்யவும் வேண்டும்.

ஏனெனில் மாநிலங்கள் வளர்ச்சி அடையும்வரை நாட்டின் வளர்ச்சி என்பது சாத்தியப்படாத ஒன்று. தனித்தனி மாநிலங்கள் வளர்ச்சியடைந்து வருவதுதான் நாட்டின் வளர்ச்சிக்கு அடையாளம்.


இதுபோன்ற சந்தர்ப்பங்களில் சாதாரண மக்களுக்கு நல்லதைச் செய்யவேண்டும் என்றால், இதை வளர்ச்சிக்கான அரசியலாக பார்க்கவேண்டுமே தவிர, அரசியலின் அரசியலாக அணுகக்கூடாது.

தற்போது நாட்டில் இளம் தலைவர்கள் நிறைய வருவது நல்லது. ஒட்டுமொத்த அரசியல் அமைப்பும் வளர்ச்சியை நோக்கி வீறுகொண்டு எழவேண்டும் என ஆசைப் படுகிறேன்.

இந்தியாவின் ஒட்டுமொத்த உற்பத்தி வளர்ச்சி விகிதத்தை 10 சதவீதமாக்கி அடுத்த 10 ஆண்டுகளிலும் அதைத் தக்க வைத்துக்கொண்டால், 2020 வல்லரசு என்ற இலக்கை எட்டிவிட முடியும் - என்றார்.

## இந்தியச் செய்திகள்

# நாடாளுமன்றத் தாக்குதல் நினைவுதினம் தியாகிகளுக்குத் தலைவர்கள் அஞ்சலி



டில்லி, டிச. 15

நாடாளுமன்றத் தாக்குதல் நினைவு நாளை முன்னிட்டு இந்தச் சம்பவத்தில் கொல்லப்பட்ட தியாகிகளின் படங்களுக்குத் தலைவர்கள் மலர் தூவி மரியாதை செலுத்தினர்.

நாடாளுமன்ற வளாகத்தில் கடந்த 2001 ஆம் ஆண்டு டிசம்பர் 13 ஆம் திகதி பயங்கர ஆயுதங்களுடன் 5 தீவிரவாதிகள் ஊடுருவி கண்மூடித்தனமாக தாக்குதல் நடத்தினர். பல மணி நேரம் நடந்த துப்பாக்கிச் சண்டைக்குப் பின்னர் 5 தீவிரவாதிகளும் கொல்லப்பட்டனர். தீவிரவாதிகள் சுட்டதில் ஒரு பெண் பொலீஸ் உட்பட 9 பேர் கொல்லப்பட்டனர். இந்தச் சம்பவத்தின் 8ஆம் ஆண்டு நினைவு நாள் நேற்றுமுன்தினம அனுசரிக்கப்பட்டது.

இதை முன்னிட்டு, நாடாளுமன்ற வளாகத்தில் நேற்றுமுன்தினம் நடந்த நிகழ்ச்சியில் தீவிரவாதிகளுடன் நடந்த சண்டையில் உயிர் தியாகம் செய்த 9 பேரின் படங்களும் அலங்கரிக்கப்பட்டு வைக்கப்பட்டிருந்தன. துணை ஜனாதிபதி ஹமீத் அன்சாரி, பிரதமர் மன்மோகன் சிங், சபாநாயகர் மீரா குமார், எதிர்க்கட்சித் தலைவர் அத்வானி, காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி உட்படப் பல தலைவர்கள் தியாகிகளின் படங்களுக்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்.

# குத்துவிளக்கேற்ற மறுத்தார் அமைச்சர்; கண்டித்து வெளியேறினார் ஜேசுதாஸ்!

சென்னையில் நடந்த இந்திய - ஜப்பான் வர்த்தக தொழில் கூட்டமைப்பு கருத்தரங்கின்போது குத்துவிளக்கேற்ற மத்திய ரயில்வே இணை அமைச்சர் இ.அகமது மறுப்பு தெரிவித்ததால் அதற்குக் கண்டனம் தெரிவித்து பிரபல பாடகர் ஜேசுதாஸ் விழாவிலிருந்து வெளிநடப்பு செய்தார்.

நேற்றுமுன்தினம் இந்திய - ஜப்பான் தொழில் கூட்டமைப்பு சார்பில் தேசிய கருத்தரங்கம் சென்னையில் நடந்தது. இதில் அகமது, ஜேசுதாஸ் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

விழாக்களின் தொடக்கத்தில் குத்துவிளக்கேற்றுவது வழக்கமாகும். அதன்படி அகமதுவிடம் குத்துவிளக்கை ஏற்றி விழாவைத் தொடங்கி வைக்குமாறு கேட்கப்பட்டது. ஆனால் அகமது மறுத்து விட்டார். முஸ்லிம் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் குத்துவிளக்கு ஏற்றமாட்டார்கள். அவர் இஸ் லாமியர் என்பதால் குத்துவிளக்கு ஏற்ற மறுத்து விட்டார் என்று தெரிவிக்கப்பட்டது. இதைக் கேட்டதும் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்ற ஜேசுதாஸ், அமைச்சருக்குக் கண்டனம் தெரிவித்து வெளிநடப்பு செய்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீனவர்கள் காலநிலை சீரின்மையால் இரு தினங்களாக வீடுகளில் முடக்கம்

## கடலுணவுக்குப் பெரும் தட்டுப்பாடு

வண்ணை,டிசெ.15

''சூறாவளி அபாயம் இருப்பதால் ஆழ் கடல் பிரதேசங்களுக்கு மீன் பிடிக்கச் செல்ல வேண்டாம்'' என்று குடாநாட்டு மீனவர்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டு வருகிறது.

கரையோரப்பகுதி மக்களுக்கு ஒலி பெருக்கி மூலம் இந்த எச்சரிக்கை அறிவித்தல் ஞாயிறு, திங்கட்கிழமைகளில் கடற்றொழில் சங்கங்களால் விடுக்கப்பட்டதாகக் கடற்றொழிலாளர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை கடந்த ஓரிரு தினங்களாக காலநிலை சீரின்மையால் பெரும்பாலான கடற்றொழிலாளர்கள் கடலுக்குச் செல்லாமல் வீடுகளிலேயே முடங்கி இருந்தனர்.

எனினும் குறிப்பிட்ட சிலர் மட்டும் கரையோரங்களுக்குச் சென்று பிடித்து வரும் மீன்கள் அதிகவிலை போவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மக்களின் தேவையைப் பூர்த்தி செய்ய முடியாத அளவுக்கே கடலுணவுகள் சந்தைக்கு வருவதால் கருவாடு மற்றும் நெத்தலி போன்றவற்றையே நுகர்வோர் வாங்கிச் செல்வதைக் காணக்கூடியாதாக இருந்தது.

இதேவேளை வடமராட்சிப் பிரதேசத்தில் கடும் காற்றுடன் கூடிய மழை பெய்து வருவதனால் மீனவர்கள் ஞாயிறு முதல் கடற்றொழிலுக்குச் செல்லவில்லை.

கடற்கொந்தளிப்பு, தாழமுக்கம் குறித்து பருத்தித்துறை, நெல்லியடிப் பொலிஸார் ஒலிபெருக்கி மூலம் பொதுமக்களுக்கு எச்சரிக்கை அறிவுறுத்தல்களை வழங்கினர் என்றும் -

இதனை அடுத்து வடமராட்சிப்பகுதி கடற்றொழிலாளர்கள் தொழிலுக்குச் செல்லவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-160-236)

# இடமாற்றங்கள் தற்காலிக நிறுத்தம்

யாழ்ப்பாணம்,டிசெ.16

வடக்கு மாகாண சபையின் இடமாற்றங்கள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளன.

எதிர்வரும் ஜனவரி மாதம் 26 ஆம் திகதி இடம்பெறவுள்ள ஜனாதிபதி தேர்தலை முன்னிட்டே இடமாற்றங்கள் நிறுத்தப்பட்டுள்ளன.

வடக்கு மாகாண ஆளுநர் ஜி.ஏ. சந்திரசிறி இதற்கான நடவடிக்கையை எடுத்துள்ளதுடன் பிரதம செயலாளர் ஊடாகசகல நிறுவனங்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (1-302)

# மீளக்குடியேறிய மக்களுக்காக கிளிநொச்சியில் பஸ் டிப்போ

கொழும்பு. டி.செ.15

கிளிநொச்சியில் மீள்குடியேற்றப்பட்ட மக்களின் போக்குவரத்துக்காகக் கிளிநொச்சி நகரில் இ.போ.ச. டிப்போவொன்று திறந்துவைக்கப்பட்டுள்ளதாக இலங்கை போக்குவரத்து சபை அறிவித்துள்ளது. முதற்கட்டமாக இந்த டிப்போவுக்கு 12 பஸ்கள் வழங்கப்பட்டுள்ளதாக இ.போ.ச. பிரதி பொது முகாமையாளர் பி.ஏ.லிவ்னிஸ் தெரிவித்தார். கிளிநொச்சி நகர பஸ் சேவை, கிளிநெச்சி- முழங்காவில், கிளிநொச்சி-பூனகரி ஊடாக நல்லூர்,கிளிநெச்சி -உருத்திரபுரம், கிளிநொச்சி-யாழ்ப்பாணம், கிளிநெச்சி- வவுனியா இடையிலான பஸ் சேவைகள் முதலில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதேவேளை மல்லாவியில் இபோ.ச.உப டிப்போவென்றும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் பிரதி பொது முகாமையாளர் கூறினார். (50)

# கீரிமலைக்கு அடியார்கள் செல்ல வசதியாக இன்று முதல் நேரடி பஸ் சேவை ஆரம்பம்

யாழ்ப்பாணம்,டிசெ.15

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயத்துக்கும் புனித தீர்த்தக் கரைக்கும் பொதுமக்கள் நேரடியாகச் சென்றுவர யாழ். பஸ்நிலையத்தில் இருந்து இன்றுமுதல் நேரடி பஸ் சேவை ஆரம்பமாக இருக்கின்றது.

இந்த பஸ் சேவை முற்பகல் 10 மணிக்கு யாழ். பஸ் நிலையத்தில் இருந்து ஆரம்பிக்கப்படும்

யாழ். அரச அதிபர் கே. கணேஷ் இத் தகவலை வெளியிட்டுள்ளார்.

தேசிய அடையாள அட்டையுடன் காலை 9 மணிக்கு யாழ். பஸ் நிலையத்தில் பிரசன்னமாகிப் பயணிப்பதற்கு தயாராக இருக்க வேண்டும் என்று அரச அதிபர் தெரிவித்தார்.

எவ்வித சோதனை நடவடிக்கைகளுக்கும் முகம் கொடுக்காது, சுதந்திரமாகக் கீரிமலைக்குச் சென்று வழிபட இன்று முதல் அடியார்கள் அனுமதிக்கப்படுவர் என்று ஜனாதிபதியின் ஆலோசகர் பஸில் ராஜ பக்ஷ தெரிவித்தார் எனநேற்று 'உதயன்' செய்தி வெளியிட்டிருந்தது தெரிந்ததே. (ஒ-1)

# அரச ஊடகங்களுக்கு எதிராக பொன்சேகா உயர்நீதிமன்றில் மனு

கொழும்பு, டிசெ. 15

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான பிரசாரங்கள் மற்றும் செய்திகள் வெளியிடும் விடயத்தில் அரச ஊடகங்கள் நீதி, நியாயமாகச் செயற்படும் வகையில் அவற்றுக்குரிய வழிகாட்டு விதிகளை வழங்கி, அவற்றைக் கடைப்பிடிக்குமாறு உத்தரவிடும்படி கோரி, அத்தேர்தலில் எதிரணியின் பொது வேட்பாளராகப் போட்டியிடும் ஜெனரல் சரத் பொன்சேகா நேற்று உயர் நீதிமன்றத்தில் ஓர் அடிப்படை உரிமை மீறல் மனுவைத் தாக்கல் செய்திருக்கின்றார்.

அரச ஊடகங்களான ரூபவாஹினி, ஐ.ரி.என். மற்றும் 'லேக் ஹவுஸ்' ஆகியவை தொடர்பில் உரிய வழிகாட்டுதல்களை விதிக்கும்படியும் -

இவை, ஜனாதிபதித் தேர்தல் சமயத்தில் பக்கச் சார்பாகவும், பாரபட்சமான முறையிலும், அரசுத் தரப்பு வேட்பாளருக்கு மட்டுமே ஆதரவாகவும் செயற்படுகின்றன என்றும் -

இப்படி அரச ஊடகங்கள் அதிகார அழுத்தங்களுக்கு அடிபணிந்து தவறாக நடக்கின்றமை நீதியானது அல்ல என்றும் -

அவர் தமது மனுவில் தெரிவித்திருக்கின்றார்.

நீதி அமைச்சின் செயலாளர் உட்படப் பலர் இந்த மனுவில் எதிர்மனுதாரர்களாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

# பருத்தித்துறையில் மீளக்குடியமர்ந்த மக்களுக்கு இதுவரை நிவாரணம் இல்லை

வடமராட்சி,டிசெ.15

நலன்புரிநிலையங்களில் இருந்து வடமராட்சி வடக்கு, பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் மீளக்குடியமர்ந்தவர்களுக்கு இதுவரை மீள்குடியமர்வு நிவாரணம் எதுவும் வழங்கப்படவில்லை எனப் புகார் தெரிவிக்கப்படுகிறது.

மீள்குடியேற்றத்திற்கென முதலில் 5 ஆயிரம் ரூபா உடனடிக் கொடுப்பனவாகவும், பின்னர் 20 ஆயிரம் ரூபா வங்கி மூலமாகக் கொடுப்பனவாகவும் வழங்கப்பட்டுவருகின்றன.

ஆனால் வடமராட்சி வடக்கில் மீள் குடியேறியவர்களுக்கு இக்கொடுப்பனவு எதுவும் வழங்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, வடமராட்சி தெற்கு, மேற்கு (கரவெட்டி) பிரதேச செயலகப் பிரிவிலும் வடமராட்சி கிழக்கு (மருதங்கேணி) பிரதேச செயலர் பிரிவிலும் மீளக் குடியமர்ந்தோர்களுக்கான மீள்குடியேற்ற நிவாரணக் கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது.

ஆனால் இந்த மக்களுக்கு உலர் உணவு நிவாரணம் இன்னமும் வழங்கப்படவில்லை எனப்புகார் தெரிவிக்கப்படுகிறது. (ஒ-236)

# சமனிலை நோக்கி நியூஸிலாந்து-பாக். மோதல்!

நேப்பியர், டிசெ.15

நியூஸிலாந்துக்கு எதிரான கடைசி டெஸ்ட் போட்டியில் நான்காம் நாள் ஆட்ட நேரமுடிவின்போது தனது இரண்டாவது இன்னிங்ஸிற்காக பாகிஸ்தான் அணி 4 விக்கெட்டுக்கள் இழப்புக்கு 347 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

பாகிஸ்தான்-நியூஸிலாந்து கிரிக்கெட் அணிகளுகிடையே தொடர் யாருக்கு என்பதை நிர்ணயிக்கும் 3ஆவது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி நேப்பியரில் நடந்து வருகிறது.

முன்னதாக, முதல் இன்னிங்ஸில் பாகிஸ்தான் 223 ஓட்டங்களைப் பெற்றது. பின்னர் துடுப்பெடுத்தாடிய நியூஸிலாந்து அணி, தனது முதல் இன்னிங்ஸிற்காக 471 ஓட்டங்களைக் குவித்தது.

தொடர்ந்து தனது இரண்டாவது இன்னிங்ஸை 248 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் பாகிஸ்தான் அணி ஆரம்பித்தது.

நேற்றுமுன்தினம் ஆட்ட நேரமுடிவின் போது விக்கெட் இழப்பின்றி 128 ஓட்டங்களைச் சேர்த்து நல்ல நிலை நோக்கிப் பயணித்துக்கொண்டிருந்தது.

இம்ரான் பார்ஹற் 55 ஓட்டங்களுடனும், சல்மான் பட் 66 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காது களத்தில் இருந்தனர்.

தொடர்ந்து நேற்று தனது ஆட்டத்தைத் தொடர்ந்த பாகிஸ்தான் அணி,

நேற்றைய ஆட்ட நேரமுடிவின்போது 4 விக்கெட்டுகள் இழப்புக்கு 347 ஓட்டங்களைக் குவித்தது.

நேற்றுமுன்தினம் களத்திலிருந்த சல்மான் பட் நேற்றைய ஆட்டத்தின் போது எந்த வித ஒட்டத்தையும் பெறாமல் ஆட்டமிழந்தார். இவர் அணிக்காக 66 ஓட்டங்களைச் சேர்த்திருந்தார். மறுபுறத்தில் நின்ற இம்ரான் பார்ஹற் மேலதிகமா 6 ஓட்டங்களைப் பெற்றவேளை - மொத்தமாக 61 ஓட்டங்களைச் சேர்த்து ஆட்டமிழந்தார்.

இவர்களுக்கடுத்தபடியாக சிறப்பாக ஆடிக்கொண்டிருந்த பைஸல் இக்பால் 67 ஓட்டங்களையும், அணித்தலைவர் மொகமட் யூசுப் 89 ஓட்டங்களையும் சேர்த்து ஆட்டமிழந்தனர்.

உமர் அக்மல் 48 ஓட்டங்களுடனும் மிஸ்பா உல் ஹக் 4 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காது களத்தில் உள்ளனர்.

நியூஸிலாந்து அணி சார்பாக பந்து வீச்சில், குப்தில் இரண்டு விக்கெட்டுகளையும், மார்டின், ஓ பிரையன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றின.

தற்போதைய நிலைவரப்படி பாகிஸ்தான் அணி 99 ஓட்டங்கள் முன்னிலையில் உள்ளது. இன்னும் ஒரு நாள் மட்டுமே எஞ்சியுள்ள நிலையில் - பாகிஸ்தான் வசம் இன்னும் 6 விக்கெட்டுகள் உள்ளன.

அத்துடன், இன்று இறுதி நாள் என்பதால் பாகிஸ்தான் அணி தனது ஓட்ட எண்ணிக்கையை ஓரளவேனும் பலமான நிலைக்கு இட்டுச் செல்லவேண்டிய நிலை காணப்படுவதால், இன்றைய நாளின் கூடுதலான நேரத்தை பாகிஸ்தான் அணியே ஆடும். எனினும் மதிய நேரத்துடன் விக்கெட்டுகள் சரியுமாயின் - 200 ஓட்டங்களைவிடக் குறைவாகப் பெறுமாயின் நியூஸிலாந்து அதிரடியாக ஆடி வெற்றி பெறக்கூடிய வாய்ப்பும் இருக்கிறது.

# இந்தியா-இலங்கை அணிகள் மோதும் முதலாவது ஒருநாள் போட்டி இன்று

## டோனிக்கு 'செக்' வைப்பாரா சங்கக்காரா?

ராஜ்கோட், டிசெ. 15

இந்தியா-இலங்கை அணிகள் மோதும் முதலாவது ஒரு நாள் போட்டி இன்று ராஜ்கோட்டில் நடக்கிறது.

இந்தியாவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை அணி, முதல் கட்டமாக டெஸ்ட் தொடரில் பங்கேற்றது. அந்தத் தொடரை இந்திய அணி 2-0 என கைப்பற்றியது.

அடுத்து நடந்த 'ருவென்ரி-20' தொடர் 1-1 என்ற கணக்கில் சமனிலையில் முடிந்தது.

இறுதியாக 5 போட்டிகளைக் கொண்ட ஒருநாள் தொடரில் இரு அணிகளும் மோதவுள்ளன.

முதல் போட்டி குஜராத்தில் உள்ள ராஜ்கோட்டில் இன்று காலை 9 மணிக்கு ஆரம்பமாகிறது. இன்றைய போட்டி நடைபெறும் சூழலில் ஏற்பட்டிருக்கும் குழப்ப நிலை காரணமாக அங்கு பலத்த பாதுகாப்புப் போடப்பட்டுள்ளது.

இன்று மோதவுள்ள இந்திய அணியில் ஷேவாக், கம்பீர், சச்சின், டோனி உள்ளிட்டோர் சிறப்பாக விளையாடி வருகின்றனர். இதனால், அணி வெற்றியுடன் ஆரம்பிக்கும் வாய்ப்பு உள்ளது. 'ருவென்ரி-20' தொடரில் ஓய்வு வழங்கப்பட்டிருந்த சஹீர் கான், ஹர்பஜன் சிங் ஆகியோரும் அணிக்குத் திரும்புவதால், பந்துவீச்சிலும் பலம் பெற்றுள்ளது இந்திய அணி.

இலங்கை அணியைப் பொறுத்தவரையில் சகலவிதத்திலும் இந்தியாவுக்குக் குறைந்த அணி அல்ல. அவர்களை வீழ்த்தி தொடர் வெற்றிகளைக் கூட பெறக் கூடிய பலத்துடன்தான் இலங்கை அணி உள்ளது. எனினும், இந்திய மண்ணில் நடைபெறுவதால் சற்றுப் போராடித் தான் வெல்ல முடியும்.

டெஸ்ட் தொடரில் ஏற்பட்ட தோல்விக்கு இலங்கை அணி பழிதீர்க்கும் நோக்கில் தான் ஒருநாள் தொடரில் களமிறங்குகிறது.

அதற்கு இலங்கை வீரர்களின் முழுப் பலமும் பயன்படுத்தப்படவேண்டும். இலங்கை வீரர்கள் அனைவரும் சிறப்பாகச் செயற்படும் பட்சத்தில் இன்றைய முதல் போட்டியை வெற்றியுடன் ஆரம்பிக்கமுடியும்.



தென்கிழக்காசிய நாடுகளுக்கிடையிலான விளையாட்டுப் போட்டி லாவோஸின் வியான்டையான் நகரில் நடைபெற்று வருகிறது. இதில் உசுஸ் போட்டியில் (சீன பாரம்பரிய விளையாட்டு) சாகசம் நிகழ்த்தும் லாவோஸ் வீராங்கனைகள்.

# விரைவில் களம் திரும்புவார் ஸ்ரீசாந்த்!

சண்டீகர், டிசெ.15

பன்றிக் காய்ச்சல் நோய்க்குள்ளாகிச் சிகிச்சை பெற்றுவரும் இந்தியக் கிரிக்கெட் அணியின் வேகப்பந்து வீச்சாளரான ஸ்ரீசாந்த் விரைவில் வீடு திரும்புவார் என்று வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர். இதன் மூலம் இலங்கையுடனான எஞ்சிய ஒருநாள் போட்டிகளில் விளையாடும் வாய்ப்பைப் பெறுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கைக்கு எதிரான 2ஆவது 'ருவென்ரி-20' போட்டியில் பங்கேற்பதற்காக ஸ்ரீசாந்த் சண்டீகர் சென்றிருந்தார். அப்போது அவருக்கு காய்ச்சல் ஏற்பட்டது. அது பன்றிக் காய்ச்சலுக்குரிய அறிகுறியாக இருந்தமையால் அவர் உடனடியாக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். சோதனையின் பின்னர் அவருக்கு பன்றிக் காய்ச்சல் தொற்றியிருப்பது உறுதியாகியிருந்தது.

தற்போது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவரும் ஸ்ரீசாந்த் விரைவில் குணமடைந்துவிடுவார் என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். மக்களின் கருத்தை சரத்பொன்சேகாவுக்கு விளக்கமாக எடுத்துரைத்தார் மனோ கணேசன்

கொழும்பு, டிச. 15

மனோ கணேசன் எம்.பி. தலைமையிலான ஜனநாயக மக்கள் முன்னணியின் தூதுக்குழுவினர் நேற்று முற்பகல் எதிர்க்கட்சிப் பொது வேட்பாளர் சரத் பொன்சேகாவைச் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளனர் என அக்கட்சி விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். மக்கள் தெரிவித்த கருத்துக்களை ஜெனரல் பொன்சேகாவுக்கு மனோ கணேசன் எடுத்துரைத்தார் எனக் கூறப்பட்டது. இச்சந்திப்புத் தொடர்பாக அக்கட்சியின் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

கொழும்பில் நடைபெற்ற இப்பேச்சின்போது சரத் பொன்சேகா ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெறும் பட்சத்தில் அதனையடுத்து நாடாளுமன்றத் தேர்தல் நடைபெற்று புதிய அரசு பதவியேற்கும் வரையான இடைப்பட்ட காலத்திற்குள் உடனடியாகக் கவனத்தில் எடுக்கப்பட வேண்டிய விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

இவ்விடயங்களில் தமிழ் மக்கள் தொடர்பிலான உடனடிப் பிரச்சினைகளான தடுத்துவைக்கப்பட்டுள்ள கைதிகள், காணாமல் போனோர், போராளிகளின் புனர்வாழ்வு, யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்தவர்கள், 1983 முதல் உள்நாட்டிலும், வெளிநாட்டிற்கும் இடம்பெயர்ந்தோர் மற்றும் அவர்களது மீள்குடியேற்றம், உயர் பாதுகாப்பு வலயங்கள் காரணமாக இடம்பெயர்ந்தோர் மற்றும் அவர்களது நிலங்கள் மீளக் கையளிக்கப்படல், யாழ். முஸ்லிம் அகதிகளின் மீள் குடியேற்றம், மலையகத் தோட்டத் தொழிலாளர்களின் வாழ் நிலைமைகள் ஆகியவை சம்பந்தமாக விரிவாகப் பேசப்பட்டது.

குறிப்பாக மனோ கணேசன் எம்.பி. கடந்த வார இறுதியில் யாழப்பாணம் சென்றபொழுது அங்கு அவரைச் சந்தித்த யாழ். பல்கலைக்கழக சமூகத்தைச் சார்ந்த விரிவுரையாளர்கள், மாணவர்கள், யாழ். வணிக கழகத்தினர், யாழ். கத்தோலிக்க பேராயர் மற்றும் சிவில் சமூகப் பிரதிநிதிகள், நல்லை ஆதீன முதல்வர் மற்றும் இந்து சமூகத்தினர், யாழ். இஸ்லாமிய பள்ளிவாசல் சபையினர், அரச சார்பற்ற நிறுவனத்தினர், ஊடகவியலாளர்கள் ஆகியோர் தெரிவித்திருந்த கருத்துகள் சரத் பொன்சேகாவிடம் தெரிவிக்கப்பட்டன. பொது வேட்பாளர் சரத் பொன்சேகாவிற்கும், மனோ கணேசன் எம்.பிக்கும் இடையில் நடைபெற்ற இப்பேச்சு தொடர்பிலான விரிவான அறிக்கை பின்னர் வெளியிடப்படும். - எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-சி)

# மலையக மக்கள் முன்னணியின் முடிவு இன்னும் ஓரிரு நாள்களில்

கொழும்பு, டிச. 15

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமது கட்சி யாரை ஆதரிப்பது என்பது பற்றி இன்னும் ஓரிரு நாள்களில் அறிவிக்கப்படும் என மலையக மக்கள் முன்னணியின் தலைவர் பெ.சந்திரசேகரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் கூறியவை வருமாறு:-

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் யாரை ஆதரிப்பது என்பது குறித்து நாங்கள் பிரதான இரண்டு தரப்பினரிடமும் பேச்சு நடத்தவுள்ளோம்.

அந்த வகையில் நேற்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை சந்தித்துப் பேச்சு நடத்தினோம். எதிர்க்கட்சியினருடனும் விரைவில் எமது கோரிக்கைகளை முன்வைத்துப் பேசுவோம். இரு தரப்புக் கருத்துகளையும் உள் வாங்கிய பின்னர், அதனடிப்படையில் இன்னும் இரண்டொரு தினத்தில் முடிவை முன்வைப்போம் - என்றார் அவர்.

# வடக்கில் மீள்குடியமர்த்தப்பட்டவர்கள் வாக்களிக்க விசேட வேலைத்திட்டம்

கொழும்பு, டிச. 15

நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் வடக்கில் மீள்குடியமர்த்தப்பட்ட மக்கள் வாக்களிப்பதற்கென விசேட வேலைத் திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது - என்று வவுனியா மாவட்ட அரச அதிபர் தெரிவித்தார்.

இந்த விசேட வேலைத் திட்டமானது இடம்பெயர்ந்து முகாம்களில் தற்போதுள்ள மக்களையும், மீள்குடியமர்த்தப்பட்ட மக்களையும் இலக்காக கொண்டே முன்னெடுக்கப்பட்டுள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

இதன்போது, வாக்களிப்பு தினத்தில் குளறுபடிகள் ஏற்படாமல் தடுப்பதற்கும், மக்களின் பாதுகாப்பை உறுதிபடுத்துவது தொடர்பாகவும் அதிக கவனம் செலுத்தப்பட்டுள்ளது எனவும் வவுனியா மாவட்ட அரச அதிபர் மேலும் தெரிவித்தார்.

# இதுவரை 12 வேட்பாளர்கள் கட்டுப்பணம் செலுத்தினர்

கொழும்பு, டிச.15

எதிர்வரும் ஜனவரி 26ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்காக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உட்பட 12 வேட்பாளர்கள் இதுவரை கட்டுப்பணம் செலுத்தியுள்ளனர் என தேர்தல் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் சார்பில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கடந்த டிசம்பர் 7ஆம் திகதி கட்டுப்பணத்தை செலுத்தியுள்ளார்.

மேலும் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதற்காக எதிர்க்கட்சிகளின் சார்பில் சரத் பொன்சேகா உட்பட, சிறிதுங்க ஜயசூர்ய, விக்கிரமபாகு கருணரட்ண, எம்.டி திமினிமுல்லா, ஜெ.ஏ.பீட்டர் நெல்சன், சரத் மமமேந்திரா, பத்தரமுல்லே சீலரன தேரோ, அசல சுரவீர, ஏ.பி.எஸ்.ஏ.லியனகே, விஜய் டயஸ் மற்றும் ஐ.எம்.இலியாஸ் ஆகியோர் கட்டுப்பணத்தை செலுத்தியுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

எதிர்வரும் டிசெம்பர் 18ஆம் திகதி நண்பகல் வரை கட்டுப்பணம் செலுத்தலாம் என்றும், அதன் பின் கட்டுப்பணம் எதுவும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது என்றும் தேர்தல் ஆணையகம் தெரிவித்துள்ளது.

## திருகோணமலைக்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திடீரென கடல்நீர் புகுந்ததால் அச்சமடைந்த மக்கள் உடைமைகளை அப்புறப்படுத்துவதிலும், சின்னஞ்சிறுசுகளைப் பாதுகாப்பான இடங்களுக்குக் கூட்டிச் செல்வதிலும் ஈடுபட்டிருந்தனர்.

மண் அணைகளை அமைத்து மேலும் கடல்நீர் உள்புகாதவண்ணம் தடுப்பு நடவடிக்கையில் பிரதேச மக்கள் தீவிரமாக செயலில் இறங்கி இருந்தனர்.

கடற்கரை ஓரமாக நிறுத்தப்பட்டிருந்த வள்ளங்களை எல்லாம் இழுத்துவந்து வீதி ஓரங்களில் வைத்துள்ளனர்.

தொடர்ந்து மழை பெய்யும் பட்சத்தில் கரையோரப்பகுதி மக்களுக்கு மேலும் பாதிப்புகள் ஏற்படலாம் என்று அச்சம் தெரிவிக்கப்பட்டது.

கிராமங்களை அழிவில் இருந்து பாதுகாக்கும் நோக்குடன் கடற்கரைக்கு அப்பால் உள்ள மக்களும் மண் அணைகளை அமைக்கும் பணிகளுக்கு ஒத்தாசை புரிந்து வருகின்றனர் என்று எமது திருகோணமலைச் செய்தியாளர் தெரிவித்தார். (ஒ-1-150)

## மஹிந்தவையும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆரம்பத்திலிருந்தே இலங்கை இராணுவம் யுத்தக் குற்றங்களை இழைக்கின்றது என்பது எமக்குத் தெரியும்.

எனினும், சர்வதேச சமூகம் இதற்கான சாட்சியங்கள் உள்ளனவா என எம்மைக் கேட்டது.

தற்போது இராணுவத்தின் தலைமையதிகாரியிடமிருந்தே இதற்கான ஆதாரங்கள் வெளியாகியுள்ளன.

இலங்கை ஜனாதிபதியையும் சகாக்களையும் நபர்களையும் மனித குலத்திற்கு எதிரான குற்றச்செயல்களுக்காக விசாரணை செய்வதற்கு வேறு என்ன ஆதாரங்கள் உலகத் தலைவர்களுக்கும், சர்வதேச சமூகத்திற்கும் தேவை?

மஹிந்த ராஜபக்ஷ யுத்தக் குற்றவாளி. அவரை அது குறித்த விசாரணைகளுக்காக ஹேக் நீதிமன்றிற்குக் கொண்டு செல்லவேண்டும்.

இலங்கையைப் போன்று எந்த நாடும் ஜெனிவா பிரகடனத்தினை அப்பட்டமாக மீறியதில்லை. சரணடைந்த எதிரியை எந்த நாடும் கொலை செய்ததில்லை. சேர்பியாவின் மிலோசிவிக், சதாம் ஹுசைன் போன்றவர்களைப் போல மஹிந்த ராஜபக்ஷவையும் சர்வதேச சமூகம் கையாள வேண்டும்.

இலங்கை ஜனாதிபதியை விசாரணை செய்யுமாறு கோரி புலம்பெயர்ந்த தமிழர்கள் சர்வதேச நீதிமன்றிற்கும் ஐ.நாவிற்கும் உலகத் தலைவர்களுக்கும் மனு சமர்ப்பிக்கவுள்ளனர். - எனத் தெரிவித்தார் அவர். (அ-சி)

## பொன்சேகா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆலோசிக்கப்பட்டு சரத் பொன்சேகா மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என அரசின் பாதுகாப்புப் பேச்சாளர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார். (அ-சி)

## யுத்த காலத்தின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேச சட்டங்களுக்கு அமைவாகவே யுத்தம் முன்னெடுக்கப்பட்டது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

வார இறுதிப் பத்திரிகை ஒன்றுக்கு அளித்த செவ்வி திரிபுபடுத்தப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த ஆண்டின் மே மாதம் 17, 18 மற்றும் 19 ஆம் திகதிகளில் விடுதலைப் புலிகளின் சிரேஷ்ட தலைவர்கள் எவரும் சரணயடைக் கோரவில்லை. யுத்தம் தொடர்பான சகல பொறுப்புகளையும் நானே ஏற்றுக்கொள்கிறேன், எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இராணுவத்தைக் காட்டிக்கொடுக்க மாட்டேன்- என்றும் அவர் தெரிவித்தார். (அ-சி)

## ஐ.தே.கவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அருகில் விழுந்து வெடித்துள்ளது. இந்தத் தாக்குதலில் வீட்டில் இருந்தவர்கள் எவருக்கும் காயம் ஏற்படவில்லை.

சம்பவம் நடைபெற்றபோது சசிதரனும் அவரது குடும்பத்தினரும் வீட்டில் இருந்துள்ளனர் எனவும் சம்பவம் குறித்து தாம் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர் எனவும் மட்டக்களப்புப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஜனாதிபதித் தேர்தல் நடைபெற உள்ள நிலையில் அரச தரப்பிற்கு ஆதரவான தரப்பினரால் இந்தக் கைக்குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கலாம் என சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது. (அ-சி)

## புயல் அபாயம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடரும் என்று கொழும்பு வளிமண்டலத் திணைக்களம் நேற்று மாலை நான்கு மணிக்கு வெளியிட்ட அறிக்கையில் விவரித்திருந்தது.

அந்த அறிக் கையில் தெரிவிக்கப்பட்டிருந்ததாவது -

தாழமுக்கம் காரணமாக, யாழ்ப்பாணம், திருகோணமலை, கிளிநொச்சி, வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, பொலநறுவ, அநுராதபுரம், மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களில் இடியுடன் கூடிய மழை இடைக்கிடையே பெய்யும். கடும் மழைவீழ்ச்சியும் அந்தப்பகுதிகளில் காணப்படும் சாத்தியம் உள்ளது.

இந்த மழை ஏனைய பகுதிகளுக்கும் பரவும் சாத்தியமும் உண்டு.

காலநிலை மாற்றங்கள் தொடர்பாக வடக்கு மக்கள் ஊடகங்கள் ஊடாக விடுக்கும் அறிவிப்புக்களை கேட்கவேண்டும் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

### அரச அதிபர் சுற்றறிக்கை

வானிலை எச்சரிக்கை தொடர்பாக யாழ். அரச அதிபர் கே. கணேஷ் சகல திணைக்களங்களுக்கும் நேற்று மாலை சுற்றறிக்கை ஒன்றை அனுப்பிவைத்துள்ளார்.

அதில் தற்போதைய காலநிலை குறித்து விவரிக்கப்பட்டிருந்ததுடன், கடல் கொந்தளிப்பாக இருக்கக்கூடும் என்றும், மீனவர்களைக் கடலுக்குச் செல்ல வேண்டாம் என்றும் எச்சரித்துள்ளார்.

உரிய முன்னேற்பாடுகளை மேற்கொண்டு ஏற்படக்கூடிய அனர்த்தங்கள், பாதிப்புகளில் இருந்து மக்களைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெச்சரிக்கையாக மேற்கொள்ளுமாறும் அரச அதிபர் திணைக்களத் தலைவர்களை அறிவுறுத்தியுள்ளார். (ஒ-1-151)

## சர்வதேச...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யுத்தத்தின் இறுதிக்கட்டத்தில் வெள்ளைக் கொடிகளை ஏந்தியவாறு அரசிடம் சரணடைய வந்த புலித் தலைவர்களைக் கொலை செய்யப் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ இராணுவத்தினருக்கு உத்தரவிட்டார் என்று ஜெனரல் சரத் பொன்சேகா கூறியுள்ளார்.

அவரது இந்தக் கூற்றை நாம் நிராகரிக்கின்றோம். புலித் தளபதிகள் எவ்வாறு கொல்லப்பட்டனர் என்று நாம் அறிய வேண்டிய தேவையில்லை.

### புலிகள் எந்த வகையிலேனும் கொல்லப்பட வேண்டியவர்களே

புலிகள் 30 வருடங்களாக இந்நாட்டை சீரழித்தார்கள். அவர்கள் எந்தவகையிலேனும் கொல்லப்படவேண்டியவர்கள். இறுதிக்கட்ட யுத்தத்தில் அது நடந்திருக்கின்றது. அவர்கள் எவ்வாறு கொல்லப்பட்டனர் என்பதை இந்நாட்டு மக்கள் அறியவேண்டிய தேவை இல்லை.

தேர்தலில் மக்களின் வாக்குகளைப் பெறுவதற்காக மக்களிடம் கருத்துகளைக் கூறும் உரிமை பொன்சேகாவுக்கு உண்டு.

ஆனால், அதற்காக இப்படியான விடயங்களையெல்லாம் மக்களிடம் கூறுவதன் மூலம் மக்ளிடமிருந்து வாக்குகள் கிடைக்கா. இந்த விடயங்களைக் கூறி பொன்சேகா பிரபாகரனின் தாய், தந்தையிடமா வாக்குகளைப் பெறப் போகின்றார்?

### சர்வதேசத்துக்கு வாய்ப்பாக அமையும்

இலங்கை அரசு மீது யுத்தக் குற்றச்சாட்டுகளைச் சுமத்தி சர்வதேச மட்டத்தில் விசாரணை நடத்த சர்வதேச நாடுகள் முற்படுகின்றன. இப்படியானதொரு சந்தர்ப்பத்தில் பொன்சேகா கூறும் இவ்வாறான கருத்துகள் சர்வதேசத்துக்கு வாய்ப்பாக அமைந்துவிடும்.

யுத்தக்குற்ற விசாரணையை நடத்துவதற்கு வசதியாக சரத்பொன்சேகாவை ஒரு சாட்சியாகப் பயன்படுத்த சர்வதேச நாடுகள் திட்டமிட்டுள்ளன. அவர் அந்நாடுகளின் கைப்பொம்மையாகச் செயற்படுகின்றார்.

இந்த ஜனாதிபதித் தேர்தலைபொட்டி சர்வதேச நாடுகள் இலங்கை மீதான சதித்திட்டத்தை இலகுவாக நடைமுறைப்படுத்தத் திட்டமிட்டுள்ளன. பொன்சேகாவின் பின்னணியில் இந்நாடுகள் உள்ளன.

இவ்வாறான சர்வதேச சதித்திட்டத்தை முறியடிப்பதற்காக இந்நாட்டு மக்கள் ஒன்றிணைந்து மஹிந்த ராஜபக்ஷவை மீண்டும் ஜனாதிபதியாக்க வேண்டும். - என்றார் அவர். (அ- சி)


S.L.A.S
கருத்தரங்கு
புதிய பிரிவு
இன்று (15.12) தொடக்கம் புதன் (23.12) வரை வார நாள் களில் காலை 9.00 மணி தொடக்கம் 2.00 மணிவரை யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புக் கள் பிரிவில் நடைபெறும்.

NEW SCIENCE CENTRE
Beacon, Jaffna.
PHYSICS
ஆசிரியர் திரு. ம. ஸ்பெல்மன் B.Sc
A/L 2010/2011
புலங்கள்
ஆரம்பம் 16.12.2009
10.30-12.30


## மரண அறிவித்தல்

### கார்த்திகேசு நடராசா

(ஓய்வு பெற்ற அதிபர், பண்ணாகம் மெய்கண்டான் ம. வி., தலைவர், விவசாய சம்மேளனம், அராலி தெற்கு)

சுழிபுரம் கிழக்கைப் பிறப்பிடமாகவும், அராலி தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட கார்திகேசு நடராசா நேற்று (14.12.2009) திங்கட்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஆலடி, அராலி தெற்கு,
வட்டுக்கோட்டை.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 15.12.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org